# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை இன்னா

பொழிவு - 10
குவிப்பு - 09
பக்கங்கள் - 20

விலை ரூபா 25.00
செப்ரெம்பர் - 2007

(ISSN 1800-2641)


THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com


### ஏனைய சமயத்தலைவர்களுடன் இணைந்து

# பேச்சுக்கள் மூலமான சமாதானத்தீர்வுக்கு உதவ நாம் தயார்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை ஜனாதிபதிக்குத் தெரிவிப்பு

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை ஆவணி மாதம் 21,23ம் திகதிகளில் கூடியபோது இந்த அறிவிப்பை ஜனாதிபதி மகிந்தராஜபக்சவிற்கு அனுப்பி வைத்தனர். தலைவர் மேதகு வியான்னி பெனான்டோ ஆண்டகை மற்றும் செயலர் மேதகு நோபட் அன்றாடி ஆண்டகை ஆகியோர் கையொப்பம் இட்ட மேற்படி அறிக்கையின் முழுவடிவத்தினையும் 7ம் பக்கத்தில் காணலாம்.




## ஒக்ரோபர் மாதம் திருச்செபமாலையின் மாதம்

*கேட்ட வரமளிக்கும் கீர்த்திபெற்ற சீமாட்டி*
*காட்டில் குடியிருக்கும் கருணையுள்ள என்தாயே!*
*பாட்டில் மலரெடுத்தேன், பாலோடு தேனெடுத்தேன்*
*நாட்டில் அமைதி என்ற நதியைத் திருப்பிவிடு.*


இளவாலை அமுது

## இலங்கை முழுவதிலுமிருந்து 300ற்கும் அதிகமான கத்தோலிக்க குருக்கள் பங்கெடுத்த குருக்களுக்கான தேசிய தியானம்

## National Retreat for Priests








தியானத்தை வழிநடத்திய
அருட்பணியாளர் அகஸ்ரீன் வல்லுாரான்

விபரங்கள் 3ம் பக்கம்

## மன்னார் மறைமாவட்டத்தில் ஐந்து பங்குகளைச் சார்ந்த மக்கள் முழுமையாக இடம்பெயர்வு

### இடம்பெயர்ந்த மக்களின் அவலங்கள் தொடர்கின்றன

மன்னார் மறைமாவட்டத்தில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற இராணுவப் படைநகர்வுகள் மற்றும் எறிகணை வீச்சுக்கள் காரணமாக ஐந்து பங்குகளைச் சேர்ந்த மக்கள் முற்றாக இடம்பெயர்ந்துள்ளனர்.

பண்டிவிரிச்சான், தட்சனா மருதமடு, அடம்பன், ஆட்காட்டிவெளி, அரிப்பு ஆகிய பங்குகளைச் சார்ந்த மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர். இப்பங்குகளுக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த வீடு வாசல்களை விட்டு வெளியேறிய நிலையில் அனேகமானோர் அகதிமுகாம்களிலும், ஒருசிலர் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அரிப்பு, சிலாவத்துறை, கொக்குப்புடையான், பொற்கேணி, முள்ளிக்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் எந்தவிதமான உடமைகளையும் எடுத்துவர முடியாத நிலையில் சடுதியாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த அனைத்து மக்களுமே தமது சொந்த இல்லிடங்களுக்குத் திரும்பிச் செல்லும் எவ்வித நம்பிக்கையும் அற்றவர்களாக விரக்தியில் வாழ்கின்றனர். பலவிதமான அசௌகரியங்களை எதிர்கொள்ளும் இம்மக்கள் பலவிதமான வாழ்க்கை நெருக்கடிகளை நாளாந்தம் சந்தித்து வருகின்றனர். இவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய கத்தோலிக்க திருச்சபையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியதாகும்.

# நூல் வெளியீட்டு நிகழ்வுகள்

அமலமரித் தியாகிகள் துறவற சபையைச் சேர்ந்தவரும், முருங்கன் மண்ணின் மைந்தனுமாகிய அருட்பணியாளர் செபமாலை அன்புராசா (அ.ம.தி.) அவர்களின் *"மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்"* என்ற நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் 3ம் திகதி (03.09.2007) மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வின் சில நிழற்பதிவுகள்...




நூலாசிரியர் அன்புராசா அடிகளார் உரை நிகழ்த்துகின்றார்.




நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய மன்னார் பேராலயப் பங்குத் தந்தை அருட்பணியாளர் தேவராஜா கொடுதோர் அவர்கள்.



மன்னார் ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகை அவர்களும் 'அமதி'களின் யாழ் மாகாண முதல்வர் அருட்பணியாளர் செல்வரெட்னம் அவர்களும் ஆசியுரை வழங்குகின்றனர். முசலிக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. டேவிட் அவர்கள் ஆய்வுரை நிகழ்த்துகின்றார்.



பிரதம விருந்தினர் மேதகு ஆயர் அவர்களிடமிருந்து அருட்சகோதரி பெனிக்னஸ் (தி.கு) அவர்கள் நூலைப் பெற்றுக்கொள்கின்றார்.



விழாவுக்கு வருகை தந்திருந்த பெரியார்களும் நாட்டுக்கூத்து ஆர்வலர்களில் ஒரு பகுதியினரும்.



# வாசகர் எண்ணங்கள்



## மக்களின் மனவிளக்கே



மாதத்தின் மணிவிளக்கே மக்களின் மனவிளக்கே
ஏற்றிடவே வருகின்றாய் மூபத்து நாட்களிலே.
முன்னேற்றப் பாதை கண்டு
தொடர்கின்றாய் உன் சேவைதனை!
இரவு பகல் பாராது அயராது இணைக்கின்றாய் ஆக்கமதை!
பங்குமனை சென்று நீயும், பறந்து வருகின்றாய் வீடு நோக்கி.
வற்றாத நீரோடைகளுக்கும் வளமான ஜீவ நதிக்கும்
ஊற்றாக இருந்து வாழ்வெல்லாம் சேவை செய்ய
வாழ்த்துக்கள் கூறி வரவேற்று நிற்கின்றோம்.

*வேந்தக்கோன் சியாமளா,*
*வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

## மலர் விரிக, மணம் கமழ்க!



மன்னாவே நீ வாழ்க! மலர் விரிக, மணம் கமழ்க!
இன்னும் கவிதைகளை, பாடல்களை,
கதைகளை, நகைச்சுவைகளை
இன்னும் பல அம்சங்களைத்
தொடர்ந்து பொழிய வாழ்த்துக்கள்.

மன்னாவே உன் சேவையினால்
உலகிற்கு சமாதானம் மலரட்டும்.
மன்னாவே உன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்திடு.
வண்ண மலர் போன்று மலர்ந்து
மழலை எம் உள்ளத்தை மகிழ்வித்திடு.

*சி. றோமி, ஆண்டாங்குளம், மன்னார்.*

## மனதில் மலரும் மன்னாவே



இளங்காலை வேளையிலே
பூக்கள் மலர்வது போன்று
மாதம் ஒருமுறை என் மனதில் மலரும்
அன்பிற்கிய மன்னாவே!
இறைவனின் மகிமையால்
மலரும் மலரைப் போன்று
இறைவனின் அருளால் நீயும்
தினம் தினம் மலரவேண்டும் என் மனதில்.


*சி. கிறிஸ்ரீன் ஜென்சி, வீரபுரம் மாணிக்கவாசகர் ம.வி.*

## தித்திக்கும் மன்னாவே!

தித்திக்கும் மன்னாவே, தெவிட்டாத தேனமுதே!
வண்ணமாய் வந்து நெஞ்சங்களை கொள்ளை கொள்கின்றாய்!
புதிய புதிய அம்சங்கள் புல்லரிக்க வைக்கும் சாதனைகள்,
தமிழ் வாழ் வையகத்தில் சுவை மாறாமல், சூடு ஆறாமல்
சுவாரசியம் குன்றாமல் தொடர்ந்துவர வாழ்த்துகின்றேன்.

*செ. நிஷாந்தன், சாளம்பன், மன்னார்.*

## ஆன்மீகத் தேடலின் உறைவிடம் மன்னா!



மாதம் ஒவ்வொன்றும் மகிழ்ச்சி பொங்க
மகிழ்வின் ஊற்றாய் ஆன்மீக உயிர்த்துடிப்பாய்
உன்னத தேவனின் உயர் விளக்காய்
உனக்குள்ளே பல உயிருள்ள காவியங்களை
தொகுத்துக்கொண்டு எமை தட்டிச்செல்ல
தொட்டுச் செயற்படச் செய்ய
எம் இருப்பிடம் தேடி வரும் மன்னாவே!
உன் சேவை இனிதே சிறப்புற
வாழ்த்தி நிற்கின்றேன்.

*எம். ஆர். றெஜினா, கூமாங்குளம், வவுனியா.*

## பல சுவாரசியமான அம்சங்கள்



"மன்னா" என்னும் மாதாந்த பத்திரிகை ஆன்மீகம், அறிவியல், இலக்கியம், உள்நாட்டு, வெளிநாட்டு செய்தி தொகுப்புக்கள், நகைச்சுவை போன்ற பல சுவாரசியமான அம்சங்களோடு பல வர்ண நிறங்களோடு வெளிவருகின்றது.

இது அனைவருக்கும் பயன்தரக்கூடிய ஒரு சிறப்பான கத்தோலிக்க பத்திரிகையாக அமைவதோடு, அனைவரினது நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்று நிற்கின்றது. எனவே நானும் உங்கள் நற்பணி சிறந்தோங்கவும், மன்னாவின் பொழிவினால் மக்கள் யாவரும் போஷிக்கப்படவும் வாழ்த்துகிறேன்.

*சகோ. ம. மரிசுதன், றோசறி ஆச்சிரமம்,*
*மதவுவைத்த குளம், வவுனியா.*

# செல்வோம்! கடவுள் அன்பே உருவானவர் என எடுத்துச் சொல்வோம்

## மறைபரப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு தேசிய இயக்குனரின் செய்தி

"தம் ஒரே மகன்மீது நம்பிக்கைகொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்" (யோவா 3/16) "... அன்பு கடவுளிடமிருந்து வருகிறது..." (1யோவா 4/7) "கடவுள் அன்பாய் இருக்கின்றார்..." யோவா 4/16B)

சோதிக்கும் சாத்தானின் வார்த்தையைக்கேட்டு ஏமாந்த மனிதன் தன்னைப் படைத்த இறைவனை மறந்தாலும், இறைவன் தன் சாயலாகப் படைத்த மனிதனை மறக்கவில்லை. மனிதனின் வீழ்ச்சியை அல்ல மாறாக மனிதனின் நிலைவாழ்வை, மீட்பை கடவுள் எதிர்ப்பார்த்தார். அன்பினாலேயே இறைவன் அவ்வாறு செய்தார். மனிதனின் மீட்பையும், நிலைவாழ்வையும் ஆசிக்கும் இறைவன் மனிதனை வீழ்ச்சியிலிருந்து மீட்க தனது ஒரே மகனை மனிதனுடைய மீட்பராக இவ்வுலகிற்கு அனுப்பினார்.

"தம் நண்பர்களுக்காக உயிரைக்கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை." (யோவா 15/13). இயேசுக்கிறிஸ்து தமது அன்புத் தந்தையை, மனிதனை உண்மையாகவே அன்பு செய்கின்றார் என்பதற்கு தனது வாழ்வினால் சாட்சிபகர்ந்தார்.

இவ்வுண்மை அன்றுபோல் இன்றும், இன்றுபோல் என்றும் வாழ்கின்ற மனிதனுக்கு நற்செய்திதானே! இந்நற்செய்தி அதாவது படைத்த இறைவன், மீட்பராகிய இறைவன் மனிதனை அளவுக்கதிகமாக அன்புசெய்து மனிதனுடைய மீட்பை, நிலைவாழ்வை எதிர்ப்பார்ப்பதை எடுத்துரைப்பது தகுதிதானே!



அவ்வாறு செய்யாவிடில் அது முழு மனித குலத்திற்குமே செய்யும் குற்றமாகாதா?

இன்று உலக மறைபரப்புத் தினமாகும். அன்று "..... உலகெங்கிலும் சென்று எல்லா மக்களினத்தாரையும் எனது சீடராக்குங்கள்" எனக் கூறிய ஆண்டவரே இந்நந்நாளில் "செல்வோம். கடவுள் அன்பே உருவானவர் என எடுத்துச் சொல்வோம்" என்று அறிவிக்க அழைக்கின்றார்.

இந்நற்செய்தியின் மூலம் உலகை அடிமைத்தனத்திலும், இருளிலும் இருந்து அதாவது பாவத்திலிருந்து மீட்டு இறைவனோடு என்றும் இணைந்து வாழ்ந்திட வழிவகுப்போம். "உன்னுடைய சகோதரன் எங்கே?" என்ற இறைவனின் வினாவுக்கு காயினைப்போல் "என் சகோதரனுக்கு நான் காவலாளியா?" என்று கூறாமல், "நான் என் சகோதரனின் காவலாளி மட்டுமல்ல மீட்பரும்கூட" என்பதை ஏற்று அதன்படி செயற்படுவோம். இறைவன் அன்பே உருவானவர்! அன்பே கடவுள்! என்ற சத்தியத்தை உணர்ந்து அதன்படி எம்வாழ்வை மாற்றியமைத்து அன்பே இறைவன் என்பதை உலகிற்கு எடுத்துரைக்க முன்வருவோம்.

*- அருட்பணி றெஜினோல்ட் சப்ரமாது*
*தேசிய இயக்குனர் - பாப்பிறை மறைபரப்பு சபைகள்.*

# காணாமற் போனவர்கள் தொடர்பாக...

காணாமற் போதல் என்பது இலங்கையில் சாதாரணமாகி விட்டதொன்று. உழைக்கும் கணவன்மாரை அல்லது உழைக்கும் பிள்ளைகளை இழந்த குடும்பங்களின் நிலை பரிதாபத்திற்குரியது? காணாமற்போனவர்கள் திரும்பி எப்போது வருவார்கள் என்ற ஏக்கம் ஒருபுறம், பொருளாதார நெருக்கடி மறுபுறம். அடுத்து என்ன செய்வதென்று தெரியாதவர்கள் பலர் இன்று எம்மிடையே உள்ளனர்.

2005ம் ஆண்டின் 17ஆம் இலக்க இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின்படி ஆள் ஒருவரின் தொடர்புகள் அற்றுப் போய், காணாமற் போயிருப்பின் ஒரு வருடத்திற்கு மேலாக அவர் திரும்பி வராத பட்சத்தில் அவர் இறந்து போனவராகக் கருதப்பட்டு மரணச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம்.

காணாமற்போனவரின் நெருங்கிய உறவினர் அல்லது குடும்ப அங்கத்தவர் எவராகிலும் பிறப்பு, இறப்பு பதிவாளரிடம் சென்று 17ஆம் இலக்க இறப்புக்களின் தற்காலிக ஏற்பாட்டிற்குரிய விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்தி செய்யலாம். இவ்விண்ணப்பம் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

அத்துடன் காணாமல் போனமை சம்பந்தமாக கிராம சேவையாளரின் அறிக்கையும், சத்தியக்கடதாசியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இறப்புச் சான்றிதழ் பெற்றதன் பின்னர் அவர்கள் நஷ்டஈடு கோரி விண்ணப்பிக்க முடியும். அதற்காக பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கபடவேண்டிய ஆவணங்கள்; இறப்புச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், கிராம சேவையாளரின் அறிக்கை, திருமணம் முடித்தவராயின் விவாகச் சான்றிதழ், பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ், வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி ஆகியனவாகும்.

மரணச் சான்றிதழ் பெற்றதன் பின்னர் காணாமல் போனவர் திரும்பி வந்தால் உடனடியாக பதிவாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டும். தலைமை அதிபதி சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து அவர்களுடாக திரும்பி வந்ததை உறுதிப்படுத்திக்கொள்வார். அதன் பின்னர் தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தின்படி வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ் இரத்துச் செய்யப்படும்.

- செல்வி. நித்தியானந்தி,
*CHA, Humanitarian Desk Office.*

# குருக்களுக்கான தேசிய ரீதியான தியானம்

# National retreat for Priests

கடந்த ஓகஸ்ட் மாதம் 27 – 31ம் திகதி வரையான 5 நாட்கள் இலங்கையில் உள்ள குருக்கள் பலர் ஒரே இடத்தில் சங்கமித்து இறைவார்த்தை தியானத்தில் தங்களை ஈடுபடுத்தினர். 'உயிர்த்த ஆண்டவரின் குழுமம்" (Risen Lord Community) என்று அழைக்கப்படுகின்ற கத்தோலிக்க பொதுநிலையினரைக் கொண்ட ஒரு புதுப்பித்தல் குழுவினரின் முயற்சியாலும், முழுமையான ஒத்துழைப்பாலும் நடைபெற்ற இத்தியானத்தை இலங்கை ஆயர் பேரவை ஒழுங்கு செய்திருந்தது. இந்தத் தியானத்தை நடத்த இந்தியாவின் கேரளா இறை தியான மையத்தில் (The Divine Retreat Centre) இருந்து அருட்பணியாளர் அகஸ்ரின் வல்லூரான் அவர்களும் அவரது குழுவினர் மூவரும் வருகை தந்திருந்தனர். கண்டி - அம்பிட்டிய தேசிய குருமடத்தில் இத்தியானம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு - திருகோணமலை மறைமாவட்டங்கள் உட்பட இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களில் இருந்தும் குருக்கள் இத்தியானத்தில் பங்கேற்றனர். மன்னார் ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகையும் இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிற்றஸ் ஆண்டகையும் இதில் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது.






*ஆயர் பேரவை சார்பாக மன்னார் ஆயர் அவர்கள் தியானத்தை ஆரம்பித்து வைக்கின்றார். மற்றும் தியானத்தில் பங்கெடுத்த குருக்களில் ஒரு பகுதியினர்.*

குருக்களின் தூய்மையான வாழ்வு, குருத்துவ திருப்பொழிவின் மேன்மை, திருப்பலியில் குருக்கள் வகிக்கும் இடம் போன்ற பல்வேறு கருப்பொருட்களில் இறைவார்த்தையின் ஒளியில் போதனைகள் இடம்பெற்றன. அனைத்துக் குருக்களும் நல்லதொரு ஒப்புரவு அருட்சாதனத்தைப்பெற வழிநடத்தப்பட்டனர்.

அருட்பணியாளர் அகஸ்ரின் வல்லூரானோடு, பொதுநிலைப் பணியாளர் பாபு அவர்களும் போதனை வழங்கினார். இவர்களோடு இணைந்து வருகை தந்த 'பாடும் தம்பதிகள்' (Singing Couples) என அழைக்கப்படும் திரு. கிளன்ற், திருமதி கிளன்ற் தெரேசா ஆகியோர் இசையால் இறைவனைப் புகழ குருக்களை வழி நடத்தினார்கள். அவர்களது இனிமையான இசையும், குரலின் இனிமையும், இறைவனைப் புகழ்ந்து மகிழ பெரும் உதவியாக இருந்தது.

இலங்கையில் தேசிய ரீதியில் குருக்களுக்கு நடைபெற்ற முதல் தியானம் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இத்தியானத்திற்கான செலவை உயிர்த்த ஆண்டவர் குழுமமே பொறுப்பேற்றிருந்தது. இத்தியானத்தில் ஏறக்குறைய 300 குருக்கள் பங்கேற்றனர். மன்னார் ஆயர் அவர்கள் இலங்கை ஆயர் பேரவையின் சார்பாக தியானக் குழுவினரை வரவேற்று இத்தியானத்தை ஆரம்பித்து வைத்தார்.

## கொழும்பு தமிழ்ச் சங்க விழாவில் அருள் மா. இராஜேந்திரம் கௌரவிப்பு

கொழும்பில் இருந்து தமிழ்ப் பணியும் சமூகப்பணியும் ஆற்றிவரும் அருள் மா. இராஜேந்திரம் அவர்கள் கொழும்பு தமிழ்ச் சங்க ஸ்தாபக தின விழாவின்போது அண்மையில் கௌரவிக்கப்பட்டார். தமது 79வது வயதிலும் மிகுந்த இளமைத் துடிப்போடு செயற்பட்டு வரும் இவரையும் இவரின் பணிகளையும் பாராட்டிய கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது 2007ம் ஆண்டுக்கான 'சங்கச் சான்றோன்' என்ற விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

1950ம் ஆண்டு முதல் தமிழ் சங்கத்தின் அங்கத்தவராகச் செயற்பட்டு வரும் இவர் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக சங்க ஆட்சிக் குழு உறுப்பினராக இருந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. சுவாமி ஞானப்பிரகாசர், தாவீது அடிகள், தனிநாயகம் அடிகள் ஆகியோர் பற்றிய *தவச் சுடா* என்னும் நூலை இவர் வெளியிட்டுள்ளார். தந்தை செல்வநாயகத்தின் செயலராக பல ஆண்டுகள் பணியாற்றி உள்ளார். 2007ல் நடைபெற்ற தேசிய நாடக விழாவில் இவரின் நாடகப் பிரதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. திருமறைக் கலாமன்றத்தினால் இவரது சிறுகதை தொகுப்பு ஒன்றும் வெளிவர உள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பணியும், சமயப் பணியும் ஆற்றும் இப்பெரியாருக்கு மன்னா தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றது.

## தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளருக்கு சமாதானத்திற்கான விருது

இந்தியாவின் 'நம்பிக்கைக்கும் ஒற்றுமைக்குமான மையம்' அண்மையில் கொழும்பு தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேராவிற்கு சமாதானத்திற்கான விருது வழங்கிக் கௌரவித்தது. இவ்விருது புதுடில்லியில் உள்ள இராஜிவ் காந்தி மண்டபத்தில் முன்னாள் பிரதம மந்திரி சிறி இந்திரகுமார் குஜ்றால் அவர்களால் வழங்கப்பட்டது. ஜெகான் பெரேரா இலங்கையில் சமாதானத்திற்காக நெடுநாளாக ஆர்வமுடன் உழைத்து வருபவர். இவர் துன்புறும் மக்களின் இதயத்துடிப்புக்களை உணர்ந்து துணிவுடன் இன்றைய போரின் பல வடிவங்களுக்கு மத்தியிலும், உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் அயராது பணிபுரிவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கரிற்றாஸ் தொண்டு நிறுவனத்தின் சமாதானப் பிரிவிலும் ஒரு உறுப்பினராக இருந்து நாட்டுக்கு மட்டுமல்லாது கத்தோலிக்க திருச்சபைக்கும் சமாதானப் பணிபுரிகின்றார். இவர் சமாதானமும் மனமாற்றமும் என்னும் தலைப்புக்களில் எழுதும் கட்டுரைகள் பல பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## 23 ஆவது உலக இளைஞர் தினம் 2008ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறும்

*தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்.*

*(திருத்தூதர் பணி 1:8)*

எதிர்வரும் 2008ம் ஆண்டு ஆவணி மாதம் அவுஸ்ரேலியாவில்' உள்ள சிட்னி நகரில் நடைபெற இருக்கும் உலக இளைஞர் தினத்திற்கு உலகெங்கும் வாழும் இளைஞர்களைத் திரண்டு வரும்படி திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்.

ஆங்கில மொழியில் பேசிய திருத்தந்தை விசுவாசத்தின் விழாவான மேற்படி உலக இளைஞர்களின் மாபெரும் ஒன்றுகூடலுக்கு தயார் செய்யும்படி அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இளைஞர்கள் ஆகிய நீங்கள் யேசுவை அதிகம் அதிகமாய் அன்பு செய்யவும் நம்பிக்கையில் அவரைப் பின்பற்றி வாழவும் அழைக்கப்படுவதோடு மற்றவர்களையும் யேசுவின்பால் இழுத்துச் செல்லும் கருவிகளாக மாற வேண்டும்.

தூய ஆவியானவரின் வல்லமையின் முழுமையை ஒரு தெய்வீக அனுபவமாக உணரும் வாய்ப்பாக இவ் ஒன்றுகூடல் அமையும். இன்றைய நவீன காலத்தில் இறைவார்த்தைக்கு தவறாக பல வழிகளில் விளக்கம் கொடுப்போர் மத்தியில் அதன் மகிமையையும் மகிழ்ச்சியையும் எடுத்துரைப்பதற்கு வழங்கப்படும் ஒரு அரிய வாய்ப்பாக இது அமையும். இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையில் செபத்திற்கு முன்னுரிமை கொடுத்து வாழவும் ஆன்மீகத்தில் வளரவும் இது ஒரு நல்ல அனுபவத்தைப் பெற்றுத்தரும் என்றும், நீங்கள் திருமுழுக்கின்போதும் உறுதிப்பூசுதலின்போதும் கொடுத்த வாக்குறுதிகளை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள இது வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் இளைஞர்களைப் பார்த்து, நீங்கள் உலகின் மூலை முடுக்கெல்லாம் உயிர்த்த யேசுவின் நம்பிக்கையைப் பறைசாற்றவும் சோகத்தில் வாழ்வோருக்கு மகிழ்ச்சியை அறிவிக்கவும், ஏமாற்றத்தில் வாழ்வோருக்கு அன்பையும் வழங்கி உலகை கிறிஸ்துவின் ஒளியில் மாற்ற உங்கள் வாழ்வை அர்ப்பணியுங்கள் என அழைப்பு விடுத்தார்.

நாம் பரிசுத்தத்தை பணியில் இருந்து எப்பொழுதும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது என்பதால் இளைஞர்கள் ஒவ்வொருவரும் பரிசுத்தமாகவும் பணியாளர்களாகவும் என்றும் வாழவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இது ஒரு வெறும் நிகழ்வு மட்டுமல்ல, இது ஒரு ஆழ்ந்த விசுவாசத்தின் புதுப்பித்தல் நிகழ்வாகும். இப்புதுப்பித்தலின் பயன்களை முழு மனித சமுதாயமே அனுபவிக்க உள்ளது. உங்களுள் சிலருக்கு புதிய அனுபவத்திற்கான தேடல்களில் முடிவில்லாமல் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சில நண்பர்கள் இருப்பார்கள். அவர்களையும் சிட்னிக்கு அழைத்து வாருங்கள். உங்களுள் சிலர் அழகு, நன்மை, உண்மை ஆகிய நற்பண்புகளை மீளக்கண்டு பிடிக்கும் தேடலில் ஈடுபட்டிருப்பது எமக்கும் தெரியும். எதிர்கால ஏக்கங்களை கேள்விக் கணைகளாக இதயங்களில் சுமந்துகொண்டு விடிவை நோக்கி நகரும் பலருக்கு உங்களுடைய பணி இறைவனில் அமைதியைக் காண வழிகாட்ட வேண்டும் என்றார்.

## கார்மேல் கன்னியரின் புதிய மாகாணத் தலைவி அருட்சகோதரி மேரி கார்மேலா

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினரின் 12ஆவது மாகாணத் தலைவியாக அருட்சகோதரி மேரி கார்மேலா (அ.கா) ஆவணி 12ஆம் திகதி கொழும்பில் தெரிவுசெய்யப்பட்டார். அவரின் ஆலோசகர்களாக அருட்சகோதரிகள் மாறி லூட்ஸ், திரேஸ் இராணி, பார்பறா, மற்றும் நிர்மலி பெனாண்டோ ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களோடு அருட்சகோதரி மெனா நிதியாளராகவும், மறியன் கிளேயா செயலராகவும் பணியாற்றுவர்.

## யாழ் மறை மாவட்டத்தில் இரண்டு குருக்கள் இறைவனடி சேர்ந்தனர்



**பி. எம். இம்மானுவேல் அடிகளார்**

பி. எம். என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட பி. எம். இம்மானுவேல் அடிகளார் கடந்த 25.08.2007 அன்று யாழ்ப்பாணத்தில் சத்திர சிகிச்சையின் பின்னர் எதிர்பாராமல் காலமானார். இறுதிச் சடங்குகள் கடந்த 28.08.2007 அன்று யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஜே. நீக்கிலஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றன.

இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட மக்கள் கூட்டமும் இறுதி நேரத்தில் அவரின் பெட்டியை மூடவிடாது கதறி அழுத அழுகைக் குரலும் பி. எம். இம்மானுவேல் அடிகளார் தனது 67 வருட வாழ்வில் 41 ஆண்டுகள் மக்களின் தேவையறிந்து ஆற்றிய அன்புப்பணிகளுக்கு சாட்சியம் கூறிநின்றன.

இளவாலை அடம்பன், விடத்தல்தீவு, மன்னார், உயிலங்குளம், தாளையடி, வங்காலை, வவுனியா, நாவாந்துறை, குருநகர், பருத்தித்துறை, பாண்டியன்தாழ்வு ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாக அவர் பணியாற்றி மக்கள் மனதுகளை கொள்ளைகொண்டு நீங்காத இடம்பிடித்துள்ளார்.

ஏழைகள் மட்டில் அளவுகடந்த இரக்கம் கொண்ட இவரின் கொடை வள்ளல் தன்மையால் ஏழைகள் - விதவைகள் -அநாதைகள் - துணையிழந்தோர் என ஏராளமான மக்கள் உதவி பெற்றுள்ளார்கள். வசதியற்றவர்களுக்கு கல்வி அறிவை வழங்குவதற்காக இவர் ஆற்றிய அரும்பணிகள் அளப்பரியவை. இவற்றோடு பங்குத்தளங்களில் இவர் ஆற்றிய பணிகள் பாராட்டிற்குரியவை. "பாதர் பி. எம்.மிற்கு பெரிய உடம்புபோல் பெரிய மனசு" என்றும் இன்னும் எத்தனையோ விதமாகவும் பகிடிகள் விட்டபோதும் எல்லோரின் மகிழ்ச்சிக்காக அனைத்தையும் ஏற்றுக் கொள்பவர்.



**பி. எவ். பொணிபஸ் அடிகளார்**

'பொணி' என அன்பாக அழைக்கப்பட்ட பி. எவ். பொணிபஸ் அடிகளார் 28.08.2007 அன்று கொழும்பில் புற்றுநோயால் திடீரெனக் காலமானார்.

யாழ். கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், 1977ஆம் ஆண்டு கண்டி மறை மாவட்டத்திற்காகக் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். 1983அம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் யாழ் மறைமாவட்டத்தில் இணைந்துகொண்ட இவர், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் பணி புரிந்தார். பின்னர், பருத்தித்துறை, சில்லாலை, கிளிநொச்சி, பரந்தன், ஆனைக்கோட்டை குருநகர், இளவாலை, மிருசுவில் ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்ட பின்னரும் சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்கு முந்திய தினம் கச்சாயில் ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுத்துள்ளார். இது அவர்தம் கடமையில் இறுதிவரை கவனமாக இருந்தார் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இரு வாரத்தில் மருத்துவ சோதனைகளை முடித்துக்கொண்டு திரும்பி வந்துவிடுவேன் என்று கூறி மன உறுதியுடன் சென்றவர் திரும்பி யாழ்ப்பாணம் வரக்கொடுத்து வைக்கவே இல்லை.

கலகலப்பாக கதைத்து நேர்மையோடும் கண்ணியத்தோடும் பணியாற்றி, எதிர்வந்த அனைத்துச் சவால்களையும் தாங்கி நின்ற உண்மையான ஒரு பணியாளன் இவர். இவரின் இழப்பால் இவர் பணியாற்றிய பணித்தளங்கள் சோகமயமாய் உள்ளன.

(நன்றி - பாதுகாவலன்)

இந்த இரண்டு குருக்களின் ஆன்மாக்களும் இறைவனில் அமைதிபெற மன்னார் இறைமக்கள் சார்பாக மன்னா தனது செபங்களைக் காணிக்கையாக்குகின்றது. அருட்பணியாளர் பி. எம். இம்மானுவேல் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்தில் பல ஆண்டுகள் அரும்பணியாற்றியவர், மன்னார் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர் என்ற வகையில் அவரது மேலான வாழ்விற்காகவும், பணிகளுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். - பதிப்பாசிரியர்.

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## ஜே. ஆர். எஸ். செய்திகள்

### யேசுசபை அகதிகள் பணியினரின்
### ஆங்கில கல்வியகம் திறப்பு விழா


ஜே. ஆர். எஸ். என்று அறியப்படும் கத்தோலிக்க திருச்சபையின் இயேசு சபை அகதிப் பணியினரினால் கடந்த ஓகஸ்ட் மாதம் 17ம் திகதி ஆங்கிலக் கல்வியகம் (English Academy) திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் - தலைமன்னார் வீதியிலுள்ள ஜே. ஆர். எஸ். அலுவலக வளாகத்திலேயே இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இக்கட்டடத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார். மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. எம். ஆபேல் றெவ்வல் அவர்கள் இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தார். ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் மன்னார் மறைமாவட்ட இணைப்பாளர் அருட்பணியாளர் என். பாக்கியரஞ்சித் அவர்கள் இக்கட்டடப் பணியை மேற்பார்வையிட்டு நிறைவேற்றியதோடு, திறப்புவிழா நிகழ்வுகளையும் ஒழுங்கமைத்திருந்தார்.









### வாழ்க்கைப்பெற்றான் கண்டலில்
### சிறுமியர் இல்லம் திறப்பு

அளவக்கை பங்கிலுள்ள வாழ்க்கைப்பெற்றான் கண்டல் கிராமத்தில் அமைந்திருக்கும், அமல உற்பவ மாதா கன்னியர் இல்லத்தில் ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் ஆதரவில் புதிதாக அமைக்கப்பட்ட 20 பேர் தங்கிப் படிக்கக்கூடிய சிறுமியருக்கான இல்லம் கடந்த ஓகஸ்ட் 17ம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யேசேப்பு ஆண்டகை அவர்கள் இப்புதிய கட்டடத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார்.


நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. என். திருஞானசம்மந்தர் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வின்போது இலங்கையிலிருந்து பணியினை நிறைவுசெய்து கொண்டு செல்லும் ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் இலங்கைக்கான இயக்குனர் அருட்பணியாளர் வின்னி யோசப் அவர்களுக்கு அமல உற்பவ மாதா கன்னியர்கள் வாழ்த்துப் பாமாலை இசைத்து, பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.







### தலைமன்னாரில் ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின்
### வீட்டுத்திட்டத் திறப்பு விழா

கடந்த ஓகஸ்ட் மாதம் 17ம் திகதி தலைமன்னார் கிராமத்தில் ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் உதவியோடு கட்டப்பட்ட 50 புதிய வீடுகள் திறந்து வைக்கப்பட்டன.


காலை 11 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் புதிய வீடுகளை ஆசீர்வதித்தார். சீ.ஆர்.எஸ். - ஜே.ஆர்.எஸ். திட்ட இணைப்பாளர், திரு. மாட்டீன் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்துவைத்து, வீடுகளையும் திறந்து வைத்தார். மன்னார் பிரதேச செயலாளர் திருமதி. ஸ்ரான்லி டிமெல் அவர்கள் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் முன்னாள் இலங்கை இயக்குனர் அருட்பணியாளர் வின்னி யோசப் அவர்களும், புதிய இயக்குனர் அருட்பணி கமல் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.







தலைமன்னாரில் நடைபெற்ற வீட்டுத் திட்ட திறப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.



### இலங்கையில் அமைதியை ஏற்படுத்த
### சர்வதேச சமூகம் ஆயத்தமாக உள்ளது
#### - பேராயர் மல்கம் ரஞ்சித் -

வத்திக்கானில் பணியாற்றும் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை அண்மையில் கொழும்பு வந்து அரசியற் தலைவர்களுடன் பல சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளார்.

இச்சந்திப்புக்கள் தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இலங்கையில் அமைதியை ஏற்படுத்த சர்வதேச சமூகம் உதவ ஆயத்தமாக உள்ளது என்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயுதங்கள் ஒருபோதும் தீர்வைத் தரப்போவதில்லை. அவை அழிவையே ஏற்படுத்தும். யுத்த மனநிலையில் இருந்து எல்லோரும் விடுபட வேண்டும். யுத்தம் தொடர்வதை நாம் விரும்பவில்லை. யுத்தத்தை நாம் கண்டிக்கிறோம். யுத்த முனைப்பில் இருந்து அனைவரும் விடுபட வேண்டும் என பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

வத்திக்கானில் பணியாற்றிவரும் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை ஜனாதிபதி வத்திக்கானில் பாப்பரசரைச் சந்தித்த பின்னர் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியவர். அண்மையில் இலங்கைக்கு வந்த இவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவையும் மற்றும் சிரேஸ்ர அமைச்சர்களையும் சந்தித்துப் பேசிய பின்னர் அரச அனுமதியுடன் 13.09.2007 அன்று கிளிநொச்சிக்குச் சென்று அரசியற்துறைப் பொறுப்பாளர்களைச் சந்தித்துள்ளார். இச்சந்திப்பின்போது மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் கரிற்றாஸ் பொறுப்பாளர் டேமியன் பெர்னான்டோ அடிகளார் ஆகியோர் உடனிருந்தனர்.



இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த சர்வதேச சமூகம் உதவ ஆயத்தமாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

### துள்ளுகுடியிருப்பில்
### டொமினிக்கன் அருட்சகோதரிகளுடைய
### சிறுமியர் இல்லக் கட்டடத் திறப்பு விழா

கீளியன்குடியிருப்புப் பங்கில் உள்ள துள்ளுகுடியிருப்புக் கிராமத்தில் டொமினிக்கன் அருட்சகோதரிகளின் பாதுகாப்பில் வளரும் சிறுமியருக்கான இல்லம் திறந்துவைக்கப்பட்டது. கடந்த ஓகஸ்ட் மாதம் 17ம் திகதி பகல் 2 மணியளவில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இந்த இல்லத்தைத் திறந்து வைத்தார். மன்னார் ஆயர் அவர்களுடைய தனிப்பட்ட முயற்சியில் பெறப்பட்ட நிதியைக் கொண்டு இந்த இல்லம் கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பல மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட - ஒரு மாடிக் கட்டிடமான இந்தப் பிரமாண்டமான இல்லம் அருட்சகோதரிகளுக்கான அறைகளையும் பெரிய மண்டபத்தையும், 60 சிறுமியர் தங்குவதற்கான பெரிய மண்டபத்தையும் கொண்டுள்ளது.

இத்திறப்பு விழா நிகழ்வுக்கு மன்னார் பிரதேச செயலாளர் அவர்களும் வருகை தந்திருந்தார். கீளியன்குடியிருப்புப் பங்குத் தந்தை பிரான்சிஸ் மரி டிகோல் அடிகளார் திறப்பு விழா நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தார். பேசாலையில் அமைந்துள்ள டொமினிக்கன் சகோதரிகள் இல்லத்தில் வைத்துப் பராமரிக்கப்பட்ட சிறுமிகள் அங்கு போதிய இட வசதியின்மையால் சில அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர். எனவே இப்புதிய கட்டிடம் இச்சகோதரிகளுக்கும் சிறுமியருக்கும் பெரிய ஆசீர்வாதமாக அமைந்துள்ளது.





துள்ளுகுடியிருப்பு சிறுவர் இல்லத் திறப்பு விழாவில் ஆயர் அவர்கள் புதிய இல்லத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைப்பதையும், இல்லத்தின் தலைமை அருட்சகோதரி மேரி மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் உரையாற்றுவதையும் காணலாம்.

# மறைபரப்பு ஞாயிறு தினம் 21. 10. 2007

## திருத்தந்தையின் செய்தி

81வது உலக மறைபரப்பு ஞாயிறு இவ்வாண்டு ஐப்பசி மாதம் 21ம் திகதி அதாவது கடைசி வாரத்திற்கு முந்திய வாரம் கொண்டாடப்படுகின்றது. அத்தினத்தை ஒட்டி திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் வழங்கிய செய்தியின் முழுமையான பிரதி கீழே தரப்படுகிறது.

**அன்பான சகோதர, சகோதரிகளே!**

உலக மறைபரப்பு ஞாயிறு தினமாகிய இன்று இறை மக்களாகிய ஆயர், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகிய உங்களை எமது திருச்சபையின் இன்றைய மறைபரப்பு செயற்பாடு பற்றிச் சிந்திக்க ஒரே குடும்பமாக அழைக்கின்றேன்.

மாற்கு (28:19-20)ல் எமக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. "எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கின்றேன்"

இயேசு பாடுபட்டு, மரித்து, உயிர்த்து விண்ணகம் சென்றபோது விடுத்த இவ் அழைப்பு முழு உலகுக்குமானது, அவரது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வந்தது. இந்த மாபெரும் மறைபரப்புப் பணியைச் செய்ய, நாம் உடனுழைப்பாளிகளாக இருந்து இதை முழுமை அடையச் செய்ய, அறுவடையின் ஆண்டவர் தனது வழிநடத்தலைத் தந்து எம்மோடு எப்போதும் இருப்பார்.

இயேசு திருச்சபையின் மறைபரப்புப் பணிக்கு ஒரு கொடையாக இருக்கின்றார். இந்த ஆண்டிலே நாம் திருத்தந்தை 12ம் பத்திநாதரின் "பிடே டோணும்" என்ற சுற்றுமடல் வெளியிடப் பட்டதின் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றோம். இது எம்மை இம்மறைபரப்புப் பணியில் இன்னும் ஆழமாக ஒத்துழைப்போடு செயற்படத் தூண்டுகின்றது.

ஒவ்வொரு கண்டத்தில் வாழும் ஒவ்வொருவரும் இக்காலத்தின் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடியவிதமாக அவர்களுடைய மறைபரப்புச் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்ற நோக்கோடு இவ்வாண்டின் சிந்தனைக்குரிய கருப்பொருளாக "அனைத்துத் திருச்சபைகளும் உலகம் முழுவதற்குமானது" என்ற தொனிப்பொருள் சிந்தனைக்கு விடப்பட்டுள்ளது. இன்று மனிதர்கள் வாழும் உலகும், அவர்களுடைய வாழ்க்கை முறையும் முழுவதுமாக மாறியுள்ளது. கடந்த சில நூற்றாண்டுகளாக நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக எத்தனையோ முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. சிறப்பாக 2ம் வத்திக்கான் சங்கத்தின்பின் கூடுதலானோர் இயேசுவின் அழைப்புக்கு செவிமடுத்து திருமுழுக்குப் பெற்ற அனைவருக்கும் நற்செய்தியை எடுத்துச் செல்ல இயேசுவைப்போல அயராது உழைக்கின்றனர்.

பழைய பாரம்பரியத்தைப் போன்று இன்றும் எத்தனையோ குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் தம்முடைய வாழ்வால் இந் நற்செய்தி அறிவிப்புப் பணியை கிறிஸ்தவ குழுக்கள் மத்தியில் செய்து வருகின்றனர். இந்த ஒத்துழைப்பு கடந்த காலங்களில் எல்லா இடங்களிலும், சிறப்பாக ஆரம்பத்தில் மறைபரப்புப் பணிக்காகச் சென்ற இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. மேலைத்தேய பண்பாட்டுடன் கூடிய செயற்பாடுகள்கூட இதற்குச் சவால் விடுவதாக இருக்கின்றது.

குடும்பப் பிரச்சினை, அழைத்தலுக்கான எண்ணிக்கை குறைவு, வயது முதிர்ந்த குருக்கள் போன்றவை இன்று இப்பணியை ஆற்றுவதற்கு சில தடைகளை வழங்குகின்றதோடு, தம்மைப்பற்றியே அவர்கள் அக்கறைப்படத் தூண்டுகின்றது. எனவே இத்தருணத்தில் நாம் இறைபராமரிப்பில் நம்பிக்கை வைத்து தூய ஆவியின் துணையோடு இயேசுவின் மீட்புத் திட்டம் முழுமையடைய ஆசிக்கின்றோம்.

தற்காலத்தில் காணப்படும் மறைபரப்புப் பணிகளும், பணிபுரிவோரும் நல்லாயனாகிய இயேசுவால் அழைக்கப்பட்டு தியாக மனப்பான்மையோடு செயற்பட வேண்டும். அவர்களின் பாதையில் எதிர்நோக்கும் சிக்கல்களையும், தடைகளையும் தாண்டி மறைபரப்புப் பணி வளர்ச்சி அடைய ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

எப்படி இருப்பினும் சில குருக்கள், அர்ப்பணிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. தமது நாட்டில் பணிபுரிய அவர்கள் தேவைப்படும்போது ஏனைய நாடுகளுக்குப் பணிபுரியச் செல்வதும் சிறப்பாக அன்றைய மறைபரப்பாளர்கள் வந்த இடங்களுக்குச் சென்று பணிபுரிவதும் இன்று காணப்படுகின்றது. இங்கு நாம் இறைபராமரிப்பை இனங்கண்டு எம்மிடமுள்ள பெறுமதியான சொத்துக்களைப் பரிமாற்றிக்கொள்ள வேண்டும். இச்செயற்பாடு எம்மை இறைவனின் உடலோடு இணைக்கின்றது. எம்மிடமுள்ள திறமைகள், கொடைகள், நோக்கம் போன்றவற்றை இந்த மறைபரப்பு ஞாயிறு தினத்தில் ஒன்றிணைத்து எல்லாக் கிறிஸ்தவக் குழுக்களிலும், தனிப்பட்டவர்களிலும் இறையரசு பரவச்செய்து கடைசி எல்லைவரை இது வழிசமைக்க உங்களை அர்ப்பணிக்க ஆசிக்கின்றேன்.

திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் இவ்வாறு தனது "றிடம்ரோரியோ மிசியோ" (மீட்பரின் பணி) என்ற கூற்றுமடலில் குறிப்பிடுகிறார். திருச்சபை இயல்பாகவே மறைப்பணி ஆற்றுகின்றது. இயேசுவின் அழைப்பும், ஆணையும் திடீரெனத் தோன்றிய வெளிப்படையான ஒன்றல்ல. மாறாக அது திருச்சபையின் உள்ளத்தில் உள்ளது. அது முழு உலகத் திருச்சபையையும், தனிப்பட்ட திருச்சபைகளையும் நோக்கியுள்ளது. எனவேதான் இம்மறைபரப்புப் பணியானது தம்முடைய நாட்டின் மக்களுக்கு ஏற்றவிதமாக வியாபிக்கின்றது. இதற்கு வளர்ந்துவரும் திருச்சபைகள் தமது பங்களிப்பை வழங்க வேண்டியது அவசியம். அவர்களும் இம்மறைப்பணியை, நற்செய்திப்பணியை ஆற்ற குருக்கள் பற்றாக்குறையாக உள்ள உலகின் எல்லா இடங்களுக்கும் அனுப்பப்பட வேண்டும்.

திருத்தந்தை 12ம் பத்திநாதரின் 50 ஆண்டுகளுக்கு முன்னரான அழைப்பை நானும் இவ்வேளையில் ஆணித்தரமாக ஆமோதித்து மீண்டும் அதன்படி செயற்பட ஊக்கமூட்டுகின்றேன்.

திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "திருச்சபையின் மறைபரப்புப் பணியானது திருச்சபைகளுக்கு இடையிலான ஒன்றிப்பைவிட மேலானது. அது மீண்டும் நற்செய்தியை அறிவிப்பதை மட்டுமல்ல, மாறாக ஆரம்ப மறைப்பரப்புப் பணிகளையும் குறிக்கின்றது. அதனால்தான் இன்றைய மறைபரப்புப்பணி என்றால் என்ன என்பதை பல தடவைகளில் குறிப்பிட்டுள்ளோம். தாம் வாழும் சமூக, கலாச்சார, பண்பாட்டு வடிவங்களின் மத்தியில் உலகின் பல பாகங்களில் ஏழ்மையில் வாழும், அடிமைத்தனங்களில் வாழும், வன்முறைகளுக்குள் சிக்கி வாழும், மனித உரிமைகள் மீறப்பட்டு வாழும் அனைவருக்காகவும் குரல் கொடுக்க வேண்டும்".

எனவே இப்பணியை ஆற்றத் திருச்சபை தயங்கக்கூடாது. இது எமது கடமையும், உரிமையும் ஆகும். இந்த ஆணையைத்தான் இயேசு திருச்சபையின் முதற் திருத்தந்தையாகிய புனித பேதுருவுக்கு வழங்கினார். அவர் பரிமாறிய அந்தச் செயற்பாட்டைச் செய்யக்கூடியவர்கள் ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் உள்ள ஆயர்கள். எனவேதான் இந்தவேளையில் எல்லா ஆயர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். அவர்கள்தான் மந்தைகளாகிய அனைத்து இறைமக்களையும் வழிநடத்தும் பணியைக் கொண்டுள்ளார்கள். அவர்களும் திருத்தந்தை 12ம் பத்திநாதரின் சுற்றுமடலில் குறிப்பிட்டுள்ளவாறு காலத்தின் தேவைக்கு ஏற்ப செயற்பட ஆயத்தமாக இருக்க வேண்டும். அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபைகளுக்கு குருக்கள் அனுப்பப்பட்டு இதுபற்றிய தெளிவைக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் உண்மையாகவே நாம் விசுவாசத்தில் ஊட்டம் பெற்றவர்களாக ஏனையவர்களுக்கு - சிறப்பாக தமக்கு இறைவனின் செய்தி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பவர்களுக்கு வழங்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது குருக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க ஆயத்தமாக இருக்கவும் வேண்டும்.

நாம் இந்தவேளையில் சிறப்பாக ஆபிரிக்க தேசத்திலும் ஏனைய பகுதிகளிலும் மறைபரப்புப் பணியை நாம் சிறந்த முறையில் ஆற்றுவதற்குத் தந்த அருள் வளங்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். கூடுதலான குருக்கள் தம்முடைய சொந்த நாட்டைவிட்டு ஏனைய நாடுகளுக்கு மறையறிவிப்பதற்காகச் சென்று அவர்களின் கலாச்சாரத்தோடு ஒன்றித்துப் பணியாற்றி எதிர்ப்புக்களைச் சந்தித்து அவற்றின் மத்தியில் பலர் வேதசாட்சிகளாக மரித்து எமக்குச் சாட்சிகளாக மிளிர்ந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த வேளையில் இவ்வாறு ஒவ்வொரு இடங்களிலும் மறைபரப்புப் பணிபுரியும் அனைத்துக் குருக்கள், துறவிகளையும் நாம் மறந்துவிடலாகாது. எனவே இந்த மறைபரப்பு ஞாயிறு தினத்தில் அவர்களையும் நினைவுகூர்ந்து அவர்களுக்காக மன்றாடுவதோடு அவர்களில் காணப்பட்ட பணியாற்றும் ஆர்வம், தியாகம் என்பன எமக்கும் கிடைக்க வரம் கேட்போம். நாம் எவ்வாறு இப்பணிக்கு ஒத்துழைக்கலாம் என்று யோசிப்பதை விட்டுவிட்டு நாம் ஒவ்வொருவரும் மறைபரப்புப் பணியின் உதவியாளர்கள் என்பதை உணர்ந்து செயற்படுவோம்.

ஆகவே திருச்சபையின் பணியில் எமக்கும் பங்குண்டு என்பதை உணர்ந்துகொள்வோம். காணப்படும் ஒவ்வொரு குழுக்களுக்கும் இடையில் ஒத்துழைப்பை வழங்கி அனைவரும் பணியாளர்கள் என்பதை ஏற்றுச் செயற்பட சிறப்பாக குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் எல்லோரும் ஒன்றிணைவோம். இதுதான் இன்றைய மறைபரப்புப் பணிக்கு அவசியமானது.



அன்பான சகோதர, சகோதரிகளே! இயேசு திருத்தூதர்களுக்கு வழங்கிய இம்மறைபரப்புப் பணி இன்று எமக்கும் தரப்பட்டுள்ளது. எனவே இந்த மறைபரப்பு ஞாயிறு தினத்தில் நாம் இதை உணர்ந்து இப்பணியை எப்படிச் செய்யப்போகின்றோம் என்று திட்டமிடுவோம்.

எமது திருச்சபைக்கு இடையில் கூட்டுறவும், பணியாளர்களுக்கு பயிற்சியும் இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் இன்று நற்செய்தியை வெற்றிகரமாக அறிவிக்கலாம். எனவே மறைபரப்புப் பணிக்காகச் செபிக்க நாம் மறந்துவிடலாகாது. எனவே எமது திருச்சபையின் மறைப்பணியாளர்களின் பணிக்காக பின்வருமாறு செபிப்போம். "அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு, எனவே அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரிடம் மன்றாடுவோம்" (லூக்.10:2). அத்தோடு திருத்தந்தை 12ம் பத்திநாதர் தனது சுற்றுமடலில் குறிப்பிட்டுள்ளதையும் நாம் நினைவிற்கொள்வோம்.

அன்புமிக்க சகோதர, சகோதரிகளே! நான் மீண்டும் இயேசுவின் அன்றைய அழைப்பை இவ்வேளையில் உங்களோடு புதுப்பிக்கின்றேன். அத்தோடு எமது குழுக்களுக்கிடையில் இதனைச் செபிப்போம். "பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே! உம்முடைய இராட்சியம் வருக" என்று.

இவ்வேளையில் எமது சிறுவர்கள், இளைஞர்கள் போன்றவர்கள் மறைபரப்புப் பணிக்காகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என வினயமாகக் கேட்கின்றேன். நான் நோயாளர்களுக்காகவும், வேதனையில் வாடுவோர்களுக்காகவும் மன்றாடும் அதேவேளை அவர்கள் இறைவனின் மீட்பின் மறைபொருளை உணர்ந்து செயற்படவும் கேட்கின்றேன்.

அத்துடன் மறைபரப்புப் பணிக்காக மன்றாடும்படி அர்ப்பணிக்கப்பட்ட எம்மையும், எமது பணியையும் ஏற்று வழிநடத்தவும், புதிய பெந்தகோஸ்தே அன்பை எம்மில் உருவாக்கவும் நாம் ஒவ்வொருவரும் மறைபரப்பாளர்கள் என்பதை உணர்ந்து செயற்படவும், மரியாளது உதவியையும், மன்றாட்டையும் வேண்டுவோம்.

அதேபோன்று இன்று இம்மறைப்பணியை ஆற்றிவரும் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகிய உங்கள் அனைவருக்காகவும் நான் எனது தனிப்பட்ட செபத்தில் செபிப்பதோடு எனது ஆசீரையும் உங்கள் மேல் பொழிகின்றேன்.


## குருக்களுக்கான தேசிய ரீதியான தியானம்

## நிகழ்வுகளின் நிழல்கள்



தியானத்தை வழிநடத்திய டிவைன் இல்ல அருட்பணியாளர் அகஸ்ரின் வல்லூரான்.


'பாடும் தம்பதியர்' என அறியப்படும் திரு. கிளன்ற் மற்றும் திருமதி கிளன்ற் பாடுகின்றனர்.


பங்கேற்ற குருக்கள் கைகளை விரித்து இறைபுகழ்ச்சியில் ஈடுபடுகின்றனர்.




அம்பிட்டிய தேசிய குருமடத் தோற்றமும் ஆயர்களிடம் ஆசீர்பெறும் குருக்களும்.



# சிறுவர் பொழில்



# கவிதைப் பூக்கள்

## இறைவனின் விருப்பம்

ம.கார்மலின் சௌமியா குரூஸ்,
தரம்: 08, அரிப்பு, சிலாபத்துறை.

ஓர் ஊரிலே ஒரு அழகான குளம் இருந்தது. அந்தக் குளத்திலிருந்து மீன்களைச் சாப்பிட்ட இரண்டு நாரைகள் சற்று இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தின்மீது அமர்ந்தன. அவற்றில் ஒன்று ஆண், மற்றையது பெண். இரண்டும் தங்கள் எதிர்காலத்தைப்பற்றி பேசத்தொடங்கின.

பேசிக்கொண்டே பெண் நாரை தற்செயலாகக் கீழே பார்த்தது. கீழே ஒரு வேடன் தனது வில்லால் இரு நாரைகளையும் குறி பார்த்தவண்ணம் இருந்தான். அதைக்கண்டு திடுக்கிட்ட பெண் நாரை, அப்பால் செல்லும் நிழலையும் கவனித்து விருட்டென்று தலையைத் தூக்கி மேலே பார்த்தது. ஒரு பெரிய வல்லூறு அவைகளைப் பிடிக்க மிக அருகாமையில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பெண் நாரையின் நெஞ்சு கிடுகிடுவென அதிரத் தொடங்கியது. அது ஆண் நாரையைப் பார்த்து, "இன்று நாம் தொலைந்தோம். கீழே பாருங்கள், ஒரு வேடன் நம்மை அம்பால் வீழ்த்த குறிபார்த்துக் கொண்டிருக்கின்றான். மேலே ஒரு வல்லூறு நம்மைப் பிடிக்க பறந்துகொண்டிருக்கின்றது. நம் வாழ்க்கை அவ்வளவுதான்" என்று சொல்லிவிட்டு அழத்தொடங்கியது.

அப்பொழுது ஆண் நாரை பெண் நாரையைப் பார்த்து, "இதோ பார், நீயாக எந்த முடிவுக்கும் வந்து மனதைப் போட்டுவருத்திக் கொள்ளாதே. நாம் இறந்துவிடுவோம் என்று இவற்றைப பார்த்து ஒரு முடிவுக்கு வந்துவிடமுடியாது. இறைவனின் விருப்பம் அதுவாக இருந்தால் நாம் இறப்பதை எவராலும் தடுக்க முடியாது."

அப்பொழுது ஆ... என்ற ஒரு சத்தம். கீழே பார்த்தன நாரைகள். வேடனை ஒரு பாம்பு தீண்டி அவன் தடுமாறி கீழே அலறிக்கொண்டு விழுந்தான். அவன் குறிபார்த்துக்கொண்டிருந்த அம்பு தடுமாற்றத்தால் வல்லூறுவின் உடலில்பட்டு அது கீழே விழுந்து இறந்தது.

ஆண் நாரை பெண் நாரையைப் பார்த்து, "இதுதான் இறைவனின் விருப்பம்" என்றது. பெண் நாரை அவசரப்பட்டு



முடிவுக்கு வந்ததையிட்டு வெட்கப்பட்டுத் தலைகுனிந்தது. பின்பு ஆண் நாரை பெண் நாரையைப் பார்த்து, "இறைவனின் விருப்பத்தை பார்த்தாயா? ஒன்றை மட்டும் தெரிந்துகொள். எதிர்காலத்தில் நமக்கு என்ன நடக்கும் என்பதைக் கணித்துக் கூறும் சக்தி மனிதன் உட்பட எந்த உயிரினத்திற்கும் இல்லை. அது இறைவன் மட்டுமே வைத்துக்கொண்ட இரகசியம். மனிதர் அதைக் கணித்துக் கூறுகின்றார் என்றால் அது பொய்யானது. புரிந்துகொண்டாயா?" என்றது.

"இந்தச் சம்பவத்திற்குப் பிறகு எனக்கு எல்லாம் விளங்குகிறது. எனது அறிவைக்கொண்டு சிந்தித்துச் செயல்படுவேன்" என்றது பெண் நாரை. அதைக்கேட்ட ஆண் நாரை மகிழ்ச்சி அடைந்தது. பின் இரண்டும் மரத்தைவிட்டுக் கிளம்பித் தங்கள் இருப்பிடத்தை நோக்கிப் பறந்தன.

## சமாதானப் பூங்காற்று



சமாதானப் பூங்காற்றே
சுவாசத்தில் உறைந்திடுவாய்
சமத்துவமாய் வாழ்ந்திடவே
சம்மதமும் தந்திடுவாய்!
நண்பர்களாய் நாம் வாழ
நல்லுறவை ஏற்படுத்த
சமாதானப் பூங்காற்றே
எம்மீது வீசிடுவாய்!

*தொ. மேரி கில்லா,*
*திருக்குடும்ப கன்னியர் மடம்,*
*பெரிய பண்டிவிரிச்சான், மடு.*

## நட்பு




பள்ளிப் பருவத்தில் நான் ஒரு
மாணவியாய் இருக்கையிலே
நீயும் என்னோடு
வந்து அமர்ந்தாயே.
எனக்குத் துன்பம் என்னும்
காலம் வந்தபோது
உற்ற நண்பியாய்
என் துன்பத்தில் பங்கெடுத்து
இன்பத்தில் என்னை மகிழ வைத்தாய்
இதற்குப் பெயர்தான் நட்பு

கே. லோறன்ஸ் நிவியா டலிமா,
தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.

## சமாதானம் தாங்க இயேசுவே

சின்ன யேசு பாலனே சிறுவன் என்னைப் பாருமே
சிறந்த அருள் தாருமே சிரித்து நாமும் வாழவே



சாந்தி அமைதியோடு - நல்
சமாதானமும் வேண்டுமே
சந்தோசமாய் நாம் வாழ
சமத்துவமும் வேண்டுமே!

விரைவாய்த் தாரும் இயேசுவே – நீரும்
விரைந்து வாரும் இயேசுவே!

*அ. அரோன், தரம் : 01,*
*புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி.*

## நேரத்தை எப்படித் திட்டமிடுவது?

❋ எது உங்களுடைய பொறுப்பு, எது உங்களுடைய பொறுப்பு அல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.
❋ உங்களுடைய இலக்குப்பற்றித் தெளிவாக இருங்கள். எவற்றிற்கு முக்கியத்துவம் என்பதை இனம் காணுங்கள்.
❋ அன்றன்றைக்கான காரியத்தை அறிந்துகொள்ளுங்கள்.
❋ எது அவசரமானது, எது முக்கியமானது என்பதைப் பிரித்தறியுங்கள். இவை உங்களுடைய நேரத்தைத் திட்டமிட உதவும்.

*செ. சோபா சயந்தினி, தரம் 11,*
*மன்/ ஆண்டாங்குளம் றோ.க.மா.வி.*

## சிந்திக்கச் சில துளிகள்



♣ உங்கள் இதயத்தை ஊடுருவிப் பார்த்து அதில் எந்தத் தவறும் இல்லாவிட்டால் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? எதற்காகப் பயப்பட வேண்டும்?
♣ பழைய காலத்தை மாற்ற முடியாது. ஆனால் அதைப் போவதற்கு விட்டுவிடலாம்.
♣ கண்ணுள்ளவன் விழுவதைவிட குருடர் விழுவது குறைவாகவே உள்ளது.
♣ ஒரு இன்று என்பது இரண்டு நாளைக்கு மேல் தகுதியானது.
♣ பணி இன்றி இருப்பது. ஓய்வல்ல.
♣ ஓய்வு ஒரு அழகான ஆடை. அதைத் தொடர்ந்து அணிவது நல்லதல்ல.
♣ கடந்துபோன நேரம் ஒருபோதும் திரும்பி வருவதில்லை. காலத்தைவிடப் பழிவாங்கக்கூடியது வேறு ஒன்றுமில்லை.
♣ நேரத்தைத் தள்ளிப்போடாதே. தாமதங்கள் அபாயமான முடிவைக் கொண்டுள்ளன.

*ப. குயின்ரா, சாளம்பன்.*

## மனித நேயம்



அன்பு காட்ட முயற்சி செய்
அரவணைக்க முயற்சி செய்
ஆணவம் அழிக்க முயற்சி செய்
என்றும் மிளிரும் மனித நேயம்!

கடவுளை வணங்க முயற்சி செய்
கருணை காட்ட முயற்சி செய்
கல்வியைக் கற்க முயற்சி செய்
என்றும் மிளிரும் மனித நேயம்!

உண்மை பேச முயற்சி செய்
உதவி செய்ய முயற்சி செய்
ஊருடன் வாழ முயற்சி செய்
என்றும் மிளிரும் மனிதநேயம்!

*அ. ருஷாந்தினி, தரம்: 06,*
*பொன்தீவுகண்டல், அளவக்கை.*

## வாழ்க்கை சிறக்க சில வரிகள்....!

⋆ எதையும் பிறரிடத்தே எதிர்பார்க்காதவனுக்கே இறைவன் எதையும் வாரி வழங்குவார்.
⋆ நீ பிறரை நினைக்கும்போதுதான் இறைவன் உன்னை நினைப்பார்.
⋆ மரணத்தைப்பற்றி அஞ்சும்போதெல்லாம் ஒருவன் கோழை ஆகின்றான்.
⋆ கொடுமையைக் கண்டு கொந்தளிப்பவனே உண்மையான மனிதன்.
⋆ நீ செய்யும் செயல்களை வைத்தே சமுதாயம் உன்னை மதிக்கும்.
⋆ தான் என்ற கர்வம் இல்லாதபோதுதான் பிறர் உன்னை மனிதராகப் பார்ப்பர்.

*ஞா. திவ்வியா, இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

## மெல்லச் சிரிங்க... மெல்லச் சிரிங்க..



தாதி : கால் சத்திர சிகிச்சைக்குப் பின் நன்றாகக் குதிக்கலாம் என்று நோயாளிக்குச் சொன்னது தப்பா போச்சு டாக்டர்.
டாக்டர்: ஏன், அவர் இப்ப என்ன செய்கிறார்?
தாதி : நோயாளி பத்தாம் மாடியிலை இருந்து குதிச்சிட்டார் டாக்டர்!

*அ. லோறான்ஸ், பீரிஸ்*

* * * * *

சீலன் : எங்கட அப்பா சிக்கனமானவர். ரேடியோவில் செய்தி மட்டும்தான் கேட்பார்.
பாலன் : உதென்ன பெரிய சிக்கனம். எங்கட அப்பா செய்திச் சுருக்கம் மட்டும்தான் கேட்பார்.

*செ. மேரி ஜெசில்டா, இல,சி.08, மடுக்கோவில்*

* * * * *


நீதிபதி : ஏம்மா, உன் மாமியாரை வேண்டும் என்றுதானே கிணத்தில தள்ளிவிட்டாய்.
குற்றவாளி : ஐயையோ! இல்லவே இல்லைங்க வேணாம்னு தாங்க கிணத்துல தள்ளினேன்.

*க. அசோக் குமார், தட்சனாமருத்மடு.*

* * * * *

பைத்தியம் 1 : ஏன் அவனின் தலையை வெட்டினாய்?
பைத்தியம் 2 : சத்தம் போடாதே. அவன் எழும்பித் தேடட்டும்


*கொன்சி குரூஸ், தலைமன்னார் கிராமம்.*



நோயாளி : டாக்டர் காதில இரயில் ஓடுற மாதிரி சத்தம் வருது.
டாக்டர் : மருந்து போடுறன் எப்படி இருக்குன்னு சொல்லுங்க!
நோயாளி : டாக்டர் சத்தம் வரல,..!
டாக்டர் : எந்த ஸ்டேஷனிலேயாவது நின்று இருக்கும். விடுங்க.

*திருமதி. க. தீபா, வளனகம், மன்னார்.*

* * * * *



ஆறுமுகம் : வட்டிக்குக் காசு கொண்டு வந்துள்ளேன். எத்தனை வீதம் வட்டி போட்டுத் தருவீர்கள்?
கடைக்காரன் : இங்கு 6% படிதான் வட்டி வழங்குகிறேன்
ஆறுமுகம் : இவ்வளவு குறைவாக இருக்கிறது. இது கடவுளுக்கே பொறுக்காது.
கடைக்காரன் : மேலிருந்து பார்க்கும் கடவுளுக்கு 6% 9% ஆகத்தான் தெரியும்.

*அ. லவுசன்,*
*முதலியார் குளம், செட்டிகுளம்.*

## துளிப்பா



### சமாதானம்
உண்மை உள்ளம் கொண்டுள்ள
நட்பின் வாயில் மலர்ந்த முல்லை.

### தேடல்
உயிருள்ளவரை – எம்மோடு
ஒட்டியிருக்கும் ஒட்டுண்ணி.

### நட்பு
அன்புக் கடலில், தெளிந்த நீரில்
ஆழமற்றிருக்கும் அற்புத மலர்!

### அம்மா
உலகத்தின் விடியல்!
உயிருள்ள ஓவியம்!

*ஆர். றொபின்சா,*
*வண்ணாகுளம்.*

### சமயம்
சேற்றில் மலர்ந்த
தாமரைக்கும்,
ஒளி கொடுக்கும்
ஆதவன்!

### அழுகை
துன்பத்திலும்
இன்பத்திலும்
வரும் ஓர்
உன்னத கொடை.

### வேதனை
பட்டவன் மட்டும்
உணரும் பொருள்!

### நிழல்
கூலி பெறா
ஒரேயொரு ஊழியன்!

### நேரம்
ஓய்வெடுக்கா......,
ஊழியன்!

*டீ.ஜெனட் நீரஜா*
*கண்டி*

# உலகத் திருச்சபை செய்திகள்

## அணு சக்திகள் சமாதானத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்

### – திருத்தந்தை அறைகூவல் –

அணு சக்தி ஏழை மக்களின் நல் வாழ்வுக்குப் பயன்படும் மாபெரும் சக்தியாக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

தெற்கு உரோமையில் உள்ள கான்பொர்மோ அரண்மனையில் நடைபெற்ற அகில அணுசக்தி கூட்டமைப்பின் 50ஆம் ஆண்டு நிறைவு விழாவில் திருத்தந்தை உரையாற்றுகையில், அகில உலக அளவில் அணு சக்தியின் ஆற்றல் பெற்றுள்ள வளர்ச்சிப் பணிகளை வியந்து பாராட்டினார். உலகம் முழுவதும் மக்களின் உடல் நலத்திற்காகவும், சமாதானத்திற்காகவும், நாட்டின் செழுமையான வளர்ச்சிக்காகவும் அணுசக்தி பயன்படுத்தப்பட வேண்டுமேயொழிய அழிவிற்காக அல்ல என்பதைத் தெளிவுபடுத்தினார்.

அணுசக்தியின் நேர்மறையான பயன்பாட்டின் மூலம் ஒரு நாட்டின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். அதற்கான முயற்சிகளை ஒவ்வொரு நாடும் மிக விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அனைவரும் ஒரே இறைவனின் பிள்ளைகள் என்ற உணர்வோடு சகோதர அன்பில் நிலைத்திருக்க வேண்டும் என்றும் திருத்தந்தை அறிவுறுத்தினார்.



## குடும்பங்களின் நற்செய்தி அறிவிப்பு பற்றிய திருத்தந்தையின் கருத்து

லொரென்சோ கோடிகடோரே என்னுமிடத்தில் தன்னுடைய விடுமுறையை செலவிட்ட திருத்தந்தை அவர்கள் புனித ஜஸ்டின் மறைசாட்சி ஆலயத்தில் நடந்த கூட்டத்தில் கத்தோலிக்க குடும்பங்கள் விசுவாசத்தில் வளர்க்கப்பட்டுள்ளதைப் பற்றிக் கூறினார்.

கிறிஸ்தவம் என்பது கொள்கையினுடைய சிக்கலான கட்டு அல்ல. அது ஒரு தனிப்பட்ட கலைஞனுக்காக அல்ல. மாறாக, மிகவும் எளிமையானது, தினசரி வாழ்வு முறை. கிறிஸ்துவுக்காக சாட்சியம் பகிர்தல் மற்றும் நல்லவற்றை எடுத்துரைத்தல் போன்றவையே உண்மையான கிறிஸ்தவனுடைய வாழ்வு ஆகும். விசுவாசத்தால் ஊட்டம்பெற்ற குடும்பங்களின் வாழ்க்கை முறை, அவர்கள் உதவி செய்யும் செயல், கடவுளை, பிறரை, தன்னை அன்பு செய்யும் விதம் போன்றவற்றைப் பார்க்கும்போது இதுவே மிகவும் சிறந்த அறிவித்தல் என எனக்குத் தோன்றுகிறது எனத் திருத்தந்தை கூறினார். என்னைப் பொறுத்தவரை கத்தோலிக்க குடும்பங்கள் மற்றும் தனிநபர் விசுவாசத்தால் ஈர்க்கப்பட்டிருப்பதுதான் மிகவும் ஆறுதல் அளிக்கும் அறிவித்தலாக உள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

## உலகில் சண்டைகளையும், போர்களையும் நிறுத்துக!

### – திருத்தந்தை –

உலகில் ஆயுதப் போட்டிகள் புறக்கணிக்கப்பட்டு சண்டையை நிறுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமாறு மீண்டும் உருக்கமாக திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அழைப்பு விடுத்தார். அவர் கோடை விடுமுறையை செலவிட்ட வட இத்தாலியின் டோலோமைட் ஆல்ப்ஸ் மலைப் பகுதியின் லொரென்சாகோ கதேரே என்ற கிராமத்தில் ஞாயிறு (22 ஜுலை) நண்பகல் மூவேளை செப உரையில் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இத்தாலிக்கும் ஆசியாவுக்கும் இடையே உள்ள மலைப்பகுதியில் முதல் உலகப்போர் தொடங்கியதைக் குறிப்பிட்டு, "அந்தச் சண்டையின் சுவடுகளை இன்னும் இந்த மலைப்பகுதியில் காண முடிகின்றது" என்றார்.

இந்தப் பயனற்ற இரத்தம் சிந்தலும், கொலைகளும் நிறுத்தப்படுமாறு போரிட்ட நாடுகளின் தலைவர்களுக்கு திருத்தந்தை 15ஆம் பெனடிக்ற் 1917 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1ம்தேதி அழைப்பு விடுத்ததையும் சுட்டிக்காட்டினார்.

அத்திருத்தந்தை போரை மட்டும் கண்டிக்கவில்லை. மாறாக, சட்டத்தின் ஒழுக்க நெறி சக்தியின் அடிப்படையில் நீதி மற்றும் நிலையான அமைதியை கட்டி எழுப்புவதற்கான வழிகளையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

திருத்தந்தை 6ம் பவுலும், திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுலும் "சண்டை ஒருபோதும் வேண்டாம்" என்று அழைப்பு விடுத்தனர். "இவர்களின் குரல்கள் மறக்கப்பட்டு விடக்கூடாது. இந்த மலைப்பகுதியில் அழகு கொஞ்சும் இயற்கை நமக்கு எதை நினைவு-படுத்துகிறதென்றால், இந்தப் பூமி என்ற நத்தவனத்தை பயிரிட்டு பாதுகாக்க வேண்டும். மனித சமுதாயம் இறைவனோடும் ஒருவர் மற்றவரோடும் அமைதியில் வாழ்ந்தால் இவ்வையகம் உண்மையிலேயே பேரின்ப உலகமாகக் காட்சி தரும்.

துருதிருஷ்டவசமாக பாவம் இந்த உலகில் பிரிவினைகளை ஏற்படுத்தி மரணத்திற்குக் காரணமாகி இந்த இறைத்திட்டத்தை தோற்கடித்து விடுகிறது. இந்தத் தீமையின் சோதனைக்கு மனிதன் உள்ளாகி ஒருவர் மற்றவருக்கு எதிராகப் போரிட்டுக்கொள்கின்றான். அதன் விளைவு என்ன? உலகமாகிய வனப்புமிக்க பூந்தோட்டம் தொடர்ந்து நரகத்தின் சுவடுகளுக்குத் தன்னைத் திறந்து விட்டுக்கொண்டிருக்கின்றது. எனவே பயனற்ற கொலைகள் நிறுத்தப்படட்டும், உலகில் அமைதி நிலவட்டும்" என்று திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அழைப்பு விடுத்தார்.

## சிறையில் நான்கு சீனக் குருக்கள்!

சீன நாட்டின் தேசிய கூட்டமைப்பில் குருக்கள் சேர்க்கப்பட வேண்டும் என்றும், மதச் சடங்கு முறைகளை சீன தேசிய அரசு கவனித்துக்கொள்ளும் என்றும் சீன அரசு ஆணை பிறப்பித்தது. அதற்கு மறுப்புத் தெரிவித்த குருக்கள் நான்கு பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். அருட்திரு லியாங் அகின் (35), அருட்திரு வாங்சாங் (41), அருட்திரு கோஜின் போவா (34) ஆகிய மூவரும் குகையில் அடைக்கப்பட்டு, பிறரோடு பேசுவதற்கும், தண்ணீர் குடிப்பதற்கும் மறுப்பு தெரிவிக்கப்பட்டது என்பது மிகவும் வருந்தத்தக்கது. அருட்திரு கூயிதாய் அண்மையில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது விபத்துக்குள்ளாகி காயமான நிலையில் மருத்துவ உதவிகள் மறுக்கப்பட்டவர். இவரும் தேசிய கூட்டமைப்பில் சேர மறுத்ததால் சிறையில் அடைக்கப்படவுள்ளார். கர்தினால் குஞ் அவர்கள் கூறிய செய்திப்படி குறைந்தது ஐந்து ஆயர்கள் மற்றும் 15 குருக்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பொன்விழாக் காணும் இறைபணியாளர்களுக்கு வங்காலையில் விழா

இவ்வாண்டு பொன்விழாக் காணும் இறைபணியாளர்கள் அருட்பணியாளர் ஏ. விக்ரர் குரூஸ் (அமதி), அருட்சகோதரர் எஸ். பப்ரிஸ்ற் குரூஸ், திருக்குடும்ப அருட்சகோதரிகள் மேரி அலிஸ், மேரி மரிய கிளாறா, மேரி இயூஜின் ஆகியோருக்கு வங்காலையில் மாபெரும் பாராட்டு விழா இடம்பெற்றது.

கடந்த செப்ரம்பர் மாதம் 06ம் திகதி நடைபெற்ற இவ்விழாவில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை உட்பட பல குருக்கள், துறவியர், இறைமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அன்றைய தினம் யூபிலி விழா நன்றித் திருப்பலியை யூபிலி நாயகர்களில் ஒருவரான அருட்பணியாளர் ஏ. விக்ரர் குரூஸ் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். திருப்பலியின் முடிவில் பாடசாலை மண்டபத்தில் விழா நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் முன்னாள் மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சூசைதாசன் அவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.





## மகாசங்கத்துடனும் ஏனைய சமயத்தலைவர்களுடனும் இணைந்து பேச்சுக்கள் மூலமான சமாதானத்தீர்வுக்கு உதவ இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தயார்

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவிப்பு

**இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை ஆவணி மாதம் 21,23ம் திகதிகளில் கூடிய போது இந்த அறிவிப்பை ஜனாதிபதி மகிந்தராஜபக்சவிற்கு அனுப்பி வைத்தனர். தலைவர் மேதகு வியான்னி பெனான்டோ ஆண்டகை மற்றும் செயலர் மேதகு நோபட் அன்றாடி ஆண்டகை ஆகியோர் கையொப்பம் இட்ட மேற்படி அறிக்கையின் முழுமையைக் கீழே தருகின்றோம்.**

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையினர் ஆகிய நாம் எமது செபம் கலந்த வாழ்த்துக்களை முதலில் தங்களுக்குத் தெரிவிக்கின்றோம். எமது கூட்டத்தொடர் ஆவணி மாதம் 21ம் திகதி பொறளை பல்கம் பிளேஸ்சில் உள்ள எமது இல்லமான லங்காராமாவில் கூடியபோது எமது நாட்டில் தொடர்ந்தும் நடைபெற்று வரும் போரினால் ஏற்படுகின்ற மனித இனத்துக்கெதிரான குற்றங்கள் பற்றி ஆயர்கள் தமது ஆழ்ந்த கரிசனையை தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்த அரசு எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டுகிறோம். இருப்பினும் மிக அதிக கவனம் இந்த மக்களின் துன்பங்களில் - குறிப்பாக பாடசாலைக் கல்வி தடைப்பட்டு அங்கலாய்க்கும் பிள்ளைகளின் துன்பத்தில் - செலுத்தப்பட வேண்டும். ஏராளமானவர்கள் தாம் திரும்பவும் தம் சொந்த இடங்களுக்குச் சென்று தமது வழமையான தொழிலான மீன்பிடித்தல், விவசாயம் செய்தல் போன்றவற்றில் ஈடுபட அனுமதிக்கும்படி தங்களிடம் இரக்கமாகக் கேட்டுள்ளனர்.

அரசினால் வழங்கப்படும் நிவாரண உதவியை இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை பெற்றுக் கொண்டாலும் தங்கள் குடும்பங்களுக்கு அது போதுமானது அல்ல என அவர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

அனேக அகதி முகாம்களில் அடிப்படை வசதிகளான சுத்தம், சுகாதாரம் குடும்பங்களுக்கிடையே தனிமைத் தன்மை என்பன இல்லை. இங்கு மிகவும் முக்கியமானது என்னவென்றால் சிறுவர்கள், இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அந்தர நிலையும் நிரந்தரமற்ற தன்மையும் ஆகும். இது அவர்களது மனநிலையைப் பெரிதும் பாதிக்கின்றது. மேன்மை தங்கிய தங்களிடம் இந்த மனவருத்தங்களுக்கு மிக விரைவாகத் தீர்வு காணவும் அவர்களை மீள்குடியமர்த்தவும் அவர்களும் எமது நாட்டுப் பிரஜைகள் என்கிற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

எல்லாவகை வன்முறையையும் பயங்கர-வாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எப்படி இருப்பினும் மக்களின்மீது திணிக்கப்படும் சுமைகளையும் அளவிற்கு அதிகமாக உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவையும் தாங்கள் அறிவீர்கள் என்றே நம்புகின்றோம். தாங்கள் வெளியிட இருக்கும் அரசியல் தீர்வுத்திட்டம் பற்றி எமது மக்களோடு இணைந்து நாமும் எதிர்பார்த்திருக்கிறோம். இந்தத் தீர்வுத் திட்டம் இன்னும் வெளியிடப்படாதது எம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் மோதல் நிலை தொடர்ந்து மக்களுடைய துன்பமே அதிகரிக்கிறது.

தீர்வுக்கான முயற்சிகள் பின்தள்ளிச் செல்ல செல்ல எமது நாட்டு மக்களின் துன்ப துயரம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வன்முறைக் கலாசாரமும் கொலையும் அதிகரித்துச் செல்வது எமது நாட்டிற்கு நல்லதல்ல. இதனால் எமது சமூகத்தில் கட்டுப்பாடுகளும் விழுமியங்களும் இல்லாமலே போகப்போகிறது.

தாங்கள் தாங்கவேண்டிய கடினப் பணிகள் பற்றி நாம் அறிவோம். சமயத் தலைவர்களாக பேச்சுக்கள் மூலம் தீர்வினை அடைவதற்கு எமது முழு ஆதரவையும் தந்து நிற்கின்றோம். மகாசங்கத்துடனும் ஏனைய சமயத்தலைவர்-களுடனும் இணைந்து பேச்சுக்கள் மூலமான சமாதானத் தீர்வுக்கு உதவ இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினர் ஆகிய நாம் தயாராக உள்ளோம்.

எமது நாட்டை மிக நீண்டகாலமாக பாதித்து வரும் இந்த யுத்தத்தை உடன் முடிவுக்கு கொண்டுவர நல்மனது கொண்ட அனைத்துச் சக்திகளையும் திரட்டி அவசரமாக நல்ல முடிவு காண்பது அவசியமாகும். விடுதலைப் புலிகளுக்கும் இது தொடர்பான வேண்டுகோள் ஒன்றை நாம் விடுத்துள்ளோம். வன்முறையைக் கைவிட்டு பேச்சுக்கள் மூலம் நேர்மையான விதமாக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர செயற்படும்படி வேண்டியுள்ளோம். மனித உயிர்கள் இரண்டு பக்கங்களிலும் வீணாக அழிக்கப்படுகின்றன. எமது நாட்டின் செல்வமும் வளங்களும் மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்விற்குப் பயன்பெறாது அழிந்துபோகிறது என்றும் நாம் அவர்களுக்கு தெரிவித்துள்ளோம்.

## 31ம் நாள் நினைவு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 - 03 - 1926 | 09 - 09 - 2007 |

### வீ. அருளப்பு லேயம்

**(தலைமன்னார் கிராமம்)**

*"சீவியத்தில் என்னை அன்பு செய்தவர்களே, மரணத்தில் என்னை மறவாதிருங்கள்"*

இவரின் ஆன்ம சாந்திக்காக தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் 09.10.2007 அன்று காலை 6.00 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்புமனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.*

*தகவல்: சி. கொன்சி குரூஸ்.*

# கலை இலக்கியச் சாரளம்

## கவிதைக் களம்

### தேடல்

மனிதத்தை தொலைத்த
மானிட பூமியில்
மனிதனைக் காண்பதற்கான
தேடல் ......!

கலாச்சார இறக்குமதி – அதனால்
கழிவாகிப் போயிற்று மனிதக் கலாச்சாரம்.
பழகிப்போன நவீனத்தால்
பற்றாக்குறையாகிப்போயிற்று பண்பாடு.

சுயநலம் சோற்றிலும்
ஒட்டிக்கொண்டிருக்கின்றது.
சுற்றத்தார் அயல் நாட்டில் வாழ்பவர்போல்
சுற்றியுள்ள ஆறு அடி மதில் கொண்டு வாழும்
சுதந்திரமில்லாத வாழ்க்கையாயிற்று!

கடமைகளை நிறைவேற்ற மாத்திரம்
கடவுள் கட்டாயமாக அழைக்கப்படுகின்றார்.
தனிமனிதனின் சுதந்திரம் தரணியில்
தனித்துவமின்றிப் போயிற்று.

மனிதம் அழிந்து
மனித வாழ்க்கை பகடைக்காயாகிப் போயிற்று.
மரணித்துக்கொண்டிருக்கும்
மனிதத் தேடலில் மனித நேயம் ஓங்க
மனித மையம் நோக்கி – எம்
மனப்பான்மையை வளர்த்திடுவோம்.

*M. R. றெஜினா,*
*கூமாங்குளம், வவுனியா.*

### துறவி

என் உடை மட்டுமல்ல
உள்ளமும் தூய்மையானது.
இது புரிந்துகொண்டவர்களுக்கு மட்டும் புரியும்
தெரிந்துகொண்டவர்களுக்கு மட்டும் தெரியும்.

இத்தனை காலமும் நித்திரை செய்தது போதும்
இளைஞரே புறப்படுங்கள்!
யுத்தம் இல்லாமல் சத்தம் இல்லாமல்
சமாதானம் புரிவோம்.
பணத்துக்காக மனித உயிர்களைப்
பணயம் வைக்கும் தலைவர்களுக்கெல்லாம்
தகனம் வைப்போம்.
உலக ஆசைகளை உதறித் தள்ளுவோம்
கண்ணீர் சிந்தும் கண்களுக்கு
கைக்குட்டையாவோம்.
அநாதைகளுக்கு அன்னையாவோம்.
பரிதவிக்கும் பாவிகளுக்கு பாசத்தை ஊட்டுவோம்
பாமர மக்களுக்கு பாடம் புகட்டுவோம்.
சேரிக்குள்ளும் சேவகம் புரிவோம்.

குருக்களே இளையோருக்கு
ஆன்மீக உரமூட்டுங்கள்.
பெற்றோரே உங்கள்
பிள்ளைகளுக்கு வழிகொடுங்கள்.
உலகத்தை வெல்ல
புறப்படு மகனே புறப்படு!
காலம் தொலைவில் இல்லை.

எம். கொண்சி, ஆட்காட்டிவெளி.

## சிறுகதை

### தியாகச் சுடர்

அ.வெஸ்லிக்கா முறால்,
முத்தரிப்புத்துறை



இரம்மியமான மாலைப் பொழுதினிலே சந்தோஷ் தனது அலுவலகத்தில் வேலையை முடித்துவிட்டு வீடு திரும்பியிருந்தான். தனது அன்புத் தங்கை நர்மதாவின் வருகையை எதிர்பார்த்த வண்ணம் நாற்காலியில் அமர்ந்து சுவரில் மாட்டியிருந்த தனது குடும்பத்தின் புகைப்படத்தை உற்றுநோக்கினான். அவனது மனதில் கடந்தகால நிகழ்வுகள் அனைத்தும் நிழலாடின. நடந்தவை அனைத்தும் உண்மையானவையா? என்பதை அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

சந்தோஷ் நர்மதா இருவருமே பெற்றோரின் அன்பு பிள்ளைகள், வசதிபடைத்தவர்கள். சந்தோஷின் பன்னிரண்டாவது பிறந்தநாள் அன்று சந்தோஷ் குடும்பம் தங்களது காரிலேயே கோவிலுக்குச் செல்லும் வழியில் பஸ் ஒன்றுடன் மோதியதால் நால்வரும் ஆங்காங்கே எறியப்பட்டார்கள்.

நால்வரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாலும் பிள்ளைகள் இருவரையுமே காப்பாற்ற முடிந்தது. ஆனாலும் அவர்களை ஆதரிக்க யாரும் முன்வரவில்லை. சந்தோஷ் தனது தங்கையை அழைத்துக் கொண்டு தனது வீட்டை நோக்கிச் சென்றான். தங்களுக்கிருந்த சொத்தை விற்று தனது தங்கையைப் பிரபல கல்லூரியொன்றில் சேர்த்து கல்வியைத் தொடர வாய்ப்பளித்தான். தனது கல்வியை இடைநிறுத்திய சந்தோஷ் ஒரு அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு தனது தங்கையை வளர்த்தான்.

பட்டாம் பூச்சியைப்போல் சிறகடித்துத் திரியும் நர்மதாவுக்கு எல்லாமே அண்ணன்தான். சிறுவயதில் பெற்றோரை இழந்த நர்மதாவுக்கு அம்மாவாக அப்பாவாக சந்தோஷ் இருந்து அவளுக்குரிய கடமைகளைச் செய்துவந்தான். ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்த சந்தோஷை இடைமறித்து, "அண்ணா" என்றவள், "நேரமாகிவிட்டது, இரு ரீ எடுத்துக்கொண்டு வருகின்றேன்" என்று உள்ளே சென்ற நர்மதா ரீ கொண்டுவந்து கொடுத்துவிட்டு சந்தோஷ் அருகில் அமர்ந்தாள். "அண்ணா எனக்கு கொலுசு வாங்கித் தருவியா?" என்று செல்லமாகக் கேட்டாள். "நர்மதா, நிச்சயமாக! இந்த மாத இறுதியில் சம்பளம் வாங்கியதும் கொலுசுடன் வருகின்றேன்" என்றான்.

இதைக்கேட்டதும் நர்மதா மகிழ்ச்சியில் திளைத்தாள். இவர்களது பேச்சை இடைமறித்து, "சந்தோஷ் வேலை முடிந்துவிட்டதா? உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். உன்னைக் காணாமல் என்னமோ மாதிரியிருக்குதடா" என்றான் மூவின். சந்தோஷின் உயிர் நண்பன் மூவின். "வாடா மூவின். இப்ப வரலாம் என்றுதான் இருந்தேன். நீ வந்துவிட்டாய்" என்ற சந்தோஷ், "நர்மதா நீ போய் படிமா. நாளைக்கு உனக்கு பரீட்சையல்லவா" என்றான். "சரியண்ணா நான் படிக்கணும்." என்று உள்ளே சென்ற நர்மதாவை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான் மூவின்.

மூவினுக்குத் தனது நண்பனின் தங்கை நர்மா தனது வருங்கால மனைவியாக வேண்டும் என்ற எண்ணம் நீண்ட நாட்களாகவே இருந்தது. எனினும் நர்மதாவிடமும் சந்தோஷிடமும் தனது காதலைத் தெரிவிக்கமுடியாமல் தவித்துக் கொண்டு இருந்தான். "என்னடா மூவின் எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்காக யோசனை" என்றவனை "ஒன்றும் இல்லை சந்தோஷ் வாடா சினிமா பார்க்கப் போகலாம்" என்றான். "மூவின் முடியாதுடா. லேசா தலைவலிக்கிற மாதிரிக் கிடக்குது. நாளைக்குப் போகலாம்" என்றான். "சரியடா நேரமாச்சு நான் போகவேண்டும்" என்று எழுந்து வெளியே சென்றாலும் மூவின் நர்மதாவை தன் நெஞ்சில் கூடவே கூட்டிச் சென்றான்.

நாட்கள் சென்றன. நாட்கள் வாரமாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாக உருண்டோடின. காலப்போக்கில் தனது நண்பன் மூவினின் எண்ணக் குமுறலை அறிந்த சந்தோஷ் உயர்தரம் முடித்துவிட்டு வீட்டில் இருக்கும் நர்மதாவிடம் லேசாகக் கேட்டுவிட்டான். சந்தோஷின் எண்ணத்தை அறிந்த நர்மதா "அண்ணா உன்னை விட்டுப் பிரியமாட்டேன். எனக்குத் திருமணம் வேண்டாம்" என்றவளிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் நர்மதா சம்மதிக்கவில்லை.

இருந்தும் காலப்போக்கில் சரியாகி விடும் என்ற எண்ணத்துடன் மூவினும் நர்மதாவின் சம்மதத்திற்காகக் காத்திருந்தான். அன்று வேலை முடிந்து வீடு திரும்பிய சந்தோஷ் நர்மதாவின் முகம் சோர்ந்து அவள் வேதனையால் துடிப்பதைக் கண்டான். "நர்மா... நர்மா என்னம்மா?" என்றவன். ஓடிச்சென்று தங்கையைத் தாங்கிக்கொண்டான். "அண்ணா எனக்கு இந்தப் பக்கம் வலிக்கின்றது" என வயிற்றுப் பகுதியைக் காட்டி அவனது மடியிலே துவண்டுபோனாள். என்ன செய்வதென்பதை அறியாத சந்தோஷ் கலங்கிப்போனான்.

அவளை டாக்டரிடம் காட்டுவதற்காக மருந்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதித்தான். எதிர்பாராத பெரும் இடியை நர்மதாவை பரிசோதித்த டாக்டர் மூலம் அறிந்து கொண்டான்.

அழுதான், குமுறினான், என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை. அவளின் இரண்டு கிட்னிகளும் செயலிழக்கும் நிலையில் இருந்தன. உடனே கிட்னி ஒன்றை மாற்ற வேண்டும். சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். நர்மதாவை மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு வீடு திரும்பிய சந்தோசை இடைமறித்து மூவின், "சந்தோஷ், ஏன்டா சோகமாய்ப் போகிறாய்?" என்றான்.

மூவினைத் தழுவி அழத்தொடங்கினான். நிலைதெரியாத மூவின் டாக்ரர் மூலம் விஷயத்தை அறிந்து தனது கிட்னி ஒன்றை இழக்க முன்வந்தான். தனது ஆலோசனையை டாக்டரிடம் தெரிவித்து சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தான். கிட்னி அறுவைச் சிகிச்சையும் வெற்றிகரமாக நடந்தேறியது. மூவின் நர்மதாவோடு சேர்ந்து வாழ முடியாவிட்டாலும். தனது கிட்னியை அவளுக்குத் தானமாக வழங்கியதன் மூலம் நர்மதாவோடு வாழ்கின்றான். தனக்குச் சொந்தங்களே இல்லை என்று ஏங்கிய சந்தோஷிற்கு தன் தங்கை வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்த மூவின் தியாகச் சுடராக ஒளி வீசுகின்றான். ●

---

தொடர் கட்டுரை – அங்கம் 52

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -



### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்

### 19. "பாசோ" உடக்கு பாஸ் பாடுகளின் காட்சிகள்

#### மனிதர் நடிக்கும் காட்சிகள்

இப்பின்புலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் வடபகுதியில் பாடுகளின் காட்சிகள் மனிதர்களினால் நடிக்கப்படுவதை யாழ் மக்கள் சற்றேனும் விரும்பவில்லை. குறிப்பாக, கிறிஸ்துவின் பாத்திரத்தை ஏற்று நடிப்பதற்கு எந்த மனிதனும் தகுதியுள்ளவனல்லன் என்னும் நிலைப்பாடும், மன உறுதியும் பாடுகளின் காட்சிகள் மனிதர்களால் நடிக்கப்படுவதற்குப் பெரும் தடையாகவும், சிக்கலாகவும் விளங்கியது.

எனினும் வண. லோங் OMI அடிகள் தாம் மேற்கொண்ட செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொண்ட தடைகளில் மனம் தளரவில்லை. முதலில் இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுவதுவதற்கு இதில் பங்குகொண்ட ஆசிரியர்களையும், மாணவர்களையும் இணங்க வைப்பதற்கு பெரும் சிரமம் ஏற்பட்டதாக அறியப்படுகின்றது. யாழ்பாண மக்களின் சமய, சமூக, கலாசார, உளவியல், சிந்தனை மரபுப் பின்னணியை நன்கு அறிந்தவர்கள் இவ்வாறு மக்கள் மத்தியில் நிலவிய தயக்கத்தை நன்கு புரிந்துகொள்ளும் நிலையைக் கொண்டிருப்பர்.

1952இல் பத்திரிசியார் கல்லூரியில் மேடையேற்றப்பட்ட பாடுகளின் நாடகத்திற்கு விளையாட்டு மைதானத்தில் ஒரு பகுதியில் இயற்கையில் அமைந்திருந்த மணற்திட்டியே மேடையாக விளங்கியது. இதில் இப் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் என எழுபது நடிகர்கள் பாத்திரமேற்று ஆங்கில மொழியில் நடித்தனர்.

மனிதர்கள் ஐரோப்பாவில் வெளியரங்குகளில் பாடுகளின் காட்சிகளை மேடை ஏற்றியபோது கையாண்ட நீண்ட செவ்வக அமைப்பிலான மேடையே இங்கு பயன்படுத்தப்பட்டது. காட்சி அமைப்பும், காட்சியில் தோன்றும் இடங்களும் குறியீட்டு அடையாளங்கள் வழியாக வெளிப்படுத்தப்பட்டன.

மீண்டும் 1954 ஆம் ஆண்டு இதே பிரதியைக் கொண்டு ஆங்கில மொழியில் பத்திரிசியார் கல்லூரியில் பாடுகளின் நாடகம் மீண்டும் மேடையேற்றப்பட்டது. லோங் (OMI) அடிகள் பப்லோ (Buffalo) என்னும் இடத்திலிருந்து எடுத்துவந்த ஆங்கில நாடகப்பிரதியை அடியொற்றி 1956இல் அதிபராகக் கடமையாற்றிய அருட்திரு அருள்நேசன் (OMI) அடிகளின் வேண்டுகோளுக்கிணங்க அருட்திரு மரியாம்பிள்ளை அடிகளால் நாடகம் மேடையேற்றப்பட்டது. தமிழ் மொழியில் இடம் பெற்ற இந்நாடகம் நடிகர்களுக்கும், பார்வையாளருக்கும் புது அனுபவமாகவே விளங்கியது. இந்நாடகங்களை நெறியாள்கை செய்வதில் ஆசிரியர் திரு. F. A. ஆம்ஸ்ரோங் அவர்கள் பெரும் பங்காற்றியிருக்கிறார் என அறியப்படுகின்றது. தொடர்ந்து 1966ஆம் ஆண்டு வரையும் பத்திரிசியார் கல்லூரியில் சில ஆண்டுகள் இடைவெளியுடன் பாடுகளின் நாடகம் மேடையேற்றப்பட்டிருக்கின்றது.

1964ஆம் ஆண்டிலிருந்து யாழ்பாண மறைமாவட்டத்தின் பல பங்குகளில் மனிதர்களால் நடிக்கப்பெற்ற பாடுகளின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. 1964 ஆம் ஆண்டு அருட்திரு. நீ. மரிய சேவியர் அடிகள் (திருமறைக் கலாமன்ற நிறுவுனர்), மன்னார் புனித செபஸ்தியார் பங்கில் உதவிப் பங்குத்தந்தையாக பணியாற்றிய காலத்தில் முதன்முதலில் மன்னார் மாதோட்டப் பகுதியில் மனிதர்களால் நடிக்கப்பெற்ற பாடுகளின் நாடகத்தை ஆற்றுகை செய்தார். இதனைத் தொடர்ந்தே பிற்பட்ட காலங்களில் மன்னார். – மாதோட்டப் பகுதியின் ஏனைய பங்குகளில் மனிதர்களால் நடிக்கப்பெற்ற பாடுகளின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. முருங்கன், விடத்தல்தீவு, வங்காலை, அடம்பன், ஆட்காட்டிவெளி ஆகிய பகுதிகளில் பாடுகளின் நாடகம் மேடையேற்றப்பட்டதாக அறியப்படுகின்றது.

யாழ். குடாப் பகுதியிலுள்ள பங்குகள் என நோக்கும்போது, பேராலயப் பங்கு, உரும்பிராய், குருநகர், அச்சுவேலி, நாரந்தனை, இளவாலை (பொயிட்டி-மாரிசங்கூடல்), பருத்தித்துறை, நெடுந்தீவு ஆகிய பங்குகளிலும், வன்னிப் பகுதியில் வவுனியா, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, வலைப்பாடு, முழங்காவில் ஆகிய பங்குகளிலும் மனிதர்களால் நடிக்கப் பெற்ற பாடுகளின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன.

வடபகுதியில் பாடுகளின் காட்சிகளின் வளர்ச்சி பற்றிய வரலாற்று நோக்கில் வரையப்படும் இக்கட்டுரையில் திருமறைக் கலாமன்றத்தினர் இத்துறையில் ஏற்படுத்திய பதிகைகள் கோடிட்டுக் குறிப்பிடப்பட வேண்டும். இதில் நீ. மரியசேவியர் அடிகளின் பங்களிப்பு முக்கியமானது. பாரிய திறந்த அரங்கமைப்பு முறையிலான மரபுவழிப் பாடுகளின் காட்சி முதல் மட்டுப்படுத்தப்பட்ட மண்டப அரங்கமைப்பு முறைவரையும், ஐரோப்பிய பாடுகளின் நாடகங்களின் தோற்றத்தை அடியொற்றிய பிரதிகள் முதல் பிரபந்த இலக்கிய வடிவங்களில் அளிக்கப்பட்டமை வரையுமாக பல ஆக்கங்கள் இவரது ஆற்றுகைகளில் இடம் பெற்றமை குறிப்பிடப்படல் வேண்டும். திருமறைக்கலாமன்றத்தினர் பாடுகளின் நாடகத்தை இலங்கையின் ஏனைய பகுதிகளிலும், புலம்பெயர்ந்து ஏனைய நாடுக்ள் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியிலும் ஆற்றுகை செய்கின்றமை மற்றுமொரு சிறப்பான விடயம் ஆகும். பாடுகளின் காட்சி உடக்குகளினால் காண்பிக்கப்படும் நிலையிலிருந்து, மனிதர்களினால் நடிக்கப்படும் நிலைக்கு மாற்றம் பெற்றமை தொடர்பாக மக்கள் மனதில் தோன்றியுள்ள மாற்றங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

பாடுகளின் காட்சிகள் உடக்குகளினால் காண்பிக்கப்பட்டபோது இது வெறும் காட்சியாக-வன்றி ஒரு சடங்காகக் கொள்ளப்பட்டமையே மக்கள் மத்தியில் இதற்கு நிலவிய வரவேற்பிற்கும், ஆதரவிற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தது. பாடுகளின் காட்சிகள் மனிதர்களால் நடித்துக் காண்பிக்கப்படும்போது இவற்றில் நாடகத் தன்மைகளும், கலைநுட்பத் திறமைகளும் மேலோங்கி பக்தித் தன்மை படிப்படியாகக் குறைந்து சென்றுள்ளது. மனிதர்களால் நடிக்கப்படும் பாடுகளின் காட்சிகளில் மீண்டும் பக்தி இயல்பு மேலோங்கும் நிலை ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது எனத் தோன்றுகின்றது.

*(தொடரும்)*

# திருச்செபமாலை இராக்கினியே!

ஒக்ரோபர் மாதம் செபமாலை மாதம். அதையொட்டி இச்சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகின்றது.


**அருட்சகோதரி கனிசியஸ்**
**திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.**


திருச்சபை வரலாற்றில் வைகாசி, ஐப்பசி, மாதங்கள் மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதங்களாகும். இந்த மாதங்களில் ஆலயங்கள், வீடுகள் தோறும் திருச்செபமாலை செபித்து, மரியன்னையின் பாடல்கள் பாடி, மக்கள் அன்னையைச் சிறப்பிப்பதைக் காணலாம். வைகாசி மாதம் வணக்க மாதம் என்றும் ஐப்பசி மாதம் செபமாலை மாதம் என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

நற்செய்தியின் தொகுப்பாகத் திகழும் செபமாலை, கிறிஸ்து நமக்குச் சுட்டிக்காட்டும் பாதையில் கன்னிமரியாளின் உறுதியான உதவியுடன் நாம் முன்னேற்றிச் செல்ல நமக்குத் துணைபுரிகின்றது.

நமது கத்தோலிக்க திருச்சபையிலே நாம் கிறிஸ்தவர்களாக வளர்ச்சியடைவதற்கு நமக்குத் துணைபுரிய பல்வேறு பக்திமுயற்சிகள் உள்ளன. அவை அனைத்திலும் புனித செபமாலை முதன்மையான இடத்தைப் பிடித்திருக்கின்றது. ஏனெனில் செபமாலை அதன் எழிலிலும், எளிமையிலும், அதன் வளத்தின் ஆழத்திலும் ஒப்புயர்வற்றுத் திகழ்கின்றது. வாழ்க்கையின் எத்தகைய நிலையிலுள்ள மக்களும் ஆர்வத்துடன் நிறைவேற்றும் பக்திமுயற்சியாக இது இருக்கின்றது. ஒரு சிலர் விதிவிலக்காயிருந்தபோதிலும் பலர் நாளாந்தம் குடும்பச் செபமாலை செபிக்கின்றனர். வயதான காலத்தில் ஆறுதல் அளிக்கும் கருவியாகக் குடும்பச் செபமாலை விளங்குகின்றது. அத்துடன் குடும்ப உறவுகளுக்கு இது வலுவூட்டுகின்றது.

டோமினிக்கன் சபையைச் சார்ந்த புனித 5ம் பத்திநாதர் என்னும் திருத்தந்தை 1566ல் செபமாலை பற்றிய முதல் சுற்றுமடலை வரைந்தார். இவர்தான் செபமாலையின் சிறப்பை வெளிப்படுத்தினார். விசுவாசிகள் இந்தப்பக்தி முயற்சியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்திப் பரிந்துரைத்தார்.

திருத்தந்தை 13ம் கிரகோரியார் தாம் வரைந்த பல்வேறு ஏடுகள் வாயிலாகப் புனித செபமாலையைச் செபிப்போருக்குப் பல பலன்களையும், சலுகைகளையும் வழங்கியுள்ளார். அவரைத் தொடர்ந்து வந்த திருத்தந்தையர்கள் பலர் செபமாலையின் சிறப்பையும், வளங்களையும் எடுத்துரைத்துள்ளனர்.

சிறப்பாகத் திருத்தந்தை 13ம் சிங்கராயர் (1878 – 1903) தாம் வரைந்த ஏடுகளில் புனித செபமாலைப் பக்திமுயற்சியைப் பரிந்துரைத்துள்ளார். இவரே ஐப்பசி மாதத்தைப் புனித செபமாலைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதமாக அறிக்கையிட்டவர். அண்மைக்காலத்தில் புனித செபமாலைப் பக்திமுயற்சியை வளர்த்தவர்களில் பிரதானமானவர்கள் திருத்தந்தையர்களான 23ம் யோவானும், 6ம் பவுலும் ஆவர். புனித மரியாளிடம் பெருமளவில் பக்திகொண்டிருந்த திருந்தந்தை 2ம் யோவான் பவுல் அக்டோபர் 2002 - 2003ம் ஆண்டைப் புனித செபமாலை ஆண்டு என அறிவித்து அதை உலக அமைதிக்காக அர்ப்பணம் செய்தார். "கன்னிமரியாளின் செபமாலை" என்னும் தலைப்பில் அவர் வரைந்த அப்போஸ்தலிக்க மடலில் விசுவாசிகள் செபமாலையைச் செபிக்கவேண்டுமென்று உற்சாகப் - படுத்துகின்றார்.

அன்னை தெரேசா, தந்தை பியோ ஆகியோர் செபமாலைப் பக்தி கொண்டவர்களாகத் திகழ்ந்தனர், குழந்தை இயேசுவின் புனித தெரேசா செபமாலைமீது சிறப்பான பக்தி கொண்டிருந்தார். "செபமாலை செபிக்கும் நேரம் மரியாளின் தோழமையுடன் மூவொரு இறைவனுடன் கொள்ளும் ஒன்றிப்புப் பொழுது" என்று அவர் கூறுகின்றார்.

நாசரேத்திலிருந்து பெத்லகேமுக்கு, எகிப்திலிருந்து எருசலேமுக்கு, கானாவிலிருந்து கல்வாரிக்கு, மாடி அறையிலிருந்து ஒலிவமலைக்கு, வெறுமையான கல்லறையிலிருந்து தந்தையின் வலப்புறத்திற்கு, என்று தொடங்கித் தொடரும் மகிழ்ச்சி, மகிமை, துக்க, ஒளியின் மறையுண்மைகளை அன்னையின் சிந்தனையுடன் இணைத்து ஆழ்நிலைத்தியானம் செய்யும்போது இம்மறையுண்மைகளை மகிமைப்படுத்தும் பகுதியாகத் திகழும் மரியா ஒரு பெரும் துணையாக விளங்குகின்றார்.

மங்கள வார்த்தைச் செபத்தையும், கர்த்தர் கற்பித்த செபத்தையும் நாம் செபிக்கும்போது நற்செய்திக் காட்சிகளின்மீது நம் மனதையும் உள்ளத்தையும் பதியச்செய்ய நாம் அழைக்கப்படுகிறோம்.

கபிரியேல் தூதரின் அறிவித்தலாகிய "அருள் நிறைந்தவளே வாழ்க! ஆண்டவர் உம்முடனே" என்பதற்கும், எலிசபெத்தின் வாழ்த்தொலியாகிய, "உம்முடைய திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே" என்பதற்கும் கிறிஸ்துவே கருப்பொருளாகத் திகழ்கின்றார்.

நாம் செபிக்கும் ஒவ்வொரு மங்கள வார்த்தைச் செபமும் நம் மீட்பராம் கிறிஸ்துவுக்கு வழங்கப்படும் புகழ்ச்சியாக முழங்குகின்றது.

இவ்வேளையில் சில வருடங்களின் முன் நிகழ்ந்த ஒரு நிகழ்வு என் நினைவுக்கு வருகின்றது. கத்தோலிக்க திருமறையை விட்டுவிலகி அடிப்படைவாதக் குழுவில் இணைந்துகொண்ட இளைஞர் ஒருவர் அருட்சகோதரி ஒருவரைச் சந்திக்கச் சென்றார். அப்பொழுது அவர் அந்த அருட்சகோதரியிடம் "ஏன் நீங்கள் வீணாகச் செபமாலையை உருட்டி நேரத்தைச் செலவிடுகிறீர்கள். அந்த நேரத்தில் பைபிளை எடுத்து வாசியுங்கள்" என்றார். இது இவரது விளக்கக்குறைவா, அன்றேல் குறைகாணும் முயற்சியா, அன்றேல் பைபிளை விளங்கிக்கொண்ட விதமா என்பதை எண்ணி அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

மரியாளைவிட வேறெந்தப் படைப்பும் கிறிஸ்துவை அதிகமாக அறிந்திருக்க முடியாது. வேறெங்கும் இல்லாத அளவுக்குச் செபமாலையில் இயேசுவின் வாழ்வும் மரியாளின் வாழ்வும் மிக ஆழமான முறையில் இணைக்கப்பட்டுள்ளன. படைப்புக்கள் அனைத்தின் மத்தியிலும் மரியாள் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்த வகையில் மிகச்சிறப்பான முறையில் வாழ்வதால் அவரோடு இணைந்து செபமாலை செபிப்பது கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சி பெறுவதற்கு ஆற்றல்மிக்க ஒரு வழியாக விளங்குகின்றது.

செபமாலை தியானமாகவும் மன்றாட்டாகவும் அமைகின்றது. செபமாலை கிறிஸ்துவினுடைய மறையுண்மையின் அளவிடற்கரிய பறைசாற்றலாகத் திகழ்கின்றது. செபமாலை ஆபத்தான நேரங்களில் திருச்சபைக்கு உறுதியான பாதுகாப்பைத் தரும் புகலிடமாக விளங்குகின்றது. செபமாலை ஆற்றல் அனைத்தையும் தன்னகத்தே பெற்றுள்ளது. செபமாலை ஆழ்நிலைத் தியானத்தின் ஒருவழி, செபமாலை ஆற்றல் மிக்க ஒரு செபம், செபமாலை குடும்பங்களுக்கான ஒரு செபம், செபமாலையைச் செபிப்பவர்கள் தங்களுக்குள்ளே உயிர்த்த ஆண்டவரின் அமைதியை அனுபவிக்கின்றார்கள்.

போர்களும், வன்முறைகளும், பயங்கரவாதமும், பகைமையும், விரக்தியும் உலக நாடுகளை – விசேடமாக எமது நாட்டைக் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. இவ்வேளையில் எமது நாட்டில் வாழும் இனங்களிடையே அமைதியையும்,



ஐக்கியத்தையும் உருவாக்கக்கூடிய மிகச்சிறந்த செபம் செபமாலையே.

வாழையடி வாழையாகக் குடும்பங்கள் குடும்பச் செபமாலை செபித்து வருகின்றன. எனினும் இன்று பல குடும்பங்களில் இதற்கு மாறான நிலையே காணப்படுகின்றது. பல குடும்பங்களில் மிக அரிதாகவே அன்பையோ, பாசத்தையோ, இதய நெருக்கத்தையோ காணமுடிகிறது.

குடும்பங்களில் வசதிகளும், வளங்களும் பெருகியிருந்தாலும் அங்கிருப்பவர்களுக்குள்ளே நல்லிணக்கம் இல்லை. பல குடும்பங்கள் பிரிந்து கிடக்கின்றன. நல்ல குடும்பங்கள்கூடக் குடும்பமாக ஒன்றுசேர்ந்து இருந்தாலும், அது குடும்பச் செபமாலை செபிப்பதற்காக அல்ல, மாறாகத் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்ப்பதற்கே ஒன்றுசேர்கின்றனர். இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எப்பொழுதும் ஒழுக்க நெறிக்கு ஒத்ததாயில்லை.

இன்றைய குடும்பங்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி அன்று கவலைகொண்ட திருத்தந்தை 6ம் பவுல் குடும்பச் செபம் செய்யும் வழக்கத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். குடும்பத்தில் குடும்ப உறுப்பினர்கள் இணைந்து குடும்பத்திற்காகச் செபிக்கும் செபமாலை சக்திமிக்கது. செபமாலை செபிப்பதில் ஒன்றித்திருக்கும் குடும்பம் ஒருவர் ஒருவரை அன்பு செய்வதில் மன்னிப்பதில், இறை உணர்வில் வளர்வதில் ஒன்றித்திருக்கும்.

இறுதியாக எவ்வேளையிலும் செபிக்கக் கூடிய செபம் செபமாலை. இதனைத்தான் செபமாலைத்தாசர் சபை நிறுவுனரான வண. தோமஸ் O.M.I. அடிகளார் "இருட்டிலும், நோயிலும், சிறையிலும் செபிக்கக்கூடிய செபம் செபமாலை" என்று கூறியுள்ளார். எனவே நாம் அனைவரும் எமது குடும்பங்களிலும், தனிப்பட்ட விதத்திலும், செபமாலை செபிப்போம். மரியன்னை காட்சியருளிய இடங்களிலெல்லாம் செபமாலை செபிக்கும்படி கேட்டுள்ளார். எனவே ஆற்றல் மிக்க இந்தச் செபமாலையை நமக்காக, நாம் அன்பு செய்யும் நபர்களுக்காக உயிர்வாழ்கின்றவர்களுக்காக, இறந்தோருக்காக, பாவிகள் மனந்திரும்புவதற்காக, பணிகள் வெற்றி பெறுவதற்காக, நாட்டின் சமாதானத்திற்காக என்று பல்வேறு கருத்துகளுக்காக ஒப்புக்கொடுப்போம். ●

## நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 29 - 01 - 1954 உதிர்வு 12 - 09 - 2006

**திரு. எஸ். அன்ரன் சோமராஜா**
**(ஓய்வுபெற்ற ரெலிகொம் உத்தியோகத்தர்)**

ஆண்டொன்று கடந்தாலும்
ஆறுமோ உன் நினைவுகள்
கலையாத காவியமாய்
கண்ணெதிரே நிற்கின்றன
பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய்
அன்பால் எம்மை அரவணைத்தீர் - நாம்
ஆதரவற்றுக் கலங்குகின்றோம் அப்பா.
உங்கள் ஆன்ம சாந்திக்காக அனுதினமும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு மனைவி, மகன், தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.*

### 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 13 - 08 - 1981 உதிர்வு 29 - 10 - 2002

**திரு. ஜோச் ஜெனிஸ்ரன்**
**(பெரிய பண்டிவிரிச்சான், மடு)**

எம்முயிர் அன்புத் தம்பியே, எங்கள் ஆசை மகனாரே. எங்களைப் பரிதவிக்க விட்டாயே! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் மின்னல் வடிவில் காலன் வந்தானோ உன்னை அழைத்துச் செல்ல? தம்பி, உன் அன்பு வார்த்தைகளையும், அரவணைக்கும் கரங்களையும் எப்படி மறப்போம்? பரமனிடம் எமக்காய் பரிந்துரையும். உம் ஆன்ம சாந்திக்காய் நாங்கள் கண்ணீர் மல்கி இறைவனை வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
*அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள், அத்தான்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.*

*தகவல் :- திரு. திருமதி. ஜெயம், மணி (சுவிஸ்)*

### 14ம் ஆண்டு நினைவு



மலர்வு 10 - 04 - 1909 உதிர்வு 27 - 10 - 1993

**திரு. தி. மனுவேற்பிள்ளை**
**(கங்காணி தீவு, நானாட்டான்)**

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய் இருந்த எங்கள் அன்பு அப்புவே! ஆண்டு ஒன்று ஆனாலும் உம் நினைவலைகள் எம்மைத் தினம் வாட்டுதப்பா! அழுது நிதம் புரண்டாலும் மாண்டார் வருவதில்லை. ஆனாலும் நாம் இங்கு விம்மி அழுகின்றோம். எங்கள் நினைவுகள் எந்நாளும் உங்கள் திருமுகத்தை காணத்-தேடுதப்பா. பிள்ளைகள் எம் வாழ்வுக்காய் பெரும்பாடுபட்டு பாசமாய் வளர்த்தீர்கள். குடும்பத்தில் தலைவனுமாய், கொண்டவள் நற் கணவனுமாய் வாழ்ந்து முடித்தீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும், பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.*

### 10ம் ஆண்டு நினைவு



மலர்வு 14 - 04 - 1910 உதிர்வு 06 - 10 - 1997

**பே. மரியாம்பிள்ளை**
**(எமில் நகர், மன்னார்)**

*"இன்றே என்னுடன் வான் வீட்டில் இருப்பாய்"*

பதினாறும் பெற்ற பெருவாழ்வு வாழ்ந்து மகிழ்ந்திருந்தீர்களே! என்றும் சிரித்த உங்கள் முகமும், உங்கள் இனிய வார்த்தைகளும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்களுடைய உள்ளங்களை விட்டு நீங்காது ஐயா!

உங்கள் ஆன்மா ஆண்டவர் சந்நிதியில் அமைதிபெற நிதம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உன் பிரிவில் துயருறும்
*மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

# 'மன்னா'வின் 10வது பிறந்தநாள் சிறப்பிதழ்

## மன்னாவின் வளர்ச்சிப்படிகள்

அருட்சகோதரி கனிஷியஸ் தி. கு.

"மன்னா" பத்திரிகையின் 10வது ஆண்டு நிறைவினில் மனமகிழ்வோடு அதனை வாழ்த்துவதும், பாராட்டுவதும், எனது எண்ணக்கருக்கள் சிலவற்றை பகிர்ந்துகொள்வதும் உண்மையிலேயே பேருவகையூட்டும் ஓர் அனுபவமாகும்.

அன்று பாலைவனத்தில் "மன்னா" பொழிந்தது. அது இஸ்ராயேல் மக்களின் பசியைப் போக்கியது. இன்று மன்னார் மண்ணில் "மன்னா" பொழிகின்றது. இது உலகோர் தம் ஆன்மீகப் பசியை, அறிவுப் பசியைப் போக்கி நிற்கின்றது.

மன்னார் மறைமாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஒருசில ஆண்டுகளில் மன்னா சஞ்சிகையாக வெளிவரத் தொடங்கியது. இக்காலத்திற்கேயுரிய கணனி வசதிகளும், நவீன தொலைத்தொடர்புக் கருவிகளும் இல்லாத அக்காலத்தில் மன்னாரிலிருந்து ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டதென்றால் அது ஒரு பாரிய சாதனையே. அதற்கு அடித்தளமிட்டு, அதனை முன்னெடுத்துச் சென்றவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இது பத்திரிகை வடிவில் நடைபயிலத் தொடங்கி 10 ஆண்டுகளைப் பூர்த்திசெய்யும் நிலையில் இப்பத்திரிகையின் எழுத்துப்பணியோடு நீண்டகாலமாக இறுகப்பிணைக்கப்பட்ட நான் இதனையிட்டு ஓரிரு வார்த்தைகள் எடுத்தியம்புவதில் உளம் மகிழ்கின்றேன்.

ஏனைய பத்திரிகைகளுடன் ஒப்பிடுகையில் பத்தாண்டு காலம் என்பது ஒரு குறுகிய காலமாயிருக்கலாம். ஆனால் மன்னாவின் உயர்ச்சியையும், வளர்ச்சியையும் எடுத்து நோக்கின் இது குறுகிய காலத்தில் துரித வளர்ச்சி கண்டுள்ளது என்று கூறலாம்.

மாதம் ஒரு தடவை பொழியும் மன்னா கத்தோலிக்க மக்கள் மத்தியில் ஆற்றிவரும் பணிகள் சொல்லுந்தரமல்ல. இது பலரின் ஆளுமையிலும் அர்ப்பணிப்பிலும் வளர்ந்துவரும் ஒரு பத்திரிகையாகும். இதன் ஆரம்பகால வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமிட்டு, வித்திட்டவர்கள் என்றும் போற்றுதற்குரியவர்களே. இதன் பத்தாண்டு காலப் பயணத்தைத் திரும்பிப் பார்க்கையில் இது பல சவால்களுக்கு முகம் கொடுத்து விமர்சனங்களை எதிர்கொண்டு வந்துள்ளது. அந்த விமர்சனங்கள் யாவும் தனது வளர்ச்சிப்பாதையில் குறுக்கிடும் தடைக்கற்கள் அல்ல படிக்கற்கள் என்பதை இனம்கண்டு உறுதியோடும் உத்வேகத்தோடும் பரந்து விரிந்து மன்னாவின் பயணம் தொடர்கின்றது.

இது இலங்கையில் மட்டுமல்ல அகில உலகிலும் விசுவாசத்தை வளர்த்தெடுப்பதிலும், அதனைக் கட்டிக்காப்பதிலும் உறுதியான பணிபுரிந்து வருகின்றது.

இது தடம்பதிக்கும் களங்கள் பற்பல. கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன்கூடிய முதற்பக்கம். உள்ளே புரட்டினால் காலத்தின் தேவைக்கேற்ப கூறவேண்டியவற்றை நாசூக்காகக் கூறிச் சிந்திக்க வைக்கும் ஆசிரிய தலையங்கம், மற்றும் வாசகர் எண்ணங்கள், உலகத் திருச்சபைச் செய்திகள், தலத்திருச்சபைச் செய்திகள், ஏனைய மறைமாவட்டச் செய்திகள், இளைஞர் பொழிவு, கவிதைச் சரங்கள், நகைச்சுவைத் துணுக்குகள், சிறுகதைகள், அருட்தந்தையர், துறவறத்தாரின் யூபிலி விழாக்கள், ஆயரின் மேய்ப்புப்பணித் திருமுகங்கள், திருத்தந்தையின் சுற்றுமடல்கள், குருப்பட்ட, துறவற அர்ப்பண நிகழ்வுகள், சமயக்கட்டுரைகள், கத்தோலிக்க அரசசார்பற்ற நிறுவனமான வாழ்வுதயத்தின் செயற்பாடுகள், மன்னா விளம்பரப் பலகை, கதையும் கருத்துக் களமும், வழிபாட்டுடன் தொடர்புடைய தொடர்கள், மறையறிவு விளாக்கள், விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி, புனிதர்களின் வாழ்க்கை வரலாறு, மருத்துவக் குறிப்புகள், நீத்தார் நினைவுகள், பிறந்தநாள், திருமணநாள் வாழ்த்துக்கள், இப்படியாக இப்பத்திரிகை தாங்கிவரும் அம்சங்களோ பற்பல.

இவற்றை வாசித்துப் பலன் பெறுவோர் பலர். மன்னா எப்போது வரும் என்று காத்திருப்போர் மிகப் பலர். அதேவேளை "மன்னா அதிகம் செய்திகளைத் தாங்கி வருகிறது. வாசிக்க முடியாது. இது ஒரு கத்தோலிக்கப் பத்திரிகையாயிருந்தும் பத்தும் பலதும் இதில் வருகிறது" என்று கூறி குறைபட்டுக்கொள்வோரும் உண்டு. மற்றும் இதில் ஆழமான இறையியல் சாராம்சம் கொண்ட கட்டுரைகள் வருவதில்லை என்று சிலர் முணுமுணுப்பதுண்டு. இது பலரும் படிக்கும் ஒரு பத்திரிகை என்பதை நினைவில் கொண்டால் இவ்வித குறைகள் சொல்வதற்கு இடமிருக்காது.

தொடரும் போரினாலும், தபால் கட்டண உயர்வினாலும், பத்திரிகைத்துறை சார்ந்தவற்றின் விலையேற்றத்தினாலும், மக்களின் இடப்பெயர்வினாலும், அச்சிடும் பத்திரிகைகள் அனைத்தையும் விற்பனை செய்யமுடியாத தடைகள் ஏற்பட்டதுண்டு. இத்தகைய தடங்கல்கள் அனைத்தின் மத்தியிலும் மன்னா தனது பணியைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் எனும் கோரிக்கை பல கோணங்களிலுமிருந்து விடப்படுகின்றது. இதனால் பல்வேறு சுமைகளையும் தாங்கிக்கொண்டு மன்னா தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

மன்னா பத்திரிகையானது ஒரு கத்தோலிக்கப் பத்திரிகையாகச் சமயப்பணியாற்றும் அதேவேளை மக்களது சமூக, அரசியல், மற்றும் வாழ்வியல் பிரச்சினைகளையும் வெளிக்கொணர்கிறது. இது பல தடவைகள் சமாதானத்திற்காகக் குரல் கொடுத்தமையினால்தான் இதன் ஆசிரியர் அருட்திரு பா. கிறிஸ்து நேசன் அடிகளார் சமாதானத்திற்கான விருது பெற்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இது போரின் கொடுமைகளுக்கு ஆளாகி அல்லற்படும் மக்களின் அவலங்களையும், அதனையிட்டு ஆயர்கள் விடுக்கும் செய்திகளையும் வெளிப்படுத்துவதோடு, நீதியான சமாதானத்தை வலியுறுத்தி நிற்கின்றது.

இந்த நவீன யுகத்தில் பல்வேறுபட்ட பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் மனதைக் கவரும் விதத்தில் வெளிவந்து கொண்டிருந்தாலும் மன்னாவைப் படிப்போர் தொகை உலகளாவிய ரீதியல் எந்தவகையிலும் குறைவுபடவில்லை என்பதை வாசகர் எண்ணங்கள் மூலம் அறிந்துகொள்ளலாம். சிறுவர், இளையோர், பெற்றோர், முதியோர் யாவருக்கும் மன்னா விருந்தாக அமைகிறது. இதன் தரமும் உள்ளீடுகளும் படிப்படியாக வளர்ந்து வருவது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

இது தனியே மன்னார் மறைமாவட்டச் செய்திகளை மட்டுமின்றி, அகில உலகக் கத்தோலிக்க செய்திகளையும் தனதாக்கி இலக்கியப் படைப்புகளூடே ஆன்மீகத்தை மக்கள் மத்தியில் விதைக்கின்றது. புதிய கவிதை எழுத்தாளர்களின் சிந்தனைக்கும் களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமிழ்க்காற்றைச் சுவாசிக்கும் ஒவ்வொருவரும் இதன் அயராத சேவையினால் ஆன்மீகப் பயன்பெறும் ஒரு ஊடகமாக இது அமைகின்றது. உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்க் கத்தோலிக்க மக்களை ஒன்றிணைக்கும் ஒரு ஊடகமாகவும் இது திகழ்கின்றது.

குறிப்பாக எமது நாட்டில் நடைபெறும் ஒடுக்குமுறைகள் பாரபட்சங்கள், போன்றவற்றை அடிக்கடி நேரடியாக அவதானித்துவரும் யாழ் ஆயர் மற்றும் மன்னார் ஆயர் ஆகியோரது மடல்கள், கண்டனங்கள், உண்மை நிலைகளை அரசிற்கு வெளிப்படுத்தும் அறிக்கைகள் ஆகியவற்றை இப்பத்திரிக்கை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தும் திறன் போற்றுதற்குரியது.

திருமணமானவர்களுக்கு, திருமண ஆயத்தம் செய்வோருக்கும் சொல்ல வேண்டியவைகளை "குடும்பக் குவலயம்" என்ற பகுதி சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றது. அண்மைக் காலங்களில் இப்பத்திரிகை புதுப்பொலிவுடன் கவர்ச்சிகரமாக வெளிவருவது மனதிற்கு ரம்மியமாகவுள்ளது. இறுதியாக, கிறிஸ்து எவ்வாறு முழுமனித நலனில் அக்கறை கொண்டு புதியதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பப் பணிபுரிந்தாரோ அவ்வாறே இப்பத்திரிகையும் அவர் வழிநின்று நற்சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அயராது உழைக்க வேண்டும்.

அதேவேளை மன்னாவின் தளிர்நடை அதிகம் மெதுவானது போல் தோன்றுகிறது. அதாவது இது சிறிது நேரகாலத்துடன் வெளிவருவது நல்லது. கடந்த சில மாதங்களாக இது தமக்குக் காலம் தாழ்த்தியே கிடைப்பதாகப் பலரும் குறைபட்டுக் கொள்கின்றார்கள். எனவே அந்தந்த மாத இறுதியில் வெளிவருவதற்குப் பதிலாக மாத ஆரம்பத்தில் வெளிவருவது சாலச்சிறந்தது. அத்துடன் மறைமாவட்டத்திலுள்ள கத்தோலிக்க மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மன்னாவின் விநியோகம் குறைவாகவே உள்ளது. எனவே மன்னாவை அனைவருக்கும் அறிமுகம் செய்துவைப்பது நல்லது.

உலகெங்கிலும் வாசகர்களையும் படைப்பாளிகளையும் கொண்டிருக்கும் மன்னா மென்மேலும் வாசகர், அபிமானிகள், படைப்பாளிகளின் பேராதரவைப் பெற்று கத்தோலிக்க மக்களுக்கு விசுவாசத்தை ஊட்டும் "மன்னா" வாசச் சிறப்புடன் தன் பணியைத் தொடர இறைவனை வேண்டுகின்றேன். ●

## 'மன்னா' நீ மங்காப் புகழோடு வாழ்க!

### "மக்கள் கவி"

இந்து மா கடலின் முத்து, ஈழம் எமது சொத்து!
வந்து அலை மோதும் கடல் சூழும் - கரையில்
வற்றாத ஜீவ நதிகளின் நீர் வீழும்!

அண்ணாந்து பார்த்தால் நீல வானம்!
அங்கிருந்து பார்த்தால் பச்சை மாங்காய்!
உள்ளே வந்து பார்த்தால் உள்ளம் குளிரும் பனி
ஓரம் சென்று பார்த்தால் கடல் அலை மோதும்!

பல்லாயிரம் ஆண்டு பழம் பெருமை கொண்டது
பச்சை மேலாடை போர்த்திப் பார்த்தது
'செரண்டிப்' என்று முன்பு அழைத்தது
'ஸ்ரீ லங்கா' வென்று இன்று அழைப்பது!

ஆதியில் இங்கு வந்தோர் நாகர்கள் வேடர்கள்
அடுத்து வந்தோர் தமிழர்கள் - இந்துக்கள்!
அதன் பின்னர் வந்தோர் சிங்களவர் பௌத்தர்
கடைசியில் வந்தோர் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்கள்.
ஓர் தேசம் - ஈர் பாசை,
மூவினம், நான்கு மதம் கண்ட நாடு.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான காவியமாம்
அரசன் இராவணனின் "இராமாயணக்" கதையுமுண்டு
அறுநூறு ஆண்டின் முன்னர் இங்கு வந்தார் போர்த்துக்கேயர்
அதன் பின்னர் இங்கு வந்தார் ஒல்லாந்தர்
இறுதியாக இங்கு வந்தவர் பிரித்தானியர் - அதனால்
இன்று நம்மைப் பிரித்தாளுகின்றார் சிங்களவர்.

ஈழத்தின் வடமுனையில் இயற்கை வளம் செறிந்த
எழில் கொஞ்சம் நன் வங்காள விரிகுடாவில்
முற்புறம் கடல் சூழ முத்துச் சிலாபத்தில் நல்
முத்து விளை மாதலமே எம் மன்னார்த் தலம்.

மன்னார் மாதலத்தின் கதை சொல்வேன் - மறவர்
மாவீரர் வாழ்ந்து மறைந்த கதை சொல்வேன்.
என்றும் மறக்காத இன்பக் கதை சொல்வேன்
ஏரோட்டி, கடலோடும் மக்கள் கதை சொல்வேன்
நான்: மக்கள் காதர்:-
பெயர்:- அப்துல் காதர்!
ஊர்:- மண்வளமும், மரவளமும், நெல்வளமும், கனி வளமும்,
கடல் வளமும், மீன் வளமும், காலம் முழுதும் விரித்தழும்
மன்னார் மாதலத்து மன்னார் நகரத்து மூர்வீதிக் கிராமத்து –
மண்ணின் மகன் நான்!

என்ன வளம் இல்லையிந்தத் திருநாட்டில்!
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்!
உண்ண உண்ணத் தெவிட்டாத மீன் வளமும்
உருசிமிகு 'வாஸ்மதி' நெல் வளமும் உண்டு இங்கே.

ஐயாயிரம் ஆண்டு பெருமைமிகு கேதிஸ்வரம் ஆலயம்
ஆயிரம் ஆண்டு பெருமைமிகு ஆரேபிய மக்கள்
அறுநூறு ஆண்டு பெருமைமிகு கற்கோட்டை
அதன் தொடராய் பெருமைமிகு மருதமடு ஆலயம்
அதன் தொடராய் பெருமைமிகு வேதசாட்சி ஆலயம்!

சரித்திரச் சான்றுகள் பல கண்டு
சாற்றுவேன் அதில் சில துண்டு
மும்மதமும் சம்மதமாய் ஒன்றிவாழும்
மூவினமும் ஓரினமாய் என்றும் வாழும்.

மன்னார் மாதலத்தின் மகிமை சொல்லும்
'மன்னா' மாசிகையின் பெருமை சொல்வேன்
மின்னாமல் முழங்காமல் மெதுவாய் நடைபோட்டு
'மன்னா' வளர்த்தாய் தமிழ் மக்கள் கரங்களில்.

ஆண்டுகள் பத்து நிறைவு கண்டாய்
அதுவே ஓர் தசாப்தமாக விரைவு கொண்டாய்
ஆனாலும் நீயின்னும் வளரவேண்டும் பல்லாண்டு
அகில மெங்கும் உன் சேவை தொடர வேண்டும்.

கத்தோலிக்க ஏடாக ஆரம்பித்தாய் - இருந்தும்!
கத்தோலிக்க செய்திகளை மட்டுமா தந்தாய்?
இத்தேச மக்களுக்கும் எல்லா சமூகத்திற்கும்
ஒத்த கருத்துக்களை உறைக்கவே சொல்லி வைத்தாய்!

'மன்னா' நீ வாழ்க! மங்காப் புகழோடு!
என் நாளும் உன் நாமம் இறைவனின் புகழ் பாடும்!

- மக்கள் காதர்

## மன்னாவுக்கு இனிய வாழ்த்துச் செய்தி

**ஆசிரியர் எம். எம். நிக்சன்,**
**மன/ அடம்பன் ம.ம.வி**

இலங்கையில் வெளிவரும் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகைளில் எம் மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்கப் பத்திரிகையாகிய மன்னா ஒரு சிறப்பிடத்தைப் பெறுகின்றது. இது புதுப்பொலிவுடன் வெளிவந்துகொண்டிருப்பது எமக்குப் பெருமையையும் மன்னாவுக்குப் புகழையும், வரவேற்பையும் அளிப்பது வெள்ளிடை மலை.

இந்த வகையில் மன்னா இவ்வருடம் தனது பத்து வயதைப் பூர்த்தி செய்வதையிட்டு மன்னாவுக்கு மடு வலய ஆசிரியர்கள் சார்பாக பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பேருவகையடைகின்றேன். மன்னாவை மக்கள் மனங்களில் மணம் பரப்பி, இறை ஒளியைப் பரப்பிடச் செய்யும் மன்னாவின் பதிப்பாசிரியர் அருட்பணி. கிறிஸ்து நேசன் அவர்களையும், அவருடன் இணைந்து அதன் வளர்ச்சிக்குப் பங்காற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டியும், வாழ்த்தியும் நிற்பதுடன் இவர்களின் பணி சிறக்க, மன்னா மென்மேலும் புதுமணம் பரப்பி, புதுப்பொலிவுடன் இகமதில் தவழ்ந்திட இறைவனை வேண்டுகின்றேன்.

மன்னார் மறைமாவட்டத்தின் ஒவ்வொரு ஆன்மீக செயற்பாடுகளையும், நிகழ்வுகளையும் இறைமக்கள் உடனுக்குடன் அறியும் வகையிலும், கிறிஸ்தவ விழுமியங்களை கட்டியெழுப்பிட ஓர் ஊடகமாகவும், மாணவர் சமுதாயத்தின் மறையறிவு, வாசிப்பு, ஆக்கத்திறன்களை வெளிக்கொணரும் சந்தர்ப்பத்தை வழங்கும் மனங்கவர் இனிய இத்ழாகவும் மன்னா விளங்குவது குறிப்பிடத்தக்கது.

*வாழ்க மன்னா, வளர்க அதன்பணி!*

## மன்னா



மன்னா பத்திரிகையே – நீ
பத்தாண்டுகள் அல்ல
பல்லாண்டு காலம் வாழ வேண்டும்.

பலருடைய மனதைக் கவர்ந்து
பாரினிலே பலர்போற்ற வாழ வேண்டும்.
என்றும் உன் இதழ்
எங்கும் மணம் பரப்ப வேண்டும்.
என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்
என்றும் உனக்கே உரித்தாக்குகின்றேன்.

*வே. ஆனந்த செல்வி*
*திருக்குடும்ப கன்னியர் மடம்*
*D8 உருத்திரபுரம், கிளிநொச்சி.*

# தனிநாயகமானார்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் 27வது ஆண்டு நினைவாக (01.09.1980) இச்சிறப்புக் கட்டுரை இடம்பெறுகின்றது. (பதிப்பாசிரியர்)

எழுத்துருவாக்கம் : துரை ஆராக்கியதாசன் B.A.P.G .D.E.
முன்னாள் பிரதி அதிபர். பலாலி ஆசிரியர் கலாசாலை



"வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் நெஞ்சில் நிலைப்பவர் யார்?" ஒருசிலரே. ஈழமணித்திருநாட்டிலே ஈழத்தமிழர் வரலாற்றில் 20ம் நூற்றாண்டில் மூவர் புகழ்பூத்த நாயகர்களாக விளங்குகின்றனர். ஒருவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், மற்றவர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள், அடுத்தவர் பன்மொழி வல்லுனர் தாவீது அடிகள்.

"அரசியல் ரீதியாக ஈழத்தமிழினத்துக்கு தனித்துவம் உண்டு. தனித்துநிற்கச் சக்திபடைத்தவன் தமிழன்" என்று உலக அரங்கில் தமிழினத்திற்கு வரலாற்றுக் கலாசார இடத்தைக் கொடுத்த நாயகம் - தனிநாயகம் அடிகள்!

தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளின் திருப்பெயரை நினைக்குந்தோறும் சிந்தை இனிக்கிறது. செந்தமிழின் பழமையையும், இனிமையையும், பெருமையையும், புதுமையையும், பண்பாட்டையும் பறைசாற்றும் சிகரமாக - தரணியில் தனித்துவமிக்க தமிழாய்வின் தன்நிகரில்லா நிறுவனமாக அவர் திகழுகிறார்.

முற்றும் துறந்த முனிவனுக்குத் தமிழ்மேல் கொண்ட அதீத காதலைத் துறக்க முடியவில்லை. இதற்கு அடிகளின் அமுதவுரையே தக்க சான்றாகும். வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில், "எனது கண்கள் பஞ்சடைந்து போகிறது. கால்கள் நடக்க மறுக்கின்றன. ஆனால் தமிழ்ப்பற்று இன்னும் என்னோடிருக்கிறது" என்றார். தமிழ்கூறும் நல்லுலகில் வழக்கிலிருந்த இன்பத்தமிழ் மொழியை அகிலத்தில் அரியாசனம் ஏற்றிச் சக்திவாய்ந்த உலகமொழிகளுடன் சரியாசனம் பெற வழிசமைத்த பெருமைக்குரியவர் தனிநாயகம் அடிகளே என்றால் அது மிகையாகாது.

தவத்திரு கலாநிதி தனிநாயகம் அடிகள் பூரண உந்து சக்திமிக்க ஆளுமையுடைய பண்பாட்டின் பெட்டமாகத் திகழ்ந்தார். "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்பது திருமூலரின் திருவாக்கு. இதற்கு தனிநாயகம் அடிகள் இலக்கணமாகத் திகழ்ந்தார். இன்று (01.09.2007) இவர் இறைபதமடைந்து 27 ஆண்டுகள் உருண்டோடினாலும் கன்னித் தமிழுக்கும், கத்தோலிக்க திருமறைக்கும் தனிநாயகம் அடிகள் ஆற்றிய மாபெரும் பணியை காலமெல்லாம் நன்றிப்பெருக்குடன் இவ்வுலகில் கடைசித் தமிழன் வாழும்வரை நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளான்.

தனிநாயகம் அடிகள் தமிழ் அன்னைமேல் கொண்ட அதீத பாசத்தையும் அதன் விளைவால் அன்னைக்கு அடிகள் அணிவித்த ஆரங்களையும் அளவிட அளவுகோல் இன்றித் தவிக்கின்றேன். வெளிநாட்டவரும் தமிழ் அன்னையின் அமிழ்ந்து சுவைத்துத் தலைவணங்க வேண்டுமென்ற பாரதியின் கனவை உலகத்தமிழாய்வின் தந்தை தனிநாயகம் நனவாக்கினார். இவரால் தமிழினம் பெருமையுற்றது. ஈழநாடு இணையற்ற புகழையீட்டியுள்ளது.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அன்னை தான் ஈன்ற சான்றோர்களாகிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், பன்மொழி மேதை தவத்திரு தாவீது அடிகள், உலகம் போற்றும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆகியோரால் இமயத்தின் உயரப் புகழாரம் பெற்றாள்.

"நேற்று என்பது உடைந்த பானை. நாளை என்பது மதில்மேல் பூனை, இன்று என்பது மீட்கும் வீணை" என ஒரு அறிஞர் கூறியுள்ளார். சொல்லின் வேந்தன் தனிநாயகம் அடிகள் தரணியில் தமிழுக்கும், திருமறைக்கும் ஆற்றிய மாபெரும் பணியை நாம் மீட்டுப் பார்ப்பது சாலவும் சிறந்தது. தமிழுக்கு மலையளவு பெரும் தொண்டு புரிந்த தவமுனி தனிநாயகம் அடிகளைப்பற்றிய வாழ்க்கை வரலாற்றை இரத்தினச் சுருக்கமாகத் தருவதில் புளகாங்கிதமடைகிறேன்.

## பதி

பசுந்தீவு எனப்படும் நெடுந்தீவில் ஆசிரியத்திலகம் ஸ்ரனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளைக்கும் உத்தம வாழ்க்கைத் துணைவி சிசில் இராசம்மாவுக்கும் கருவிலே திருவுடையராக சேவியர் தனிநாயகம் 1913.08.02 இல் பிறந்தார்.

## படிப்பு

இவர் யாழ்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கல்வியிலும், தெய்வ ஞானத்திலும், ஒழுக்கத்திலும் விளையாட்டுத்துறையிலும் அதி உன்னத மாணவனாகத் திகழ்ந்தார். "ஏன் தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது." (புனித லூக். 14:26) என்ற இயேசுவின் சவாலுக்கு "இதோ நான் சரணடைகிறேன்" என்று தனிநாயகம் அடிகள் உலகைத் துறந்து குருத்துவப் பயிற்சிபெறும்பொருட்டு 1931 – 1934 வரை கொழும்பு புனித பேணாட் குருமடத்தில் இணைந்து படித்தார்.

இவருக்குச் சோதனைகள், வேதனைகள் தொடர் கதையாயிருப்பினும் இவர் துவண்டுபோகாமல் இறைவனின் கரம் இவரை வழிநடத்தியது. தவத்திரு தாவீது அடிகளாரின் நெறிப்படுத்துதலினாலும் இந்தியாவின் முதலாவது சுதேசி ஆயர் றோச் ஆண்டகையின் ஆதரவும் அரவணைப்பும் கிடைத்ததினாலும் குருத்துவ சிறப்புப் பயிற்சியையும் குருத்துவக் கல்வியையும் உரோமாபுரியில் ஊர்பான் பல்கலைக்கழகத்தில் பெற்று 1938.03.19 இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 25 வயதில் திருமறைக் கலாநிதிப் பட்டம் பெற்றார். தமிழ், ஆங்கில மொழிகளில் முதுகலைமாணி (M.A) மற்றும் இலக்கிய முதுமாணி (M.Litt) பட்டங்களையும் இலண்டனில் கல்வியியல் கலாநிதி (Ph.D.)ப் பட்டத்தையும் பெற்றார். வத்திக்கான் திருநகரில் 43 நாடுகளைச் சேர்ந்த குருத்துவ மாணவர்களுடன் படித்ததினால் இவருடைய பன்னாட்டு சமூக உறவு வலுப்பெற்றது.

இவர் தூத்துக்குடியில் ஆயர் றோச் ஆண்டகையின்கீழ் 1940 – 1945 வரை ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும், குருத்துவப் பணியாளராகவும் மும்முரமாக உழைத்தார். ஆங்கில மொழிச் சூழலில் இவர் உருவாக்கப்பட்டிருப்பினும் பண்டிதர் குருசாமியிடம் இவர் முறையாகத் தமிழ்பயின்று தமிழில் அதீத புலமை பெற்றார்.

## படிப்பித்தல்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானிலும் நனி சிறந்தனவே" என்ற பாரதியின் கூற்றை உய்த்துணர்ந்த தனிநாயகம் அடிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துவ விரிவுரையாளராக 1951 - 1961 வரை கற்பித்தலில் ஈடுபட்டார். இவர் மேற்குலக நாடுகளில் மலாயாப் பல்கலைக்கழகத்தில் 1961 – 1969 வரை பேராசிரியராக இருந்து இந்தியக் கலைகள் - கலைத்துறைப் பீடாதிபதியாக பணிபுரிந்தார். 1970 – 1971 வரை பேராசிரியராக பாரீஸ் பல்கலைக்கழகத்தில் இந்தியக் கலைகள் துறையில் கடமையாற்றினார். 1971 – 1972வரை நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் சேவையாற்றினார்.

## பாண்டித்தியம்

தமிழ்தூது தனிநாயகம் அடிகள் 15 மொழிகளில் வல்லுநராகவும் 30 மொழிகளில் பரீட்சையமுடையவராகவும் மொழிப்புலமையினால் சொல் வேந்தராகவும் திகந்தார். இது இறைவன் இவருக்கு அளித்த சிறப்புக் கொடையாகும். உலகிலுள்ள செம்மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்ற உண்மையை இன்றுதான் நவீன மொழியியலாளர்கள் ஏற்றுக்கொண்டு அங்கீகரித்துள்ளனர். ஆனால் இற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழின் செம்மொழி அந்தஸ்தைப் பற்றி தனிநாயகம் அடிகளார் வலியுறுத்தி வந்துள்ளார். மொழியிலாளர்கள் வகுத்துள்ள செம்மொழி அந்தஸ்துப் பெறுவதற்கான 11 கோட்பாடுகளுக்கும் தமிழ் தகுதியுடையது என்பதை முன்னோடியாக அகிலம் முழுவதும் தரிசித்து அறிவித்து வந்தார். தமிழின் மகிமையையும் பெருமையையும் செயல் உருவப்படுத்திய கர்ம வீரர் தனிநாயகம் அடிகள் என்றால் அது வெள்ளிடைமலையாகும்.

## பதிப்பித்தல் பணி

**இவரின் நூல்கள் தமிழில்**

- ஒன்றே உலகம் (பிரயாணக் கட்டுரைகள்)
- தமிழ்த்தூது (கட்டுரைத் தொகுப்பு)

**இவரின் நூல்கள் ஆங்கிலத்தில் :**

- தமிழ்ப்பண்பும் நாகரீகமும் (இலண்டன்)
- வெளிநாடுகளில் தமிழ்மொழி (மலாயா)
- தமிழ் கற்பதற்கான கைநூல் (மலாயா)
- இயற்கையும் புலமையும் - தமிழ் இலக்கியங்களில் பம்பாய் கார்த்தூசியன் குருகுலம் (அமெரிக்கா)
- வேறு பல நூல்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

சங்க இலக்கிய ஆய்வு பற்றிய தனிநாயகம் அடிகளின் நூலை திறனாய்வு செய்த பேராசிரியர் கமில்சுவலபில் பின்வருமாறு கூறியுள்ளார். "பழந்தமிழ் இலக்கியங்களைப்பற்றி இதுவரை எழுதப்பட்டவை அனைத்தையும் இந்நூல் பலவகையிலும் விஞ்சி நிற்கின்றது" என்றார்.

## பதிப்பாசிரியர்

பிரதம ஆசிரியராக – தமிழ்க் கலாசாரம் (ஆங்கிலம்) முத்திங்கள் வெளியீடு 1952 – 1967, தமிழ் போத்துக்கீய அகராதி - 1969, தமிழ்க்கலை வர்த்தமானி 1969, தனிநாயகம் அடிகள் பல பிரபல சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார். பல கழகங்களை நிறுவியுள்ளார். அவற்றில் 1953இல் அவர் உருவாக்கிய அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே மணி மகுடமாக மிளிர்கின்றது.

தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை தனிநாயகம் அடிகள் மறைவதற்கு நான்கு மாதங்களுக்கு முன் 28.07.1980 இல் எழில் நகராகிய யாழ் நகரில் வீரசிங்கம் பெரியாரின் மண்டபத்தில் அழகு தமிழில் அன்பர்களின் உள்ளங்கள் எல்லாம் கொள்ளை கொண்டதாக ஆற்றிய இனிய உரையின் சிறுதுளியை சுவைத்தால் உண்மை விளங்கும்.

தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்களும் (RESEARCH IN TAMIL STUDIES - RETROSPECT AND PROSPECT ) என்ற சிறிய ஏட்டின் பக்.24 இல் "தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் சிலவற்றை சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். அவற்றை நம்மிலக்கியங்கள் பலவற்றில் தெளிவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை ஆதலால்தான் புறநானூற்றில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் வள்ளுவத்தில் 'யாதானும் நாடாமால் ஊராமல்' என்றும் குறிப்பிட்டுள்ளன. விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை. பிறரன்பு, ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, என் கடன் பணி செய்துகிடப்பதே, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நிகரற்ற மனநிலை, உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் உயர்ந்த இலட்சியம் என்பன தமிழ்ப் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகளென்றே கூறலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

01.09.1980 இல் யாழ். மரியன்னை பேராலயத்தில் நானும் குருநாதர் பன்மொழி மேதை தவத்திரு கலாநிதி தாவீது அடிகளும் தனிநாயகம் எனும் தமிழரின் மாபெரும் இமயமலை சரிந்ததையிட்டு கண்ணீர் சொரியும்வேளை.

அடிகள் தமிழுக்கும் திருமறைக்கும் ஆற்றிய பெரும் தொண்டு நினைவுகூறப்படும் பொழுது. தனிநாயகத்தின் பசுமையான தோற்றம், தூய வெண்ணிற ஆடை, குரு என்ற முழுமை என் மனக்கண்முன் நிற்கின்றது.

"தமிழே உயிர்" என்று இறுதி மூச்சுவரை உழைத்த பேரறிஞரின் பூதவுடல் அழிந்தாலும் புகழ் உடம்பு என்றும் மடிவதில்லை என உய்த்துணர்ந்தேன்.

தனிநாயகம் அடிகள் காட்டிய பாதையிலே இன்றைய நவீன உலகில் கன்னித்தமிழுக்கு களங்கம் ஏற்படாத முறையில் காவலராகவும் தொண்டராகவும் பணிபுரிவது நம் கடமையாகும். இதை உணர்ந்து சிந்தித்துச் செயலாற்ற மனமகிழ்வுடன் வாரீர். அடிகளாரின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக! ●

# உலகைக் கலக்கும் ஹாரி பொட்டர் நாவல்கள்!

ஜூலை 21ம் திகதி நள்ளிரவிற்காக நீண்ட வரிசை காத்திருந்தது. அந்த இரண்டு சகோதரிகளும் 11 நாட்கள் தவமிருந்தார்கள். ஏதாவது பள்ளியில் இடத்திற்காகவா? இல்லை, குலுக்கலில் பரிசு மழை கொட்டும் என்று காத்துக் கிடக்கிறார்களா? இல்லை. பின்னர் எதற்காக?

ஒரு புத்தகத்திற்காக, ஒரு புத்தகக் கடை வாயிலில் இந்த இரண்டு இளம் பெண்களும் காத்துக் கிடந்தார்கள். அது என்ன புத்தகம்? ஜே. கே. ரவுலிங் எழுதிய 'ஹாரிப் பொட்டரும் உயிர் குடிக்கும் ஹாலோசும்' என்ற நாவலுக்காகத்தான் இப்படிக் காத்திருந்தார்கள்.

இளையோர் மட்டுமல்ல, எல்லாத் தரப்பு வாசகர்களும் இந்த ரவுலிங் எழுதிய ஏழாவது நாவலுக்காக ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். 12 மில்லியன் படிகள் அச்சாகின்றன. வெளிவந்தவுடன் உலகமெங்கும் விற்றுத் தீர்ந்துபோகும். 'ஹாரிப் பொட்டரும் சூன்யக்காரர் கல்லும்' என்ற முதலாவது நாவல் 1997ஆம் ஆண்டு வெளிவந்தது. சூன்யம், மந்திரவாதம் முதலான நம்ப முடியாத கருத்துக்கள், விளக்குமாற்றில் பறத்தல், உருமாற்றம், இயற்கைக்கு முரணான உயிரினங்கள் என்று கற்பனையை பறக்கவிட்ட ஆசிரியர் மாந்தீரிகத்தைப் படிக்கும் கல்லூரிகளைக்கூட நிறுவிவிட்டார் தனது முதல் நாவலில்.

மாந்திரீக, தத்துவஞானிக் கல்லை அருந்தினால் இறவா வாழ்வைப் பெறலாம் என்று அதனைத் தேடி அலையும் பேராசிரியர், அதனை அவரிடம் இருந்து காக்க முயலும் ஹாரிபொட்டரும், அவனது நண்பர்களும் கதையை நிறைக்கிறார்கள். வால்ட்மார்ட் பிரபு என்பவர்தான் தனது தாயின் மரணத்திற்குக் காரணம் என்பதை ஹாரி அறிந்துகொள்கிறான்.

இந்த நாவலைத் தொடர்ந்து பொட்டரை நாயகனாக வைத்து மேலும் ஐந்து நாவல்களைப் புனைந்துவிட்டார் ரவுலிங். பணக்காரப் பெண் எழுத்தாளர்களில் அவரும் ஒருவர். முதல் நாவலைப் படித்தவுடன் அடுத்த நாவலைப் படித்தாக வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகின்ற வகையில் கதையைப் பின்னிச் செல்லும் அவருடைய ஆற்றலைத்தான் அனைவரும் புகழ்கின்றார்கள். இரண்டாவது நாவலான 'இரகசியங்களின் அறையிலிருந்து ஒரு விசித்திர மிருகம் வெளிப்படுகின்றது." மூன்றாவது நாவல்



'அஸ்கமான் கைதி' என்பது. இதனில் பொட்டர் தனது சூன்ய வித்தையை இந்த உலகில் காட்டுகிறான். பிறகு அவனது எதிரியான சீரியன்பிளாக் அவனைக் கொல்வதற்காக வெளிவந்திருப்பதை அறிகிறான். அவனுடைய பெற்றோரைக் காட்டிக் கொடுத்தவனைப் பற்றிப் பிறர் அவனிடம் கூறுகின்றார்கள். அடுத்த நாவலான தீப்பிழம்பில் பொட்டர் மூன்று போட்டிகளில் கலந்துகொள்கிறான். அங்கே அவனுடைய இரத்தத்தைப் பயன்படுத்தி வால்ட்மார்ட் பிரபு மனித உடலைப் பெறுகிறான்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்...)

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

*"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தனித்தீர்கள்"*

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை


Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk

## வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் நடமாடும் பற்சிகிச்சை முகாம்



நடமாடும் பற்சிகிச்சை முகாம் வவுனியா கோமரசன் குளம் கிராமத்தில் நடைபெற்றபோது.

மனித நேயத்தை மதிக்கும் செயற்பாடுகளில் ஒரு கட்டமாக வவுனியா கோமரசங்குளம் பங்கிற்குட்பட்ட கிராமங்களின் மக்களுக்கு பற்சிகிச்சை அளிக்கப்பட்டது.

பற்சிகிச்சை தேவைப்படும் மக்களில் 45 பேருக்கு வாழ்வுதயத்தின் சமாதானப் பிரிவின் ஏற்பாட்டில் வவுனியா கோமரசன்குளம் R.D.S கட்டிடத்தில் கடந்த மாதம் மேற்படி சிகிச்சை வழங்கப்பட்டது.

இப்பற்சிகிச்சைச் சேவையானது வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் மூலமாக மக்களுக்கு கொண்டுசெல்லப்பட்டது. இப்பற்சிகிச்சையினை வைத்தியர் திரு. யோகராஜா அவர்கள் வழங்கினார்கள். இதில் பல் பிடுங்குதல், பல் அடைத்தல், பல் துப்பரவு செய்தல் போன்ற சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இப்பற்சிகிச்சை முகாமானது அப்பிரதேச மக்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் வாழ்வுதய நிறுவன இயக்குனர்; கோமரசன்குளம் பங்குத்தந்தை மற்றும் வாழ்வுதய சமாதானப்பிரிவு அலுவலகர்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டன.

இச்சிகிச்சை முகாம் மூலமாக 45 பயனாளிகள் பெரிதும் பயனடைந்துள்ளார்கள். இந்நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர், பங்குத்தந்தை, பாடசாலை அதிபர், வாழ்வுதய நிர்வாக அலுவலகர் மற்றும் வாழ்வுதயப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மளுவராயர் கட்டையடம்பனில் சமாதானக் கருத்தமர்வு

மேற்படி கருத்தமர்வானது 19.07.2007 அன்று காலை 9.30 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை நடைபெற்றது. இக்கருத்தமர்வில் கிராம மக்கள் பலர் கலந்துகொண்டனர். இக்கருத்தமர்வுக்கு அருட்பணி. யூட்குரூஸ் அடிகளார் வளவாளராகக் கலந்துகொண்டார்.

அவர் அங்கு கூறியதாவது, "சமாதானம் என்பது எமக்குள் மாத்திரமல்ல முதலில் எமது குடும்பங்களில் மலர வேண்டும். பின்னர்தான் எங்களுடைய குழுக்கள் மத்தியில் அது கொண்டுசெல்லப்பட முடியும். உண்மையான சமாதானம் எம்முள் தோற்றம்பெறும் பொழுதுதான் நாங்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் மனப்பக்குவம் உருவாகும்." என்றார். சமாதானமாக வாழும் நம்முடைய வாழ்க்கையில் எவ்வாறான மாற்றங்கள் காணப்பட வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தினார். இவற்றோடு சமாதானத்தை முன்னெடுப்பதில் எம்முடைய பங்களிப்பு எப்படியாக அமைய வேண்டும் என்ற கேள்வியைக் கேட்டு மக்களின் கருத்துக்களையும் அறிந்துகொண்டார். இந்த அமர்வு விளையாட்டுக்கள், கலந்துரையாடல்கள் மூலமாகச் சிறப்பாக நடாத்தப்பட்டது. இவ் அமர்வின் மூலம் இதில் கலந்துகொண்ட மக்கள் சமாதானம் பற்றிய எண்ணக்கருவை புரிந்துகொண்டு விழிப்படைந்துள்ளனர். அத்தோடு ஒற்றுமையாக வாழும் மனப்பக்குவம் அடைந்து தமது கருத்துக்களைச் சுதந்திரமாகக் கூறும் தன்மையையும் பெற்றுள்ளார்கள். இந்த அமர்வு கிராம மக்களுக்கு நற்பயன் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்வுதயத்தின் கடந்த மாத நிவாரணப்பணிகள்



சமகாலப் போர்ச் சூழலினால் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு கறிற்றாஸ் - வாழ்வுதயம் பல்வேறு நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வந்ததை கடந்த மன்னா பத்திரிகைகள் ஊடாக பலரும் அறிந்துள்ளனர். இதேபோல் கடந்த மாதம் வாழ்வுதயத்தின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரிவு இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு இன, மத வேறுபாடு இன்றி நிவாரணப்பணிகளை ஆற்றியுள்ளது.

இதில் வைத்தியச் செலவுக் கொடுப்பனவுகள், தற்காலிக குடிசைகளுக்காக கிடுகுகள் 7 குடும்பத்திற்கும், மரண வீட்டுச் செலவுக் கொடுபனவுகள் 3 குடும்பத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக மடு வலயங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மாதாந்தம் நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் 3500கிலோ மா, 2500கிலோ சீனி, 1200 மீன்ரின், 1800பெட்டி அங்கர், 370கிலோ தேயிலை, 1500 சன்லைட், 1440 கோம்பா சோப், 500கிலோ நெத்தலி, 630லீற்றர் தேங்காய் எண்ணெய், போன்றவைகள் மேற்படி பிரிவில் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. இவற்றைவிட வாழ்வுதய அலுவலகத்திலும் 34 குடும்பங்களுக்கு இவ்வாறான உலர் உணவுகள் கடந்த மாதம் மட்டும் விநியோகம் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் ஒன்றிப்பு நிகழ்வு



அண்மையில் தரவன்கோட்டையில் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கு நடத்தப்பட்ட கலாச்சார ஒன்றிப்பு நிகழ்வின்போது.

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் கீழ் இயங்கும் கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் மன்னார் தீவுப் பிரதேச கிராமிய மக்கள் அமைப்பு உறுப்பினர்களுக்கான கலாச்சார ஒன்றிப்பு நிகழ்வானது அண்மையில் மன்/ தரவன்கோட்டை கிராமத்தில் சிறப்பாக நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் 63 கிராமிய குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வு காலை 9.45 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை இடம்பெற்றது. இரு சமய வழிபாட்டுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது.

பின்னர் வாழ்வுதயக் கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகள் தொடர்பான அறிவூட்டல்களும், அன்றைய நாள் நிகழ்ச்சித் தொகுப்பு பற்றிய விளக்கங்களும் தொகுக்கப்பட்டு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடாத்தப்பட்டன. இக்குழுவாழ் மக்களோடு கீரி கிராமத்தில் இயங்கும் வாழ்வுதய "ஜீவ ஊற்று" சிறுவர் கழக உறுப்பினர்கள் 28 பேரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான "குடும்ப முரண்பாடுகளைத் தீர்த்தல்" கருத்தமர்வு அண்மையில் சிலாவத்துறையில் நடைபெற்றபோது.

இக்குழுக்களில் மன்/ சாந்திபுரம், தரவன்கோட்டை, 65 வீட்டுத்திட்டம், மன்/ பெரியகமம் மற்றும் கீரி, போன்ற கிராமங்களில் இயங்கிவரும் குழு உறுப்பினர்களே கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்வில் குழுக்களாகப் பிரித்து போட்டி நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. இதில் விளையாட்டுக்கள், கலைத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வுகள் மூலம் இவர்களின் இவ்வொன்றிப்பு நிகழ்வு கொண்டுசெல்லப்பட்டது.

அன்றைய நாள் இப்பிரதேச குழுக்களுக்கு ஓர் மகிழ்ச்சியான நாள் என இக்குழு உறுப்பினர்கள் தெரிவித்திருந்தார்கள். இவ்வனைத்து செயற்பாடுகளையும் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் பிரிவு அலுவலகர்கள் சிறப்பாகத் திட்டமிட்டு நடாத்தினார்கள்.



உதவிக்கரப்பிரிவினரால் பயனாளி ஒருவருக்கு (இரா. நியூட்டன், கீரி) கைப்பட்டி அணிவிக்கப்படுகின்றது.

**செய்தித் தொகுப்பு :**
**எஸ். அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
**இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்**

## தொழிற் பயிற்சிப் பிரிவின் சான்றிதழ் மற்றும் உபகரண தொகுதி வழங்கல் நிகழ்வு

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் தொழிற்பயிற்சி பிரிவின் மூலம் வெளிக்களப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு (OJJ) சான்றிதழ் மற்றும் உபகரணத் தொகுதி போன்றவைகளை அண்மையில் வாழ்வுதய மண்டபத்தில் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை S.J. பெப்பி சோசை அடிகளார் வழங்கினார்.

இந்நிகழ்வில் வாழ்வுதய இயக்குனரோடு வாழ்வுதய தொழிற்பயிற்ச்சிப் பிரிவு அலுவலகர், பயிற்றுவித்த ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களின் பெற்றோர் போன்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் வழங்கப்பட்ட உபகரணத்தொகுதியின் விபரங்கள் தலா ஒரு மாணவனுக்கு வீட்டு மின் உபகரணத் தொகுதி 9000/= ரூபா பெறுமதியிலும், வீட்டு மின் இணைப்பு உபகரணத் தொகுதி 9000/= பெறுமதியிலும், பனம் பொருள் உற்பத்தி உபகரணங்கள் தொகுதி 7500/= பெறுமதியிலும் வழங்கப்பட்டது. இப்பயிற்சிகளில் பிறமாணவர்களும் கலந்துகொண்டு பயனடைந்தனர். இப்பயிற்சிகளுக்கு சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) நிதியுதவி அளித்தமை குறிப்பிடத்தக்கது.

## நானாட்டானில் சமாதான குழு உருவாக்கம்



நானாட்டானில் மாணவர் சமாதான குழு புதிதாக அமைக்கபட்டது. இந்நிகழ்விற்கு சமாதானப் பிரிவின் இணைப்பாளர், கல்விப் பிரிவின் இணைப்பாளர், வாழ்வுதய சமாதானப் பிரிவின் ஊக்குவிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த 16-07-07 அன்று திங்கள் மாலை 2.30 மணியளவில் நானாட்டானில் புதிதாக மாணவர் சமாதானக் குழு உருவாக்கம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வாழ்வுதயத்தின் ஊடாக கல்வி உதவி பெறும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். இதன் நோக்கம் பாடசாலை மட்டத்தில் இருந்து மத வேறுபாடு இன்றி சிறுவயதில் இருந்தே மாணவர் மத்தியில் சமாதானத்தை உருவாக்குவதாகும்.

இதில் 14 மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் சமாதானப் பிரிவின் இணைப்பாளர். திரு. C.M.A ஜெயதாஸ், கல்விப் பிரிவின் இணைப்பாளர் கிறிஸ்ரின், சமாதான ஊக்குவிப்பாளர் பெனிற்றஸ், நானாட்டான் பிரதேசத்திற்கான சமாதான ஊக்குவிப்பாளர் திரு. ஜீவன் என்பவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

தருவது தஞ்சை டோமி

அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.

## 1. மரியா வணக்கமும் கத்தோலிக்கப் போதனையும்

தொடர் - 01

**சாதாரண பெண்ணாகிய மரியாவைக் கடவுள் நிலைக்கு உயர்த்தும் கத்தோலிக்கர்கள், பெண்களை ஏன் குருக்களாக்குவதில்லை?**

*- பிரிவினை சகோதரர்கள், தினத்தூது நாளிதழ் (15.6.1997)*

முதலில் அன்னை மரியா சாதாரண பெண் அல்ல. பிரிவினை சகோதரர்களின் இக்கேள்வியில் வெளிப்படுவது பெண்களின் நிலையை உயர்த்த வேண்டும் என்பதைவிட, கன்னி மரியா பக்தியைக் களங்கப்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கமே.

"தாயன்பை எடுத்துரைக்க உலக மொழிகளில் போதிய வார்த்தைகள் இல்லை" என்கிறார் ஓர் அறிஞர். அப்படி இருக்க உருவில்லாக் கடவுளுக்கே உருக்கொடுத்த மரியாவை எப்படிப் புகழாமல் இருக்க முடியும். இதைத்தான் புனித அகுஸ்தினார் "ஒரு மனிதனின் உடலினுள்ள உறுப்புகளெல்லாம் நாக்குகளாக மாறினாலும் மரியன்னையை அவருடைய தகைமைக்கு ஏற்றவாறு புகழ முடியாது" என்கிறார்.

மரியன்னையை இவ்வாறு புகழ்வது நியாயமா? இது சிலை வழிபாடு இல்லையா? விவிலியத்திற்கு முரண்பட்டதில்லையா? எனக் கிறிஸ்தவச் சபைகள் சரமாரியாகக் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றன. அவர்களுக்கு விவிலிய மேற்கோள்களைக் கொண்டே பதிலளிக்க விரும்புகிறேன்.

1) மரியா பக்தியை தொடங்கியது மனிதனல்ல - கடவுளே! லூக் 1:28இல் கபிரியேல் வானதூதர் மரியாவுக்கு மங்கள வார்த்தை சொன்னபோது "அருள் நிறைந்த மரியே வாழ்க!" என்றார். இதன் மூலம் அன்னை மரியா 'அருள் நிறைந்தவர்' என்று மரியா பக்தியைக் கடவுளே தொடங்கி வைத்தார்.

2) எலிசபெத் வழியாக தூய ஆவியானவர் இன்னும் ஒரு படி மரியா வணக்கத்தை உயர்த்தினார்.
லூக் 1:42-45 "மேலும் தூய ஆவி நிரம்பியவராய் பெண்களுக்குள் நீர் ஆசீர்பெற்றவர். என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்று எலிசபெத் கூறினார்.

இவ்வாறு தூய ஆவி எலிசபெத் வழியாக மரியாவை 'ஆண்டவரின் தாய்' 'ஆசி பெற்றவர்'. மேலும் 'பேறுபெற்றவர்' என்று போற்றுவதைத் திருவிவிலியம் நமக்கு விளக்கமாகவே கூறுகிறது. (லூக் 1:41).

அனைத்திற்கும் மேலாக அன்னை மரியாவே இறைவாக்காக "இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூர்க் 1:48) என்று கூறியதுதான் இன்று உலகமெங்கும் நடந்து வருகிறது.

**02. அன்னை மரியா மற்றும் புனிதர்களின் வணக்கம் சிலை வழிபாடே. கத்தோலிக்கர்கள் விக்ரக ஆராதனை செய்யவில்லையா?**

*- சகோ. சகாயராஜ், பெந்தகோஸ்து சபை, புதுக்கோட்டை.*




"நாமே! நம்மைத் தவிர வேறு தேவன் உனக்கு இல்லாமல் போவதாக" (விப 20:3) என்ற யாவே இறைவனின் திருச்சட்டப்படியும் "உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக" (இ.ச. 6:5) என்ற பழைய ஏற்பாட்டின் இறைவார்த்தைக்கு ஏற்பவும், எக்காலத்திற்கும் இறைவன் ஒருவரே ஆராதனைக்கும் மகிமைக்கும் உரியவர்.

புனிதர்களுக்கு நாம் செலுத்துவது வணக்கம் என்பதையும், அன்னை மரியாவுக்கு நாம் காட்டுவது சிறப்பு வணக்கம் என்பதையும் நாம் அனைவரும் உணர வேண்டும். மரியா இறைவனின் தாய் என்பதால் நம்முடைய சிறப்பு வணக்கத்தைப் பெறுகிறார்.

புனிதர்களின் வணக்கத்தைச் 'சிலை வழிபாடு' என்று கூறுவது முற்றிலும் உண்மைக்கு மாறுபட்டது. சிலை வழிபாடு என்பது சிலைகளைத் தெய்வமாகக் கருதி வழிபடுவதாகும். கத்தோலிக்கர்கள் அவ்வாறு செய்யவில்லை. புனிதர்களின் உருவங்களில் புனிதர்கள் இல்லை என்பதும் உருவங்களுக்குச் செலுத்தும் வணக்கம் உருவங்களுக்களுக்கில்லை புனிதர்களுக்கே என்பதும் நமக்குத் தெரியும்.

உரே 1:25 இல் "படைக்கப்பட்டவற்றை வழிபட்டு அவற்றுக்குப் பணி செய்தார்கள். படைத்தவரை மறந்தார்கள்" என்ற தூய பவுலின் வார்த்தைகளை இங்கு நினைவுகூர்ந்து உணர்வது மிகவும் முக்கியம். புனிதர்களின் வணக்கம் இறைவனை மறக்கச் செய்ய அல்ல. இறைவனிடம் நம்மை இட்டுச் செல்லவே.

(கேள்வி, பதில் தொடரும்...)



"தூய்மையான மனசின் அறிகுறியே
அவர்களின் உரத்த சிரிப்புத்தான்"
*P. செல்வேந்திரன்*
*நறுவிலிக்குளம், வங்காலை.*

"எழுதி வைக்காத கணக்கும், உழுது விளைக்காத நிலமும் ஒழுங்கற்ற நிலையில் உருக்குலைந்து போய்விடும்."
*P. செல்வேந்திரன்*
*நறுவிலிக்குளம், வங்காலை*

"நான் என்னும் எண்ணம் இருக்கும்வரை
ஆசைகளும் இருந்தே தீரும்"
*அ. தர்சினி (அனிஸ்ரா),*
*தரவன்கோட்டை, எழுத்தூர்.*

"மற்றவர்கள் தவறுகளை திருத்த முன்னர் நாம் எமது தவறுகளை திருத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்"
*P. செல்வேந்திரன்*
*நறுவிலிக்குளம், வங்காலை*

"கடவுளற்ற மனித சமூகம் மிருகங்கள் உள்ள காட்டிற்குச் சமன்"
*அன்ரன் தேவசகாயம்*
*பிரான்ஸ்*

"அன்பிற்கு அப்பாற்பட்ட அறிவு கலக்கம் விளைவிக்கும்"
*தொ. மேரி கில்டா,*
*தி.கு.க. மடம், பெரிய பண்டிவிரிச்சான், மடு*

"எது மனிதனை விட்டுப் பிரியாததோ அதுவே
அவனுக்கு சொந்தமான செல்வமாகும்"
அது கடவுள்.
*ஜே. வியூறிதா, பள்ளங்கோட்டை, நானாட்டான்.*

"நல்லவரைப் பார்க்கும்போது பின்பற்ற நினையுங்கள்.
கயவரைப் பார்க்கும்போது உங்கள் இருதயத்தை
பரிசோதித்துக் கொள்ளுங்கள்"
*செ. சுதர்சினி, பிடாரிகுளம், முருங்கன்*

"எல்லோரும் தவறு செய்பவர்களே
முட்டாள்கள் மட்டுமே
அதைத் திரும்பத்திரும்பச் செய்வார்கள்."
*சுஜீவா, பிடாரிகுளம், முருங்கன்*

## மன்னா விளம்பரப் பலகை

"தொந்தரவு உங்களை தொந்தரவு செய்யாதவரை
அதைத் தொந்தரவு செய்து விடாதீர்கள்"
*செ. சுதாகர், பிடாரிகுளம், முருங்கன்*

"அறிவு அன்பை வளர்ப்பது உறுதியன்று.
ஆனால் அன்பு அறிவை வளர்ப்பது உறுதி"
*ஜே. வியூறிதா, பள்ளங்கோட்டை, நானாட்டான்.*

"மனதை தளர்வுறச் செய்வது துன்பமார்க்கம்
மனதை உறுதிப்படுத்துவது சன்மார்க்கம்"
*ப. ஜெ. பபிற்றா, தரம் - 09,*
*சூரியகட்டைக்காடு, நானாட்டான்.*

"தமக்கென வாழ்வோர் சிறியோர்
பிறருக்கென வாழ்பவர் பெரியோர்"
*ப. ஜெ. பபிற்றா, தரம் - 09,*
*சூரியகட்டைக்காடு, நானாட்டான்.*

"நினைத்தது கிடைக்கவில்லை என வருந்தாதே.
கிடைத்ததை நினைத்துப் பெருமைப்படு"
*மு.அன்ரனட் மொறிஸ் பெனான்டோ,*
*முத்தரிப்புத்துறை*

"வாழ்வில் முன்னேறுவதற்கு நெஞ்சில் தைரியமும்
உதட்டில் உண்மையும் இருந்தால் போதும்"
தமிழன்பன், வங்காலை

"எனக்குப் பாதரட்சைகள் இல்லாததை எண்ணி
வருந்திக் கொண்டேயிருந்தேன் பாதங்களே
இல்லாத ஒரு மனிதனை நான் கண்டபின்
என் வருத்தம் தீர்ந்தது"
*யே. மொறின் சிந்துஜா, கன்னாட்டி, அடம்பன்*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது.
இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக்' 'நறுக்' சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.

முகவரி :
மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

## நாம் தேடும் சமாதானம்



மனிதா!
உன் மனதிற்கு நிம்மதி வேண்டும்
உன் உயிருக்கு ஆறுதல் வேண்டும்
உன் உணர்விற்கு சுதந்திரம் வேண்டும்
உன் கண்களுக்குத் தூக்கம் வேண்டும்
உன் உறவுக்குப் பொறுமை வேண்டும்
இவை நிலைப்பதற்கு உன் நாட்டுக்குச் சமாதானம் வேண்டும்.

தொட்டதெல்லாம் வேதனை – அதை வென்று முடிப்பதே சாதனை
பட்டதெல்லாம் போதும் துயரம் விட்டதெல்லாம் விடுதலைக்கே
சட்டமெல்லாமல் வேண்டாம் சமாதானமே வேண்டும்
சாய்ந்த துப்பாக்கிகளின் சத்தம் சஞ்சலமாய் ஒலிக்க வேண்டும்

கிடைத்திருந்த நிம்மதியையும் கிள்ளி எறிந்திட்டாரே!
அச்சமின்றி வாழ்ந்த மக்களை மிச்சமாக அழிக்க வேண்டாம்
நேர்மையெங்கும் ஓங்கவேண்டும் சமாதானம் ஒளிரவேண்டும்
யுத்த ஆயுதம் புதைய வேண்டும்
சமாதான யுகம் மிளிர வேண்டும்.

காந்தியின் பாதையில் சமாதானம் வேண்டும்
எறிகணை வீச்சுக்கள் நிறுத்தப்பட வேண்டும்
ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டும்.
பள்ளியும் கோயிலும் பக்கத்தில் வேண்டும்
பசுமையாய் சதா சமாதானம் வேண்டும்
சுதந்திரப் பறவைகளாய் நாம் வாழவேண்டும்
ஆச்சரியப் பூ அகிலத்தில் சொரிய வேண்டும்.

இரத்த ஆறு பெருகுகிறது
பச்சிளம் பாலகனின் பிஞ்சு நெஞ்சங்களிலிருந்து
எழுந்தான் பயமெனும் அரக்கன்.
சோலையாக இருந்த பூமிகூட வரண்ட பூமியாக மாறியது.
இச்சைகள் வேண்டாம், இலஞ்ச ஊழல்கள் வேண்டாம்
இன வேறுபாடுகள் வேண்டாம்,. சுற்றி வளைப்புக்கள் வேண்டாம்
இரத்த ஆறுகள் வேண்டாம், வெள்ளை வான்கள் வேண்டாம்.
காட்டிக் கொடுப்புக்கள் வேண்டாம்,
கண்மூடித்தனங்கள் வேண்டாம்
கைதுகள் வேண்டாம்,
சமாதானம் ஒன்றே வேண்டும்!



அமைதிப் புறாவே விரைந்து வா!
எங்கள் நாட்டில் அமர்ந்து பாட வா!
அடிமை விலங்கை அறுக்க வா!
எங்கள் நாடு தழைக்கவா!
வறுமை நோயை விரட்டவா!
சமதர்மம் வெல்லப் பறந்து வா!
கொடுமை செய்வோர் ஒழிய வா!
கொலை கொள்ளை யாவும் தொலைய வா!
விடியல்போல சிலிர்த்து வா!

ஐந்து வயதுப் பிஞ்சுக் குழந்தை முதல்
பஞ்சித்தலை கொள்ளும் தாத்தா வரை
கொஞ்சிக் கொஞ்சிப் பேசி அவர்
கெஞ்சிக் கேட்பது சமாதானமே
நாட்டின் நலனுக்குழைக்கும்
நல்லோர் முதல் புத்தி ஜீவிகள் வரை
விமானக்குண்டுத் தாக்குதல் பார்த்தது போதும்
எறிகணை வீச்சுக்களைக் கேட்டது போதும்
நாம் தேடும் சமாதானமே வந்துவிடு!

*அன்ரன் அருள்சுரேசா,*
*மன்/ கருங்கண்டல் ம.வி., மன்னார்.*

# இளைஞர் மொழிவு

## நட்பும் அதன் தனித்துவமும்

"அவனைப்போல ஒரு நண்பன் கிடைக்க நான் வாழ்க்கையில் நிறையப் புண்ணியம் செய்திருக்க வேண்டும்"

"நான் கொடுத்து வைத்தவள். ஏனென்றால் என் நண்பியைப்போல வேறு யாருக்கும் கிடைப்பது அரிது. கடவுளுக்கு நிறையவே நன்றி சொல்ல வேணும்."

"சீ... அவனும் ஒரு நண்பனா? நன்றி கெட்ட ஜென்மம். நண்பன் என்று சொல்லவே வெட்கப்படுகின்றேன்."

"எனக்கு இப்போ மனசு நல்லாவே இல்லை. கடைசியில் அவ(னு/ளு)ம் எல்லோரையும் போலவே என் நட்பை தப்பாக எடைபோட்டு விட்டா(ன்/ள்)."

இவை நட்பு, நண்பத்துவம் என்பன தொடர்பாக நாளாந்தம் நாம் கேள்விப்படும் சில நேரானதும் (Positive) எதிரானதுமான (Nagative) சிந்தனைகளாகும்.

எமது வாழ்க்கையை நோக்குவோமானால், அது ஆயிரமாயிரம் அதிசயங்களை எப்போதுமே தனக்குள் வைத்திருக்கின்றது. தினந்தோறும் எத்தனையோ பேரைக் கடந்துபோகிறோம். எல்லோருடனும் நாம் நட்புப் பாராட்டுவதில்லை. மிகப் பெரிய நந்தவனத்தில் நமக்கான சில பூக்கள் எப்போதும் காத்திருப்பதைப் போலவே வாழ்வில் உறவுகளும் காணப்படுகின்றன.

பார்த்துப் பழக பலருடன் சந்தர்ப்பம் கிடைத்தாலும் சிலரையே நமக்குப் பிடிக்கிறது. சிலருடன் நட்பு, ஒருவருடன் காதல் என்பது மனம் செய்யும் தேர்வு. முதலில் நாம் காதலுக்கும், நட்புக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை உணர்ந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நட்பு களங்கமற்றதாகவும், அதன் தனித்துவத்தைப் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

### காதலும் நட்பும்:

"காதல்" என்பது மிகப் பிரத்தியேகமான உணர்வு, உறவு நிலை. உணர்ச்சிகளின் உச்சத்தில் ஏற்படும் ஒரு காந்தக் கவர்ச்சி. இதைத் திட்டமிட்டு உணர்ந்து, தெளிந்து உருவாக்குவது இயலாது.

"நட்புக்கும் காதலுக்கும் இடையேயுள்ள இடைவெளி மிகச் சிறியது. கொஞ்சம் சறுக்கினாலும் அவை தமது புனிதத்துவத்தில் இருந்து கெட்டுவிடும்" என்பார் எழுத்தாளர் ஒருவர்.

நட்பு என்பது மெல்ல வளரும் தோழமை என்பதால் அதைப்பற்றி நாம் தெளிவாகவே இருக்க வேண்டும். பார்க்கும் பழகும் அனைவருமே நண்பர்களாக வாய்ப்பு உள்ளது என்றாலும் மனதில் எண்ணங்களால் ஒரு சல்லடை போடப்படுகிறது. அது பலரை ஒதுக்கி சிலரை உள்ளே அனுமதிக்கின்றது.

நட்பு எப்படி உருவாகிறது என்பதைப் பார்ப்போமானால், முதன்முறை பழக்கம் அடிக்கடி என்றானதும் அதில் ஒரு இணக்கம் தொனிக்கும். இணக்கம் என்ற அங்கீகாரம் காலப்போக்கில் நம்பிக்கையாய், அன்பாய் பரிணமிக்க அதுவே நட்பாகிறது. நட்பு என்பது இருவழித் தொடர்பு. சமவயது உள்ளவர்களே நண்பர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் சமத்துவம் என்பது தேவையானதாகக் காணப்படுகின்றது. தெளிவாய், நேரடியாய் தொடர்பு கொள்ளக்கூடிய எந்த இருவருக்குமே நட்பு என்பது சாத்தியம்.

சில நேரங்களில் நாம் நட்பு என்பதைத் தவறாய்ப் புரிந்துகொள்ளுகின்றோம். இனிமையாய்ப் பேசிச் சிரித்துக் கை குலுக்கி விட்டுப்போகும் பலரை நண்பர்கள் என்று கூறிக் கொள்ளுகின்றோம். நட்பு என்பது ஒருமுறை காட்டும் தரிசனம் அல்ல. அது வாழும் வரை தொடரும் அக்கறை. நட்பு நம்பிக்கையின் அடிப்படையில் வளர்வது என்பதால் இங்கே எதிர்பார்ப்பு என்பதும் நியாயமானதாகக் காணப்படுகின்றது. எதிர்பார்ப்பு என்பது புரிந்துகொள்ளக்கூடிய தன்மையுடன் இருந்தாலே நட்பு.

மனநிலை என்பது நட்பின் கரு. ஒரு சோகமான மனநிலையில் ஆறுதலாய்ப் பேசும் அந்நியருடன் கூட நட்புத் தோன்றலாம். ஆனால் இயல்பான மனநிலையில் தோன்றும் நட்பில்தான் சமமான நிலைமை உருவாகும்.

சமநிலை நட்பின் அத்தியாவசியமான பண்பாக உள்ளது. நன்கு வளர்ந்து ஆழமாய் உருவாகியிருக்கக்கூடிய நட்பு சில கட்டங்களில் ஆரம்பத்திலோ, இடையிலோ முறிவதையும் பார்க்கிறோம். இதற்கு சமூக நிர்ப்பந்தங்களும் காரணமாய் இருக்கின்றன. ஆண் - பெண் என்ற வேறுபாடு இயற்கையிலேயே உள்ளது.

மாறிவரும் இன்றைய சூழ்நிலையில் பெண்களுடன் கை குலுக்குவது இயல்பாகி வருகின்றது. என்றாலும் இன்னும் காலம் காலமாக நம் சமூகத்தில் இருந்துவந்த சமுதாய விதிமுறைகள் இந்தக் கட்டுப்பாட்டை வளர்க்கின்றன. காதலியாகவோ, சகோதரியா-கவோ மட்டுமே பெண்ணை நோக்க முடியும் என்று பலரும் கருதுவதால் வரும் குழப்பமே ஆண் - பெண் நட்பு வளரத் தடையாகிறது.

பகிர்ந்துகொள்ளும் ஆர்வமும், எண்ணமும், இயல்பாய் இருக்கும் மனநிலையும், ஒருமித்த கருத்துக்களும் உள்ள ஆண் பெண்ணிடையே, இருவரும் தெளிவாய் இருக்கும் பட்சத்தில் ஓர் இனிய நட்பு என்பது சாத்தியமானதே.

நட்பின் கணித இயலை நோக்கும்போது, 1/2 ஆள் + 1/2 ஆள் = 1 ஆள் என்றவாறாக உள்ளது. அதாவது ஒவ்வொரு மனிதனும் தன்னிலே முழு மனிதனாக இல்லை. எவ்வளவிற்கு மற்றவர்களுடன் நட்புறவு கொள்ளுகின்றானோ, அந்தளவிற்கு முழு மனிதனாகிறான் என்பதே இதன் தத்துவமாகும். கிரேக்க தத்துவ ஞானியான பிளேட்டோ "நண்பனையடைந்தவன் ஒரு முழு மனிதன்" என்று கூறுகிறார். "இரு ஆன்மாக்கள் ஓர் உடலில் வாழ்வதை நட்பு" என்று கூறுகிறார் அரிஸ்டோட்டில்.

### அறிவும் எதிர்பார்ப்புக்களும்:

இந்த உலகில் பிறந்துள்ள ஒவ்வொரு நபரும் சிந்தனையிலும், செயலிலும், உணர்விலும் மேற்கொண்டுள்ள பொறுப்பிலுள்ள ஈடுபாட்டிலும், நாட்டத்திலும் (Aspiration), ஆசையிலும், பயத்திலும்.... தனித்தன்மை வாய்ந்தவர்கள். ஆகவே நண்பரின் சிந்தனை, செயல், உணர்வு, ஈடுபாடு, ஆசை, பயம் என்பன தொடர்பாக எமக்கு ஓரளவு அறிவு இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல, என்னிடம் குறிப்பாக அவ(ர்/ள்) என்ன எதிர்பார்க்கிறார் என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

### நம்பிக்கையும் அர்ப்பண வாழ்வும்:

நட்பின் மையம் நம்பிக்கை. நம்பிக்கை பயத்தையும், பாதுகாப்பின்மையையும் களைகிறது. தன்னை ஏற்றுக்கொள்ளத் துணை செய்கின்றது. "நம்பிக்கை" நண்பர்களிடையே உருவாவது கடினம். உருவாகிவிட்டாலோ வாழ்வே உருவாக ஏதுவாகின்றது.

### ஒருவரையொருவர் சார்ந்த உறவு:

நண்பர்கள் தங்களின் தனித்தன்மை குன்றாமல் ஒருவரையொருவர் சார்ந்த உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒருவரையொரு-வர் சார்ந்த உறவென்றால் கொடுப்பதும் பெறுவதும். இருவரும் தங்களை, தங்களுக்-குரியதை ஒருவர் மற்றவரோடு பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.

இந்த உறவில் ஒருவர் மட்டும் கொடுப்பதில்லை. ஒருவர் மட்டும் பெறுவதில்லை. ஒருவரோடொருவர் சார்ந்திருக்கும்போது ஒருவர் மற்றவரை மதிக்கவும், போற்றவும் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவரையொருவர் உறவிலே மதிக்கவும், போற்றவும் நாம் பழகவில்லையென்றால் நட்புறவு எளிதில் விரிசல் கண்டுவிடும்.

### தனிமையும் நெருங்கிய உறவும்:

நண்பர்கள் ஒருவருக்கொருவர் ஆழமான நெருங்கிய உறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால் தனிமை மிகவும் முக்கியமான அம்சம்.

தனிமையானதொரு சூழ்நிலை இல்லாமையால் தங்கள் ஆத்மார்த்தமான இரகசியங்களைப் பரிமாறிக்கொள்ள இயலாமல் நாட்களைக் கடத்த வேண்டிய சூழ்நிலையிலே பலர் காணப்படுகின்றனர்.

இவ் உறவிலே நம்மை நேர்மையாக வெளிப்படுத்த வேண்டும். எந்த முகமூடிகளும் இருத்தல் கூடாது. முகமூடிகள் இல்லாமல், என்னை என் நண்பன் ஏற்றுக்கொள்ளுவான் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாம் உறவைத் தொடங்குகிறோம்.

ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்க வேண்டிய தனிமை நிலை, நெருங்கிய உறவைப் பற்றியும் நாம் தெரிந்திருப்பது நலம். நம்பால் மிருகங்கள் என்ற உண்மையை மறந்து விடக்கூடாது.

ஓர் ஆணும் பெண்ணும் சமூகத் தொடர்பு கொள்ளும்போது பாலுணர்ச்சி பதுங்கிக் கிடக்கின்றது. தனிமையிலே நட்புறவாடும்போது சுலபமாக மேலோங்கி வந்துவிட வாய்ப்புண்டு.

அப்பொழுதெல்லாம் நம் கண்முன்னே இருக்க வேண்டிய உண்மை அவளை மதிக்கிறேன். போற்றுகிறேன் என்பதேயாகும்.

நட்பு ஒரு மனிதனை முழு மனிதனாக்குவது. மாறாக இது மிருகமாக்கினால் நட்பின் இலக்கணமே இல்லாமல் போய்விடும். "இருளில் துணைக்கு வருபவன் சிநேகிதன். நீ அவனை எப்படிப் பார்க்கிறாயோ அவன் அப்படியே இருப்பான்" என்ற அறிஞர் ஒருவரின் சிந்தனை இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

சுருங்கக் கூறினால், உண்மையான நட்பு என்ப்து இறைவ்னின் 'கொடை' எல்லாவற்றிலும் மேலான விலைமதிப்பற்ற செல்வம். விலை கொடுத்து வாங்க முடியாதது. தாய்க்கும் - பிள்ளைக்கும், கணவனுக்கும் - மனைவிக்கும், சகோதரனுக்கும் - சகோதரிக்கும், காதலனுக்கும் - காதலிக்கும் இடையே உள்ள உறவைவிட மேலானதொன்றாக நட்பு காணப்படுகின்றது. இதனாலன்றோ வரலாறு கர்ணன் - துரியோதனன், இராமன் - குகன் என்போரது நட்பைப் பற்றி இன்றும் பேசிக்கொண்டிருக்கின்றது.

நிறைவாக "முகமூடி இல்லாத, வேடம் இல்லாத, லேசாய் நடிப்பதுகூட இல்லாத ஒரு நட்பு மொத்தத்தில் ரொம்ப சுகமானது."


எனினும் நம்பிக்கைத் துரோகம் செய்யும்போது அழகான இந்த நட்பு சுக்குநூறாக உடைக்கப்பட்டு விடுகிறது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

உண்மையான நட்பு என்பது இறைவனின் 'கொடை' எல்லாவற்றிலும் மேலான விலைமதிப்பற்ற செல்வம். ●

நன்றி: நான் சஞ்சிகை

# தீர்ப்பிடுதல்

எஸ். ஜே. யோகராஜா



எமது வாழ்விலே அடிக்கடி மற்றவர்களைத் தீர்ப்பிடுகிறோம். ஒவ்வொருவருடைய செயலுக்கும் பின்னணியிலே மற்றொரு காரணம் உண்டு. காரணமில்லாத நடமாட்டம் எதுவுமில்லை எனலாம்.

ஒருவர் சொல்கின்ற சொல்லை அல்லது செயலை வைத்துக்கொண்டு அவரைப் புரிந்து கொள்ளமுடியாது. அதற்குப் பின்னால் உள்ள காரணத்தைத் தேடும்பொழுதே மற்றவரைப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஒரு நாள் வாலிபன் துவிச்சக்கர வண்டியில் வீதியால் சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது நேரம் ஏறக்குறை மாலை ஆறுமணியிருக்கும். அப்பொழுது அவன் ஒரு காட்சியைக் கண்டு விட்டுப் புதுமையடைந்தவனாக அப்படியே வீதியோரத்தில் நின்றுவிட்டான். அந்த வீதிக்கருகிலிருந்த குளத்தில் அவனது நண்பன் வழக்கத்துக்கு மாறாக இரு கைகளையும் உயர்த்திக்கொண்டு சத்தம்போட்டவாறு தண்ணீரில் நடந்து சென்றான். நண்பனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? என்று கவலையோடு சிந்தித்த வண்ணம் நின்றான். அப்பொழுது உடனே அங்கே வேறொரு காட்சியையும் கண்டான். அவன் கைகளை உயர்த்திய வண்ணம் கத்திக்கொண்டு செல்லும்போது அவன் பின்னால் சில தாராக்கள் செல்வதைக் கண்டான். உண்மை என்னவென்றால் அவன் நண்பன் தாரா சிலவற்றை வீட்டில் வளர்த்து வந்தான். காலையில் அவற்றை திறந்துவிட்டால் மாலையானதும் அவர் சென்று இரு கைகளையும் உயர்த்தி சத்தம் போட்டுக்கொண்டு சென்றால் பின்னாலே தாராக்கள் ஓடி வீட்டை அடையும்.

இங்கே வீதியால் சென்றவன் கண்ட காட்சி உண்மையானது. நண்பன் இரு கைகளையும் உயர்த்தியவாறு தண்ணீரில் நடந்து சென்றதும் உண்மை. ஆனால் அவன் பின்னாலே வந்த தாராக்களை இந்நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்தவில்லையேல் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்ற முடிவுக்கே வரவேண்டும்.

இதேபோன்று எமது வாழ்வில் குடும்பத்தில், அயலில், காரியாலயத்தில் மற்றவர்களைத் தீர்ப்பிடுகிறோமல்லவா? அவர் அப்படிச் சொல்ல, செய்ய என்ன காரணம் என்பதைத் தேடிப் பார்க்கிறோமா? அல்லது இதற்காகத்தான் அவர் இப்படிச் சொன்னார், செய்தார் என்று உடனே தீர்ப்பிடுகிறோமா? இப்படி அவசரப்பட்டுத் தீர்ப்பிடுவதால் எமது வாழ்வில் உறவுகள் முறிந்து கவலைப்படுகிறோமா? நிம்மதியை இழந்து தவிக்கிறோமா?

எமது உணர்வுகள் அடிக்கடி மாறக்கூடியன. கோபம், கவலை, பயம், பொறாமை, வேதனை, பசி, எரிச்சல் இப்படிப்பட்ட உணர்வுகள் எம்மில் மாறி மாறிச் செயற்படுவதால் எமது நடமாட்டங்களும் அடிக்கடி மாறுகின்றன. ஆகவே ஒருவர் ஒன்றைச் சொல்லும்போது, செய்யும்போது எப்படிப்பட்ட உணர்வு அச்செயலுக்குப் பின்னணியில் இருக்கின்றது என்பதை அறிந்தாலே அவரைப் புரிந்துகொள்ள முடியும்.

காலையில் மகிழ்ச்சியோடு வேலைக்குச் செல்கின்ற கணவன் மாலையில் கவலையோடு வீட்டுக்கு வருவான். இதைக் கண்ட மானைவி காலையில் சந்தோசத்தோடு சென்றாரே மாலையில் கவலையோடு வருகிறாரே என்பதை ஆராய்ந்து பார்க்காது மனைவியும் கோபத்தோடு கணவனுடன் நடந்துகொண்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவாது.

ஒருவர் ஒருவரைப் புரிந்துகொள்ளுமளவுக்கே நாம் நல்ல உறவை ஏற்படுத்தப் பழகுகிறோம். எம்மைப் புரிந்துகொள்ள்க் கூடியவர்களுடனே நாமும் நன்றாகப் பழக விரும்புகின்றோம்.

**தீர்ப்பிடாதிருக்க சில ஆலோசனைகள்**

1. ஒருவர் மற்றவரைப் பற்றி எம்மிடம் வந்து சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது நன்று.
2. மற்றவர் சொல்வது உண்மையாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்தாலும் தீர்ப்பிடாதிருப்பது நன்று.
3. ஒருவர் மற்றவரைப் பற்றி வந்து எதையாவது சொல்லும்போது அவர் தனிப்பட்ட விதத்தில் தனக்கிருக்கும் பிரச்சினையை முன்கொண்டு அப்படிச் சொல்வதால் தீர்ப்பிடாதிருப்பது நல்லது.
4. ஒருவர் தான் செய்த தவறை நினைத்து மனம் வருந்தி மனம் திருந்துகிறாரா? இல்லையா? என்பதை எம்மால் முழுமையாக அறிய முடியாதிருப்பதால் அவரைத் தீர்ப்பிடாதிருப்பது நன்று.
5. திடமாக அறிந்த விடயமானாலும் இரு பக்கங்களையும் தேடிப் பார்க்காது தீர்ப்பிடுவது பிழையல்லவா?
6. கண்களால் காண்பதைக் கொண்டு தீர்ப்பிடுவது நல்லதல்ல.
7. நீங்கள் இருக்கும் நிலையில் இருந்தவாறு தீர்ப்பிடுவதும் உகந்ததல்ல.

இவைகளை மனதிற்கொண்டு இன்றைய நாளிலிருந்து தீர்ப்பிடாது வாழ ஆசைப்படுவோம். நாள்தோறும் இதைப் பயிற்சி செய்வோம். மகிழ்ச்சியாக மற்றவருடன் நல்ல உறவை ஏற்படுத்தி வாழ்வோம்.

# துளிப்பா

**இதயம்**

சின்னச் சின்ன ஆசைகள்
குடியிருக்கும் தாஜ்மஹால்.

**காதல்**

ஒரு மனிதனை
ஆபத்தில் தள்ளிவிடும்
ஓர் அழகிய சாத்தான்.

**இலட்சியம்**

ஒவ்வொரு மனிதனும்
உதிரம்சிந்தி அடையும்
இனிய வரம்.

*சி. ஜென்சி., வீரபுரம், நேரியகுளம்.*

**காற்று**

உடலுக்கு நலம் தந்து
குளிர்ச்சியைக் கொடுக்கும்
ஒரு உன்னத மருந்து.

**மழை**

வயல் வெளிவளம் பெற
ஆறு குளம் கடல் நிறைவு பெற
கிடைத்த ஒரு அரும் கொடை.

**கடல் அலை**

ஹோ.. ஹோ என்ற ஓசையுடன்
ஓயாது பாயும் ஒரு
இசை அமைப்பாளர்.

*செ. நிலோசியன், சாளம்பன்.*

## வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!


தருவது வலண்டின் ஜோசப்



# வாழ்வும் வழிபாடும்

தொடர் – 9

### நாடகமும் வழிபாடும்



திருவழிபாட்டு இயக்கத்தைத் துவங்கிய ரொமானோ குவர்தினி (Romano Guardini) வழிபாட்டை ஒரு நாடகத்திற்கு ஒப்பிடுகிறார்.

திருவழிபாட்டில் பங்கு பெறுகின்ற அத்தனை பேரும் ஒருவிதத்தில் நடிகர்கள்தான். உள்ளத்தின் உணர்வுகளைச் சிறப்பாக வெளிப்படுத்துவதில்-தான் வழிபாட்டின் வெற்றியே அடங்கியிருக்கின்றது. இந்த விதத்தில் உடல் அசைவுகள் மனமுவந்து செய்யப்பட வேண்டிய ஒன்று. இங்கு திரும்பச் செய்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒவ்வொரு செய்கையும் ஒரு நிகழ்வே.

திருவழிபாட்டில் திருப்பணியாளர்களின் வார்த்தைகளுக்கு வலுவூட்டுவது அவருடைய செய்கைகள். சபை மன்றாட்டுக்-களிலும் இயேசுவின் செபம் போன்ற இடங்களிலும் கைகளை விரித்து செபிக்கிறார். திருப்பீடத்திற்கு வணக்கம் செலுத்துவதும் திருப்பண்டங்களைக் கையாளும்போது அவர் காட்டுகின்ற ஈடுபாடு அவரது உடலசைவுகளில் வெளிப்படுகின்றன. அதைப்போன்றே இறைமக்களும் தங்கள் நம்பிக்கையை அடையாளங்களில் வெளிப்படுத்துகின்றனர். வெட்கப்படுவதற்கோ பிறர் நம்மை கேலி செய்வார்கள் என்று தயங்குவதற்கோ இங்கு இடமே இல்லை.

### பண்பாட்டு வடிவங்கள்

வழிபாட்டில் நாம் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு செய்கைகளும் பண்பாட்டின் கலை வடிவங்கள். எனவேதான் உரோமைப் பண்பாட்டு அடையாளங்களுக்குப் பதிலாக இந்தியப் பண்பாட்டு அடையாளங்களைப் புகுத்த வேண்டும் என்று 12 அம்சத் திட்டத்தை 1971 ஆம் ஆண்டு இந்தியத் திருச்சபை கொண்டுவந்தது.

இந்தியப் பண்பாட்டு முறைப்படி தலைமேல் கை வைத்து வணங்குதல், பஞ்சாப்பிரணம் செய்தல், புனிதப் பொருட்களின் மீது கை வைத்து பின் நெற்றியில் ஒற்றிக்கொள்ளுதல், வணங்கி சமாதானத்தைத் தெரிவித்துக்கொள்ளுதல் போன்ற அடையாளங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இறைவன் முன் சரணாகதியடையும் விதத்தில் ஐம்புலன்களையும் தரையில் பதித்தல் இந்திய மரபு. இறைவனுக்குச் சரணாகதியாகும் அதே நேரத்தில் உடன் சகோதரர்களின் உறவில் இணைவது கிறிஸ்தவ மரபு. இவை இரண்டும் இணைந்து புதிய பண்பாடு வழிபாட்டில் உருவாகிக்கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

வார்த்தைகள் சொல்லாத பல்வேறு அர்த்தங்களைச் செய்கைகள் விளக்கும். ஆலயத்தில் நாம் அமர்கின்ற முறைகூட ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லும். ஒரு காலத்தில் அனைவரும் பீடத்தை மட்டும் பார்த்து வழிபடும் வண்ணம் ஆலயத்தில் இருக்கைகள் அமைக்கப்பட்டன. இன்று பீடத்தைச் சுற்றிக் குழுமமாக இறை மக்கள் சூழ்ந்திருக்கிறோம் என்பதை காட்டுகின்ற வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் ஒருவரோடு உள்ளார்ந்த இயைபு கொள்ளும் அளவிற்கு இருக்கைகள் அமைக்கப்பட வேண்டும்.

தரையில் அமர்வது நமது இந்தியப் பண்பாடு. விருப்பம் உடையவர்களுக்குத் தரையில் அமர வாய்ப்பு அளிக்கலாம். பழக்கமில்லாதவர்களைக் கட்டாயப்படுத்துவது வழிபாட்டிற்கு ஏற்ற சூழலை அமைத்துத் தராது. அமருகின்ற விதங்களிலும் இந்திய முறைப்படி பத்மாசனா முறையில் உட்கார மக்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். இதுதான் சிறந்த முறை என்று யாரையும் கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமையில்லை. நாம் உட்காரும் முறை எளியதாக, இனியதாக, இறை மனித சந்திப்பையும் இறைமக்கள் சந்திப்பையும் ஆழப்படுத்துவதாக அமைய வேண்டும்.

### அர்த்தமுள்ள அடையாளங்கள்

சென்ற ஆண்டு உரோமை புதிய சில நெறிமுறைகளை நமக்குத் தந்திருக்கிறது. நற்கருணை மன்றாட்டு வானவர் கீதம் போன்ற இடங்களில் 'இயேசு' என்று பெயர் வரும்போது தலைவணங்க வேண்டும் என்பது அந்த நெறிமுறைகளில் ஒன்று. கொஞ்சம் கொஞ்சமாக மக்களுக்கு இந்தப் பழக்கத்தைப் புகுத்துவது பலனளிக்கும். "இயேசு என்ற பெயருக்கு விண்ணவர் மண்ணவர் ஆகிய அனைவரும் தலைவணங்குவர்" என்ற இறைவாக்கின் அடிப்படையில் இந்த அடையாளத்தைக் கொண்டு வந்துள்ளது.

நமது வழிபாட்டைப் பொறுத்தவரையில் இயல்பாக இனிமையாக உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் நமது அங்க அசைவுகளும் செய்கைகளும் அமைய வேண்டும். உடல் அசைவுகள் என்ற மொழியை வழிபாட்டில் பயன்படுத்தும் கலையைக் கற்று பிறருக்குக் கற்பிக்க வேண்டியது நமது கடன். நாம் அணிகின்ற உடைகள் நாம் செய்கின்ற அலங்காரங்கள் நாம் வெளிப்படுத்துகின்ற அழகுணர்ச்சிகள் ஆகியவையெல்லாம் நமது உடலை ஆலயமாக்கி அந்த ஆலயத்தில் குடிகொண்டுள்ள இறைவனை வெளிப்படுத்தும் கருவிகளாக அமைந்தால் அதுவே சிறந்த இறை புகழ்ச்சியாக அமையும்.

அமர்வதும் எழுவதும் வழிபாட்டு அடையாளங்கள் என்ற உணர்வு நம்மிடம் வந்துவிட்டால் தாராள மனத்தோடு பங்கேற்போம். பங்கேற்கும் வழிபாட்டில்தான் புனிதமும் வல்லமையும் இறைமாட்சியும் அடங்கியுள்ளது.

(வழிபாடு தொடரும்...)

---

# திருவிவிலியத்தின் தெய்வீகத் தன்மையை எப்படிப் புரிந்துகொள்வது?

## – ஓர் அலசல் –

அருட்பணி அ.பி. ஜெயசேகரம்

மறை (சமயம்) மனிதனையும் இறைவனையும் இணைக்கும் நிறுவனம், இணைப்புப் பாலம் என்பர். மறையை வெறும் மனிதத்தன்மை கொண்டதாகக் கருதுகின்றவர்கள் இறைவனை அடைவதற்கான மனித முயற்சியின் வெளிப்பாடே மறை என்பர்.

இறைவன் இருக்கிறாரா என்பது தமக்குத் தெரியாது அல்லது மனிதன் கற்பிதத்தின் உருவாக்கமே இறைவன் என்பர். மறுபிரிவினர் மறை நிறைவான தெய்வீகத்தன்மை கொண்டது, மனிதர்கள் இறைவனை அடைவதற்கு இறைவன் காட்டிய வழியே மறை என்பர். இதைப் பின்பற்றினால் தாங்களும் தெய்வீக மயமடைவோம் என்பர்.

எனவே மறை மனிதத்தன்மை கொண்டதா? அல்லது தெய்வீகமானதா? என்ற கேள்வி எழுகின்றது. மெய்மை நடுநிலை கொண்டது. *தெய்வீக – மனிதக் கலவைதான் மறை.* இதைத் தெரிந்துகொள்வது மட்டுமல்ல இவை இரண்டும் எவ்விதமாகக் கிறிஸ்தவத்தில் உண்டென்பதை அறிய முயல்வது ஒரு தேவை.

மறைகளில் மிகத்தெய்வீகமானது வேத நூல்கள். அனைத்து மறைகளின் வேதநூல்கள் தெய்வீகமானதா? விவிலியம் தெய்வீகமானதா?

கிறிஸ்தவர்கள் நாம் விவிலியத்தை எமது மறை நூலாகக் கொண்டுள்ளோம். இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட இறைவார்த்தை விவிலியம் என்பதை நாம் நம்புகிறோம்.

மறுநெறிக் கிறிஸ்தவர்கள் விவிலியம் தெய்வீகமானது மற்றையவை - அதாவது கிறிஸ்தவத்திலுள்ள அமைப்புக்கள், குருத்துவம், சடங்குகள் போன்றவை மனிதத்தன்மை கொண்டவை என்பர். பெந்தக்கோஸ்து சபையினர் விவிலியம் இறை ஏவுதலால் எழுதப்பட்டதால் அதில் பிழையேதும் இருக்கச் சாத்தியமில்லை என்பர். எனவே இறைவனின் இத்தெய்வீகத் தன்மை எவ்விதமாக விவிலியத்தில் பிரதிபலிக்கிறது? இறைவனின் வார்த்தையடங்கிய விவிலியம் எவ்விதமாக பிழையற்றது? தெய்வீகத்தன்மை கொண்டது? என்பதை நாம் ஆராய வேண்டும்.

இறைவன் மனிதனோடு பேசவேண்டுமாயின் மனிதன் உள்ளக்குகையில் மட்டுமல்ல அனைத்து மனித, சமூகத் தளங்களில் மனிதர் புரியக்கூடிய மொழியிலே இறைவன் பேசமுடியும். மனிதர்கள் பல மொழிகள் பேசுபவர்கள். இறைவன் மனிதனோடு பேசுவதாயின் ஒரு மொழியைத் தெரியவேண்டும். விவிலியத்தில் இரு மொழிகள் மூல மொழிகளாக இருக்கின்றன. பழைய ஏற்பாடு எபிரேயத்திலும், புதிய ஏற்பாடு கிரேக்கத்திலும் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு மொழிக்கும் வரையறை உண்டு. ஒவ்வொரு மொழியாக்கத்திலும் உள்ளீட்டில் பிளவுகளுண்டு.

நிறைவான, முழுமையான மொழியாக்கம் கடினம். ஒரு மொழியின் சிறப்பான கருத்து வீச்சு மறு மொழியில் கிடைப்பதில்லை. இறைவன் வேறுபட்ட வடிவத்தில் வேறுபட்ட மொழிகளில் பேசியிருப்பார். இயேசு அரமாயிக் மொழி பேசியவர். ஆனால் அவருடைய பேச்சுக்கள் அனைத்தும் புதிய ஏற்பாட்டில் கிரேக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. இம்மொழியாக்கம் நிறைவானதா, இறைவன் மனித மொழியில் பேசுகையில் மொழியின் இலக்கண, இலக்கிய வரம்புக்குள் உட்பட்டவர். எம்மொழித்திறனும் இறைவனின் வல்லமையை, முழுமையை நிறைவாக வெளிப்படுத்த முடியாது. இறைவன் தன்னைப் பற்றி எமக்குச் சொல்லும் தொடர் உரையாடல்தான் விவிலியம் என்று எண்ணக்கூடாது.

தாம் இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களென்று கருதப்பட்ட ஒரு குறிக்கப்பட்ட சமூகத்தின் கதை. இறைவன் தன்னை இக்கதை மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். இக்கதையும் வரையறையுள்ளது. இக்கதையின் நிகழ்வுகள் அனைத்தும் பூகோள வரலாற்று சூழமைவுகளிற்குள் அகப்பட்டது. மேலும் இறைவன் தாம் பேசும் மக்களுடைய பண்பாட்டுச் சூழமைவின் எல்லைக்குள் நிர்ணயிக்கப்பட்டவராகக் காண்பிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டு வாசிப்பில் இறைவனுக்கு உரித்தாக்கப்பட்ட சில குண இயல்புகளாகிய சினம், பழிவாங்கல் என்பன காட்டப்படுகின்றன. வன்செயல்களில் நாம் திருப்தி காண்பதில்லை. இறைவன் பற்றி கிறிஸ்துவின் அன்பு, இரக்கம், மன்னிப்பு, இதனுடன் முரண்பட்டுள்ளது. மேலும் பழைய ஏற்பாடு யூத மக்களை மேன்மைப்படுத்தியுள்ளது. இறைவன் உலக மக்கள் அனைவருக்கும் பொதுத்தந்தையாக பெரும்பாலும் காண்பிக்கப்படுவதில்லை. ஒருசில இடங்களில் மட்டும் காண்கிறோம்.

புதிய ஏற்பாடு ஒன்றல்ல நான்கு நற்செய்தியைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நற்செய்தியும் எழுதப்பட்ட இடத்தின் வரலாற்று, சமூக முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. கிறிஸ்துவின் உவமைகள், திருஉரைகளில் வேறுபட்ட கருத்துக்கள் நாலு நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவினதும் அவருடைய பணியினதும் பார்வை வீச்சு ஒவ்வொரு நற்செய்தி எழுத்தாளரிலும் வேறுபட்டதாயிருந்தது.

இந்நாலு நற்செய்திகளை ஒன்றிணைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. எழுத்தாளர்கள் சமூகப் பண்பாட்டு நிலைமைகளுக்குத் தங்களை இசைவாக்கிக் கொண்டார்கள். "இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும், உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை, ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை, கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாக இருக்கிறீர்கள்" என்று பவுல் அடியார் கலாத்தியருக்குக் கூறுகிறார். (கலா. 3:28)

ஆனால் அவர் காலத்தில் நடைமுறையிலிருந்த அடிமை முறையுடன் அவர் முரண்படவில்லை. தானும் அதை இறுக்கமாகப் பின்பற்றவில்லை. அவர் பிலமோனுக்கு எழுதிய மடலில் ஒனேசிமுக்கை அடிமையென்று குறிப்பிடுகிறார் (பிலிப்பியர்). மேலும் பெண்கள் வழிபாட்டில் தலையை மூடிக்கொள்ளவேண்டும் என்றும் சபையில் பெண்கள் பேசாமல் அமைதியாய் இருக்கவேண்டும், அவர்களுக்கு பேச அனுமதியில்லை என்றும் அவர் கூறுகிறார் (1 கொரி 11:5, 14:34).

இறைவார்த்தை இன்று நம்மிடம் மனித மொழி நடையில் இருக்கிறதை நாம் மறக்கக்கூடாது. துருவப்படுத்தப்பட்ட தெய்வீகமும் மனிதத்துவமும் கலந்த சூழல் இது. மனிதனின் மொழிப்பயன்பாடு இறைவார்த்தையை வரையறை செய்கிறது, கட்டுப்படுத்துகிறது, நிர்ணயிக்கிறது. வேதாகம வாசிப்பில் மனித வார்த்தை மூலம் இறைவார்த்தைக்குப் போகிறோம். ஆனால் அதை அறிவதற்கு பகுப்பாய்வு செய்யும் இரு கண்களாகிய இறை நம்பிக்கையும் விவிலிய பொருள்கோள் முறையும் தேவை. ஏனெனில் விவிலிய விளக்குனர்கள் தமது சொந்த வரலாற்றுச் சூழல்கள், வரையறைக்குள் கட்டுப்பட்டவர்கள்.



அருட்பணி. ஜெயசேகரம்

மறை நூல்களில் பொதிந்திருக்கும் இறைவார்த்தை தெய்வீகமானது என்று கருதப்படுகிறது. இவை மனிதப் பாத்திரத்தில் எமக்கு வந்தடைகிறது. எனவே மறைகளில் அனைத்தையும் மறைநூல்கள் உட்பட குருட்டுத்-தனமான தெய்வீக மயமாக்குதல் தவிர்க்கப்படவேண்டும். தமது வேத நூல்களிற்கு மறைகள் பிரத்தியேக, உயர் மதிப்புக் கொடுக்கிறது.

இஸ்லாமியருடைய மறை நூல் குர் ஆன்: இது இறைத்தூதன் கபிரியல் என்பவர் முகமதுவிற்கு ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னது என்பர். இருப்பினும் இஸ்லாம் நாலு வேறுபட்ட விளக்கப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இந்துக்கள் தமது வேதநூலை நிலையானது, வரலாற்றை, மானிடத்தைக் கடந்ததென்றும் இவ்வார்த்தைகள் நிறைவாக்கப்பட்டது என்றும் கூறுகின்றனர். மறைகளையும் அதன் மறை நூல்களையும் அறிவுடைமைக்கொவ்வாத தெய்வீகப்படுத்தல் இட்டுச்செல்லும், மதப்பிளவுகளிற்கும் வழிகோலும்.

திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் அண்மையில் கூறிய வார்த்தைகள் நமது ஆழமான சிந்தனைக்குரியது. அவ்வார்த்தைகள் இதுதான், "அறிவுடைமையோடு செயல்படாமலிருப்பது இறைவனின் இயல்புக்கு எதிரானது".



### தாய்

தன் உயிரை உருக்கி கருவுக்குள் என்னை உருவாக்கி
உயிர் தந்து, உதிரமதை பாலாய் மாற்றி ஊட்டி
உலகினிலே நான் தவ
ஊமையாய் அவள் துடித்தால்
உன்மைக்கு ஒளி தந்து
உள்ளகத்திலே கோயில் செய்து
தெய்வங்களும் போற்ற வீற்றிருக்கும் உத்தமிதாய்.

ரி. எம். இவோன் கிறிஸ்டினா, குறிஞ்ஞாம்பிட்டி பங்கு, அம்மாதோட்டம், கற்பிட்டி.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 44

சொல்லின் செல்வர்
அமுது

## கட்டிலில் எழுதிய கவிதை

அன்னை திரேசாவின் அருமைச் சகோதரர் லாசர், 1981ல் மண்ணின் மடியில் இருந்து, விண்ணில் இறைவன் அடிக்குச் சென்றார். "சகோதரரை வந்து குடும்பத்தோடு சேர்ந்து கொள்ளுமாறு எங்கள் பெற்ற தாயார்தான் அழைத்திருக்கிறார். ஒரே மகனை எங்கள் தயார் உயிர்போல நேசித்து வந்தார். இப்போது எனது தம்பியார் தாயாருடன் இருக்கிறார். அவர் நல்ல மரணம் அடைந்து இறைவனின் வீட்டுக்குச் சென்று விட்டார்" என்றார் அன்னை.

இரண்டு வருடங்களின்பின் உரோமாபுரியில் தரித்திருந்த வேளையில் படுக்கையால் விழுந்து விபத்துக்கு உள்ளானபோது அன்னை திரேசா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பெற்றார். அவருக்கு எலும்புகளில் தாக்கமேற்பட்டிருக்கலாம் என எண்ணி ஊடுகதிர் (X - Ray) நிழற்படங்கள் எடுத்தனர். முறிவு நெரிவு அப்படி ஒன்றுமில்லை. ஆனால் இதயநோய் இருப்பதை அறிந்து கொண்டனர். விழாவிட்டால் இருதயநோய் இருப்பதை அறிந்திருக்க முடியாது. அவருக்கு நல்லறிவு இல்லாமையால் அவர் மரணத்தின் வாசற்படியில் இருப்பதாக உலகம் எண்ணியது. படிப்படியாக அன்னை சுகத்தின் சாளரங்கள் திறக்கப்படக் கண்டார். "இது உரோமாபுரியில் கோயில் கொண்டிருக்கும் பீற்றருடைய வேலை. 'அங்கேயே இருக்கட்டும்; இங்கே பேரின்ப வீட்டில் சேரிகள் இல்லையே' என்று தடுத்திருக்க வேண்டும்" என்று அன்னை அவர்கள் நகைச்சுவையோடு சொன்னார்.

தேறுதலை விரும்பி மடல்களும் கடிதங்களும் வந்து குவிந்தன. "ஒரு ஏழையில் மக்கள் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்கள் என்று எனக்கு இப்போதுதான் தெரிகிறது" என்று அவருக்கு வந்த செய்திகளை வாசித்தபோது கண்ணீர் வடியுமாறு குறிப்பிட்டார் திரேசா. யீமன் என்ற அராபிய நாட்டு அதிபர், இந்திய ஜனாதிபதி சிங், ஜனாதிபதி றேகன் என்போர் சொந்தக் கையொப்பமிட்டு நற்சுகத்தை எதிர்பார்க்கும் மடல்களை வரைந்திருந்தனர். சகோதரிகளின் மன்றாட்டுகளும், பிரார்த்தனைகளும் இறைவனுக்குத் தொலைபேசியில் சென்றன. துணைப்பணியாளரின் செப வேண்டுதல்கள் விண்ணை நோக்கித் தூபம் காட்டின.

அன்னையை அறியாதாரும் அவருக்காக வேண்டுதல் செய்தனர். "எனக்காக இறைவனிடம் எவ்வளவு வேண்டுதல்கள் குவிந்தன என்று எனக்கே தெரியாது" என்றார் அன்னை. கட்டிலில் எழும்போது ஓய்வெடுக்க வேண்டிய நேரத்தில் ஒரு கடதாசியும் பேனாவும் கேட்டு வாங்கிப் பின்வரும் கவிதையை எழுதினார்.

இயேசுவின் இன்னல் நிரம்பிய மாறுவேடம்
தொழுநோய் பிடித்துத் துயரப்படுகிறார்
கழுவி அவரது புண்ணைக் கட்டுவோம்.

வாசலில் ஏழையாய் வந்து கை நீட்டினார்
வீசிடும் புன்னகை விளக்கினைக் கொளுத்துவோம்.

வெறியினில் ஆடியே வேலியில் சாய்கிறார்
அறிவோடு கேட்டிடும் அவர் ஏதோ சொல்கிறார்.

மனநோய் கொண்டதால் வாயிலே புலம்பினார்
கனிவாய்க் காத்திடும் கண்மணி போலவே.

காதுகள் பிளந்திடக் குழந்தையாய்க் கதறினார்
வேதனை தீர்த்திட விரும்பியே அணைத்திடும்.

பார்வையை இழந்தவர் பாதையில் போகிறார்
ஆவலாய் பற்றிடக் கைத்தடி ஆகிடும்.

ஊமையாய்ச் செவிடராய் உலாவினார் பார்த்தீரோ
சேமமாய் வாழ்ந்திட அவருக்காய்ப் பேசுவோம்.

தாசியாய் நிற்கிறார் சந்தியில்
சிரிக்கிறார்.
மோசத்தில் காத்திடும் நேசத்தால்
நிரப்பிடும்.

தேடுவார் இன்றியே மறியலில்
கிடக்கிறார்
நாடியே சென்றிடும் நல்லுரை
சொல்லிடும்.

பொல்லோடு விழுகிறார்
கிழவனாய்ப் போனதால்
சொல்லரும் சேவைகள்
துன்பத்தில் செய்குவோம்.



ஏழுவாரங்களால் அன்னை அவர்கள் தனது வேலைகளைத் தொடர்ந்தார். போலந்து நாட்டின் உவாச்சோ பட்டினத்தில் ஒரு இல்லத்தை அமைத்தனர். பொதுவுடைமை வாதிகளின் இரும்புப் பிடியில் சிக்கித் தத்தளித்த கிழக்கு யேர்மேனியிலேயும் பணிமனை ஒன்றை அமைத்தனர். அன்னை திரேசா நோய்வாய்ப்பட்டு ஆறுமாத காலத்தால் அவரை இந்தியாவின் தலைநகருக்கு வந்து சேருமாறு அழைப்பு வந்தது.

பிரித்தானியாவின் மகாராணி எலிசபெத் அவர்கள் இந்திய நாட்டுக்கு அழைக்கப்பெற்றபோது பிரித்தானியாவில் வழங்கும் உயர்ந்த மகிமை விருதை அன்னை திரேசாவுக்கு அளிக்க விரும்பினார். 1984ஆம் ஆண்டில் அன்புப் பணியாளர் சபையில் 2400 சகோதரிகள் தொண்டு புரிந்தனர். 270 பணிமனைகள் உலகமேடையில் ஒளிசெய்து வந்தன. இவற்றுடன் 70 பணிமனைகளின் சகோதரர்கள் தொண்டு செய்தனர். அன்னை திரேசாவின் பாரிய பணிக்குடும்பத்தில் இன்னும் சில பகுதியினர் 1984இல் வந்து சேர்ந்துகொள்ளலாயினர். உலகனைத்தும் வாழும் வைத்திய சேவையைச் சேர்ந்த துணைத் தொண்டர்கள் அன்னை திரேசாவும் அன்புப் பணியாளர் சபையும் கொண்ட நோக்கங்களுக்காகத் தங்கள் சேவையைச் செய்ய விரும்பினார்கள். அவர்களுக்குத் துறவற நிலைமையைத் தெரிந்துகொள்ளத் தடைகள் இருந்தன.

ஆனால் எளிமையான வாழ்வு வாழவும், தூய்மையைப் பேணவும், சேவை புரியவும் அவர்கள் விரும்பினார்கள்.

பல்வேறு சமயச் சார்பானவர்களும், வேறுபட்ட பண்பாட்டில் வளர்ந்தவர்களும் ஒன்றுசேர்ந்து விடுபடத்தக்கதாய் வாழும் ஏழைகளிலும் ஏழைகளுக்குப் பணிபுரிய விரும்பி முன்வந்தனர். 1984இல் பாப்பரசரின் அழைப்புக்கு இணங்க உலகின் அனைத்து நாடுகளிலும் இருந்து ஒன்றுகூடிய இளைஞர் மாநாட்டில் அன்னை திரேசா உரையாற்றினார். அது உரோமாபுரி புனித பீற்றர் சதுக்கத்தில் நடைபெற்றது.

ஆறுமாத காலத்தில் அங்கே 6,500 குருமாருக்கு உரை நிகழ்த்தினார். உலகின் மூலைமுடுக்குகளிலுமிருந்தும் குருமார் அங்கே வந்திருந்தனர். பலமொழிகளில் அன்னையின் உரை மொழிபெயர்க்கப் பெற்றது. பெண்பாலார் ஒருவர் குருமாருக்கு உரைவழங்கியது வரலாற்றில் இடம்பெறத்தக்கது.

பாரம்பரியமாகத் திருச்சபை பெண்களுக்குச் சிறப்பான இடம் வழங்கியதில்லை. துணைத் தொண்டர் தலைவரான யோசப் லாங்வோட் என்ற அடிகளார், "பல குருமார் கண்கள் நீரால் நிரம்பின" என்று குறிப்பிட்டார். "இயேசுவைப்போல தூய்மையாய் இருங்கள்" என்பதே அன்னையாரின் உரைக்கு மகுடமாயிற்று. இதன் பயனாக அன்புப் பணிக் குருமார் சபை உதயமாயிற்று.

(கங்கை தொடர்ந்து பாயும்...)

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.52

கடந்த மாத மன்னாவின் இந்தப்பகுதியைப் புரட்டியிருந்தால் வினாக்கள் எவ்வளவு இலகுவாக இருந்தன என்பதைக் கண்டு கொண்டிருக்கலாம்.

இதை இலகுபடுத்தியமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு.
i. இப்போட்டியில் இப்போது பங்குகொள்ளும் தொகையினரைவிட அதிகமானோர் பங்குகொள்ள வேண்டும் என்று ஆசிக்கின்றோம். சிறப்பாக மாணவர்களின் பங்களிப்பைப் பெரிதும் விரும்புகின்றோம்.
ii. புதிய ஏற்பாட்டின் இந்தப் பகுதி *திருத்தூதர் பணிகள* பலரால் நினைத்துப் பார்க்காத பகுதிபோற் தோற்றமளிக்கின்றது. கிறிஸ்துவின் வாழ்வு - பாடுகள் - மரணம் - உயிர்ப்பு விண்ணேற்றத்தின் பின் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் அடி அத்திவாரமாக விளங்கும் வரலாற்றைக் கூறுவதும் தூய ஆவியின் சிறப்பான ஆளுகையை எடுத்தியம்புவதும் இப்பகுதியே. இது நமது வாழ்வுக்கும் அத்திவாரம் ஆகவேண்டும்.
வினாக்கள் திருத்தூதர்பணி 2ம், 3ம், 4ம் அதிகாரங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

1. பெந்தக்கோஸ்து என்பதன் பொருள் என்ன?
2. இது கொண்டாடப்படும் நோக்கம் என்ன?
3. இதை ஒத்திருக்கும் இந்நாளில் நாம் கொண்டாடும் தமிழர் திருநாள் எது?
4. தூய ஆவியைப் பெற்றுக்கொண்டபின் பேதுரு எந்த இறைவாக்கினரின் வார்த்தைகளை மேற்கோள்காட்டி தனது முதல் அருளுரையை ஆரம்பித்துப் பேசினார்?
5. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து தாவீது கூறியது என்ன?
6. பேதுருவும், யோவானும் கால் ஊனமுற்றவரை தேவாலயத்தின் எவ்விடத்தில் வைத்துக் குணமாக்கினர்?
7. தூய ஆவியைப் பெற்றுக்கொண்டபின் பேதுருவின் இரண்டாவது அருளுரை எங்கே நிகழ்த்தப்பட்டது?
8. கட்டுகிறவர்களாகிய உங்களால் இகழ்ந்து தள்ளப்பட்ட கல்..... மேற்படி வாக்கியத்தை நிறைவு செய்க?
9. பர்ணபா என்னும் பெயரின் பொருள் என்ன?
10. சீடர்கள் இரண்டாவது முறையாகவும் தூய ஆவியால் அருட்பொழிவு பெற்றனர். எப்போது?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 50 இற்கான கேள்விகளுக்கு 28 பேர் விடை அளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**செ. வளன் நியூமன் துரம்,**
**மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்**
## 10 அதிஸ்ரசாலிகள்

1. சிறகுடைந்த இளம்சிட்டு, தோட்டவெளி, மன்னார்.
2. செ. இன்வென்ரா டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
3. அ. தர்சினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.
4. ஜே. ஜக்சன் குரூஸ், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
5. பி. லூட்ஸ் அஞ்சலிக்கா, எமில்நகர், மன்னார்.
6. சி. அல்பன் ராஜ், மன்னார்.
7. யூ. சுறேக்கா டயஸ், கற்குழி, வவுனியா.
8. பி. சியானு, தோட்டவெளி, மன்னார்
9. பி. நெகோமி, வங்காலை, மீள் குடியேற்றத் திட்டம்.
10. வி. நிதர்ஷன் குரூஸ், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.

# கெடுக்கப் போவது யாரு?

இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றிய ஒரு பார்வை

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அழுது வடியும் தொடர்களைத் (சீரியல்களைத்) திகட்டத் திகட்ட வழங்கிய தொலைக்காட்சி அலைவரிசைகள் இப்போது நகைச்சுவையை மையமாகக் கொண்ட 'கலக்கப் போவது யாரு' (விஜய் டீ.வி) மற்றும் 'அசத்தப் போவது யாரு' (சன் டீ.வி) ஆகிய இரு நிகழ்ச்சிகளையும் வழங்கி வருகின்றன.

நல்ல நகைச்சுவை என்பது ஒரு மனிதனை வாய்விட்டுச் சிரிக்க வைப்பதோடு, மனம் விட்டுச் சிந்திக்க வைக்கவும் வேண்டும். ஒரு நகைச்சுவை நிகழ்ச்சி எப்படி அமைய வேண்டும் என்பதற்கு ஆங்கில எழுத்தாளர்களான ஜி.கே. செஸ்டர்டனையும், ஜெரம் கே. ஜெரம் (ஒரு படகில் மூன்றாம் மனிதர்கள்) போன்றவர்களையும், தமிழக எழுத்தாளர்கள் கல்கி, தேவன் போன்றவர்களின் படைப்புக்களையும் உதாரணமாகக் காட்டலாம்.

ஆழமான சிந்தனையைத் தூண்டவைத்து சமுதாயத்தின் அவலங்களைச் சுட்டிக்காட்டி, யார் மனதையும் புண்படுத்தாமல் நகைச்சுவையை வெளிப்படுத்தும் போக்குத்தான் மிகச் சிறந்த நகைச்சுவைக்கு எடுத்துகாட்டு. ஆனால், மேற்படி கலக்கல், அசத்தல் நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனிப்போருக்கு அவற்றில் விஞ்சி நிற்பது நகைச்சுவையோ, சிந்தனையோ அல்ல, வெறும் விரசமே என்பது கண்கூடு.

இந்த இரண்டு சனல்களும் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்வதையும், ஒரு சனலில் வரும் தொடரையும், அதன் கதாபாத்திரங்களையும் கேவலமாக (ஆனால் மறைமுகமாக) கிண்டல் அடிப்பதையே தங்கள் வாடிக்கையாகவும் கொண்டுள்ளன. பணம் சம்பாதிப்பதும், அனுசரணையாளர்களை (ஸ்பொன்சர்களை) வளைத்துப் போடுவதும், தொலைக்காட்சி பார்ப்போர் பட்டியலில் தாங்கள் முதலிடத்தைத் தக்கவைக்க வேண்டும் என்பது மட்டுமே இந்த அலைவரிசைகளின் (சனல்களின்) குறிக்கோள். இந்த ஆசை வெறியாக மாறி அளவுகடந்து போவது மிகவும் கவலை அளிக்கிறது.

திரைப்படங்களிலே நகைச்சுவை என்ற பெயரில் வைகைப் புயலும், கஞ்சா கருப்பு என்ற பெயர் கொண்ட நபரும் அடிக்கும் கொட்டம் நம் மக்களுக்கு குமட்டிக்கொண்டு வருகிறது. மதுரை சுற்றுவட்டாரத்தில் வழங்கும் கொச்சையான வார்த்தைகளைச் சற்று மாற்றி அவற்றைத் தமிழகம் முழுக்கப் பரவச் செய்து புண்ணியம் கட்டிக்கொண்டவர் வடிவேலு. அடுத்த நபர் பெயரைப் பாருங்கள். ஒரு படத்தில் கஞ்சா விற்பவராக வந்ததால் அவர் தனக்கு வைத்துக் கொண்ட பெயர் கஞ்சா கருப்பு. இப்படியே போனால் பெத்தடின் பெரியசாமி, அபின் அண்ணாசாமி, மொள்ளமாரி மும்தாஜ் , சாராய சற்குணம் என்றெல்லாம் நடிகர், நடிகைகளுக்குப் பெயர் சூட்டுவார்கள் போலும்.

பெரிய திரையைப் பிடித்த இந்த விசர்க் காமெடி இப்போது சின்னத் திரையையும் பிடித்து ஆட்டுவது மிகவும் வருத்தத்திற்கும், கண்டனத்திற்கும் உரியதாகிறது.

மேற்படி அசத்தல், கலக்கல் ஆகிய இரு நகைச்சுவைகளின் தொகுப்பும், நடிகர், நடிகைகளை மிமிக்ரி செய்து பேசுவது, நாட்டு நடப்பு நிகழ்ச்சிகளை நடிகர் நடிகைகள் குரலிலே மிகைப்படுத்திக் கிண்டல் செய்வது, மற்றும் நடனம், பொம்மலாட்டம் போன்ற கலைத்தொடர்புள்ள விடயங்கள் கலந்த அவியலாகத்தான் உள்ளன. ஆனால், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இலை மறைவு காய் மறைவாக விரசம், பெண்மையை இழிவுபடுத்துதல், அருவருப்பான சொல்லாடல், மற்றும் நகைச்சுவை என்ற பெயரில் சில பெரிய மனிதர்களையும், நடிகைகளையும் கீழ்த்தரமாக விமர்சிப்பது ஆகிய விசமத்தனங்கள் கலக்கப்பட்ட - வாய் விட்டுச் சிரிக்கும் ஒரு நிகழ்ச்சியை நெருடலான ஒன்றாக, சில சந்தர்ப்பங்களில் பெரியவர்களே அருவருப்பாக நெளியும்படியான ஒன்றாகவும் மாற்றி விடுகிறது.



இதில் பெரிய கொடுமை என்னவென்றால் நான்கு பெண்களையும் இந்த நிகழ்ச்சியில் ஈடுபடுத்தி அவர்களையும் இவர்களின் டப்பாங்கூத்து இசைக்கு நடனமாட வைப்பதுதான்.

இதில் இன்னொரு பெரிய வேடிக்கை உண்டு. ஒவ்வொரு காமெடி நடிகரையும் அறிமுகப்படுத்தும்போது 'சரோஜா சமான் நிகாலோ' என்ற ஒரு ஆண் குரல் கேட்கும். இந்த வாசகத்து 'சரோஜா வீட்டு சாமான்களை எடுத்து வெளியே கொண்டு வா' என்று இந்தியில் பொருள். இதற்கும் நடிகர் அறிமுகத்துக்கும் என்ன சம்மந்தம் என்பது புரியாத புதிர்.

தமிழக மக்களையெல்லாம் முட்டாள்கள் ஆக்குவது மேற்படிச் செயல். இதே சீரியல் இந்தியில் வரும்போது ஒருவேளை 'சரோஜா காலையில் பல் விளக்கு' என்று தமிழில் சொன்னால் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட கூத்துக்கள். நடந்தால் தமிழ்மொழி தானே வளர்ந்துவிடும்!

அசத்தல், கலக்கல் ஆகிய இரு நிகழ்ச்சிகளுமே போட்டி போட்டுக் கொண்டு தமிழையும், தமிழர்களையும், தமிழ் பண்பாட்டையும் கெடுக்கப் போவது யாரு என்று அலைவது கண்கூடு. ●

*(நன்றி - நம்வாழ்வு)*

குடும்பக் குவலயம்





# உறுப்பினர்களின் பொறுப்புணர்வில்தான் குடும்பம் நிலைக்கிறது

குடும்பம் என்பது கணவன், மனைவி, தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோர் அன்புறவில் கூடிவாழும் அமைப்பாகும். இங்கு அன்பு, பரிவு, பாதுகாப்புணர்வு, ஒன்றுபட்டு வாழ்வது, சகிப்புத்தன்மை ஆகியவற்றைக் காணலாம்.

பாலியல் உறவு திருமண முறையால் நிறுவனமாகின்றது. இந்தக் குடும்பம் குழந்தைப் பேற்றுக்கும் வளர்ப்பிற்கும் இன்றியமையாதது. குடும்பத்தில் உறவுகள் நிரந்தரமாகின்றன.

குடும்பத்தை நாம் பல கோணங்களிலிருந்து வர்ணித்தாலும் ஒரு குடும்பம் அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழும்போது அங்கு பல பொறுப்புக்கள் உருவாகின்றது. இந்தப் பொறுப்புக்களை கணவன், மனைவி, தாய், தந்தை, பிள்ளைகள் தங்களின் நிலையைப் பொறுத்து ஏற்றுக்கொண்டு செயல்படுகின்றனர்.

இப்படிப் பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படும்போது ஒரு குடும்பத்தில் சமநிலை பேணப்படுகின்றது. குடும்பத்தில் அமைதி, சந்தோசம் நிலவுகின்றது. குடும்ப அங்கத்தவர் உடல், உள, வளர்ச்சியும், நிறைவும் அடைகின்றனர். குடும்பத்தில் பொறுப்புக்கள் ஏற்கப்படாதிருக்கும்போது அல்லது நிராகரிக்கப்படும்போது அங்கு குடும்பச் சமநிலை இழந்து அமைதியின்மையும், கோபங்களும் வன்முறைகளும் அதிகரிக்கின்றன.

## கணவன் - மனைவியின் பொறுப்புணர்வு

குடும்ப வாழ்வில் புகும்போது ஒரு ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாகின்றனர். அன்பின் அடிப்படையில் ஒன்று சேரும் இவர்கள், குடும்பப் பொறுப்பை ஏற்கின்றனர். இருவரும் பொறுப்புக்களைப் பகிர்ந்து வாழ்கின்றனர்.

இந்தப் பொறுப்புக்களை கணவன் - மனைவி நிறைவேற்றுகின்றபோது அங்கு அவர்கள் தாம் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கின்றனர். ஒருவரின் உடல், உள, உணர்வுத் தேவைகளை மதித்து அவற்றை ஏற்று நிறைவேற்றுகின்றனர். இதுவுமல்லாமல் பொருளாதாரத்தை விருத்தி செய்து ஒருவரொருவரின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும்போது அங்கு பொருளாதாரப் பாதுகாப்பைப் பெறுகின்றனர். பாதுகாப்பு என்பது கணவன், மனைவியிடத்திலிருக்கும் ஒரு அடிப்படை உணர்வு. இருவரும் பொறுப்புடன் செயல்படும்போது இந்த உணர்வு தோன்றுகின்றது. எதிராகச் செயற்படுகின்றபோது இந்தப் பாதுகாப்பு என்ற உணர்வு அற்று அங்கு பயம், பதட்டம், நித்திரையின்மை, இதயப் படபடப்பு போன்றவைகள் வந்து சேருகின்றன.

கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவருக்காக வாழும்போது அங்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இந்த மகிழ்ச்சி நிலைக்க ஒருவர் மற்றவருக்கு தன் கடமைகளைப் பொறுப்புடன் ஆற்ற முன்வர வேண்டும். இங்கு வெளியாரின் செல்வாக்குக்கோ அல்லது குறுக்கீடுகளுக்கோ இடமளிக்கக்கூடாது. வெளியாரின் தலையீடு கடமைகளைச் செய்ய தடையாக இருக்குமென்றால் கணவன் - மனைவி உறவை அது பாதிக்கும். உறவில் விரிசல் ஏற்படும். இப்படியான ஒரு சூழலில் கணவன் - மனைவியின் ஆளுமை வளர்ச்சி குன்றும். ஒருவரொருவரில் குறைகள் கண்டு, இழிவுபடுத்தும் செயற்பாடுகள் ஏற்படும். முடிவில் இவர்கள் குடும்பத்தில் சமநிலை இழந்து, அமைதியிழந்து தவிப்பர்.

கணவன் - மனைவி தன் பொறுப்புக்களை உணர்ந்து, தெரிந்து செயற்படுவது மிகவும் முக்கியமாகின்றது என்பது இதனால் புலனாகின்றது. குடும்ப வாழ்வு என்பது எப்போதும் மற்றவர் நலம் நாடி, அவரின் மட்டில் தனது கடமைகளை நிறைவேற்றி வாழப்பட வேண்டிய வாழ்வாகும். இப்படியாக இருந்தால் அவர்கள் உறவு வளரும், நிலைக்கும்.

அடுத்து பெற்றோரின் வார்த்தைகள் தங்கள் அன்புறவில் வாழும் குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமானவை. அவர்களின் உருவாக்கத்திற்கு மிகவும் இன்றியமையாதவை. கார்ல் றொஜர்ஸ் (Carl Rogers) கூறுவது போன்று ஒரு மரம் சூரியனை நோக்கி வளர்கின்றது. அப்படி வளர்க்கின்றபோது அது நிறைவை நோக்கித்தான் வாழ்கின்றது. அதைப்போல பிள்ளைகளும் பெற்றோர் என்ற சூரியனை நோக்கித்தான் வளர்கின்றார்கள். இதற்குப் பெற்றோர்கள் வழிவகுக்க வேண்டும். தமது செயற்பாட்டினால், முன்மாதிரிகை காட்ட வேண்டிய பொறுப்பு பெற்றோரினுடையதே.

## கலாச்சாரத்தை பிள்ளைகளுக்கு வழங்குதல்


சமூகக் கலாச்சாரங்களும், பழக்கவழக்கங்களும் சட்டதிட்டங்களும் குடும்பத்தை கட்டுப்படுத்துகின்றன. சமூகத்தில் குடும்பம் ஒரு சக்திமிக்க நிறுவனம். திருமணம் சமூகத்திற்கு முக்கியம். இதை எளிதில் உடைத்துவிட முடியாது. எனவே இங்கு இத்தகைய கலாச்சாரத்தை சமுதாய, குடும்ப மதிப்பீடுகளை, கணவன் - மனைவி, பெற்றோர் தாமும் வாழ்வதோடு அதைச் சிறப்பாக பிள்ளைகளுக்கும் கொடுக்கும் கடமைப்பாடு உடையவர்கள்.

ஒரு குடும்பத்தில் பெற்றோர்கள் தாம் வாழ்ந்து, குழந்தைகளுக்கும் வாழக்கற்றுக்கொடுக்க வேண்டும். அன்பு, பாசத்தின் அடிப்படையில்தான் குடும்ப வாழ்வு கட்டியெழுப்பப்படுகின்றது. இங்கு நெருங்கிய அன்புறவு இல்லாமை பல ஆளுமை, உணர்ச்சி சார்ந்த குறைபாடுகளுக்கும் நோய்களுக்கும் காரணமாகின்றது.

மதம் சார்ந்த மதிப்பீடுகளைத் தாமும் வாழ்ந்து பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுத்தல் மன அமைதிக்கு வழிவகுக்கும். சமூகப்பழக்கங்களை கற்றுக்கொடுத்தல் சமூகத்தில் கட்டுப்பாட்டுடன் வாழவும், பிறரை மதிக்கவும் முக்கிய வழியாகின்றது. அன்பு, ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை, தியாகம், கீழ்படிதல் என்பன சமூக உறவுக்கான குணங்கள். இவைகளையும் கற்றுக்கொடுத்தல் முக்கியமாகின்றது. இது மட்டுமல்ல குழந்தைகளுக்குச் சிறந்த கல்வியைக் கொடுக்கும் பொறுப்பும் பெற்றோரினுடையதே. குழந்தைகளும் அதைப் பெற உரிமையுடைத்தோராக இருக்கின்றனர். அவைகள் எல்லாவற்றையும் உணர்ந்து பொறுப்புணர்வுள்ள குடும்பமாக வாழும்போது, குடும்ப வாழ்வு நிலைக்கின்றது.

## பிள்ளைகளின் ஆளுமையை வளர்ப்பதற்கான சில சூட்சமங்கள்

- ➢ சிறு பிள்ளைகள் தவறிழைக்கும்போது எந்நேரமும் பழிப்பதைத் தவிருங்கள்.
- ➢ சிறுவர்களுக்கு தொடர்ச்சியாக இம்சை கொடுப்பதைத் தவிருங்கள்.
- ➢ அடிக்கடி கசப்பான அல்லது மனதை உறுத்தும் வார்த்தைகளை உபயோகிப்பதைத் தவிருங்கள்.
- ➢ ஒரு பிள்ளையைப் புறக்கணித்து மற்றொரு பிள்ளைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பழக்கத்தைத் தவிருங்கள்.
- ➢ பிள்ளையை தனிமைப்படுத்தி ஒதுக்கி வைப்பதோ, மனமுடையச் செய்யவோ வேண்டாம்.
- ➢ பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து நீண்ட காலம் பிரிந்து இருப்பதைத் தவிருங்கள்.
- ➢ உங்கள் பிள்ளையை எப்பொழுதுமே புகழ்ந்து கொண்டிருப்பதைத் தவிருங்கள்.
- ➢ பெற்றோர்கள் மத்தியில் தொடர்ந்து நடக்கும் முரண்பாடுகளை பிள்ளைகளுக்கு முன்னே வெளிப்படுத்துவதைத் தவிருங்கள்.
- ➢ பிள்ளைகளுக்கு எப்பொழுதும் உற்சாகமளியுங்கள்.
- ➢ தண்டனைகளை அதிகமாகவோ, அடிக்கடியோ கொடுப்பதைத் தவிருங்கள். அதிகமான ஒழுக்க நெறிகள் பிள்ளைகளைப் பாதிக்கக்கூடும்.
- ➢ பிள்ளை தான் செய்த தவறை உணர்ந்து திருந்துவதற்கு வாய்ப்பளியுங்கள். தண்டனை என்பது மிகக் கடைசி முயற்சியாக இருக்கட்டும்.
- ➢ பெற்றோர் பிள்ளைகளின்மேல் அதிக எதிர்பார்ப்புக்கள் வைக்கக்கூடாது. வகுக்கும் இலட்சியங்கள் இறைவனால் அளிக்கப்பட்ட அறிவுக்குட்பட்டு அவர்களின் திறன்கள், சாதனைகள், விருப்பு, வெறுப்புக்கள் உட்பட யதார்த்த நிலைக்கு அமைய இருக்கட்டும். இல்லையெனின் அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு இது பாதகமாக இருக்கக்கூடும்.



# மருத்துவப் பொழிவு



## உடல் நலத்தில் மூலிகையின் பங்கு

**துளசி இலை :-** இது குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, முட்டு போன்றவற்றை நீக்குவதுடன் சந்திவாதம், வயிற்றுப்போக்குடன் இரத்தம் போதல், காது வலி, தலைச்சுற்று என்பவற்றிற்கு நல்ல ஔடதமாக அமைகிறது. கர்ப்பிணிப் பெண்களின் பிரசவவலி குறையவும், காய்ச்சலின்போது தாகத்தைத் தணித்து வாந்தியை நிறுத்தவும், சல வாசல் வலி, மார்பு வலி மற்றும் இருமல் குறையவும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் அம்மை நோய் அதிகரிக்காது தடைசெய்து குஷ்டநோயையும் குணமாக்குகின்றது.

**அகத்தி இலை :-** சாதாரணமாக வாய்ப்புண்களுக்கும் மூளை சம்மந்தமான நோய்களுக்கும், மயக்கம், கண் எரிவு, மார்புவலி போன்றவற்றை நீக்குவதற்கும் உடல் வெப்பத்தைத் தணித்து நீரடைப்புத் தீரவும் பயன்படுத்தப்படுவதுண்டு. அத்துடன் மூச்சு வாங்கும்போது ஏற்படும் இழுப்பைக் குறைக்கின்றது. பித்தத்தைப் போக்கி மாலைக்கண் நோயிலிருந்தும் குணமளிக்கின்றது.

**கறிவேப்பிலை :-** தலைமுடியானது உதிராமல் நீண்டு வளரவும், நல்ல கருமை நிறத்தைப் பெறவும், மற்றும் வயிற்றுளைவு, பித்தம், அஜீரணம் போன்றவற்றை நீக்கி இரைப்பைக்கு வலுவைக் கொடுக்கவும் அம்மை நோயினால் உண்டாகும் வடுக்களை மாற்றுவதற்கும் உதவுகின்றது.

**வல்லாரை :-** அடிக்கடி ஏற்படும் சாதாரண வயிற்று வலியை நீக்கி மலச்சிக்கலை தவிர்ப்பதற்கும் மற்றும் மாலைக்கண், நீரிழிவு போன்ற நோய்களை நீக்கி இருமல், மூச்சு வாங்கல் போன்றவை குறையவும் வழி வகுக்கின்றது.

**வெற்றிலை :-** சாதாரணமாகக் குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல், நெஞ்சுத் தடிமல் என்பவற்றைக் குணமாக்கி கர்ப்பிணிகளின் வயிற்று வலி, தலை வலி போன்றவற்றை நீக்குவதுடன் காதில் துர்நீர் வடிவதை நிறுத்தி வயிற்றில் உப்பிசத்தையும் குணமாக்குகின்றது.

**நொச்சி இலை :-** கை, கால்களில் ஏற்படும் ஓயாத உளைவை நீக்கி, நீர்பீனிசம், மண்டைக்குத்து, மற்றும் வாத சம்மந்தமான இடுப்பு, முழங்கால் வலியைக் குறைத்து திரிதோசம், நீரேற்றம், பாரிசவாதம், தந்தவலி போன்ற நோய்களைக் குணப்படுத்துகின்றது.

**கறிமுருங்கை இலை :-** நீரிழிவு நோயிலிருந்து சுகம் பெறவும், சிரங்கு, கிரந்திப்புண் போன்றவற்றை நீக்கியும், கை, கால் வீக்கம், முதுகு வலி என்பவற்றிலிருந்து சுகமளித்தும் உடலில் உள்ள நீரைக் கட்டுப்படுத்துகின்றது.

**கொய்யா இலை :-** சிறுவர்கள், குழந்தைகளுக்கு வயிற்றில் காணப்படும் பூச்சிக் கிருமிகளை நீக்கி கொலரா எனும் வாந்தி பேதிநோய், பல்லரிப்பு, பற்சொத்தை, பற்சிதைவு போன்றவற்றை நீக்கி, தேய்வை மாற்றிப் பல்லுக்கு வெண்ணிறத்தைக் கொடுக்கின்றது. மற்றும் மூல நோயாளியின் மூலம் சுருங்க வைக்கின்றது. அஜீரணக் கோளாறு போன்றவற்றையும் குணப்படுத்துகின்றது.

**கற்பூரவள்ளி :-** அநேகமாக சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, முட்டு போன்றவற்றைக் குணமாக்கி செங்கிரந்தி, தலைவலி மற்றும் பற்தொந்தரவையும் நீக்குகின்றது.

**வேப்பமிலை :-** பெண்கள் பருவமெய்திய காலங்களில் உண்டாகும் வயிற்றுப் புண்களைத் தணிக்கின்றது. வயிற்றுக் கிருமிகளை அகற்ற உதவுகின்றது. நுண்ணிய விஷக்கிருமிகளை நீக்கி அம்மைக் காய்ச்சலைத் தணிக்கின்றது. உடலில் உஷ்ணத்தைத் தரும் கொப்பளங்களை ஆற்றுகின்றது. பித்தவெடிப்பு, நகச்சுற்று, சேற்றுப்புண், காமாளை என்பவற்றை நீக்கி குணமாக்குகின்றது.

**குப்பை மேனி இலை :-** வயிற்று வலி, அஜீரணம், வாயுக்கோளாறு, நாக்குப் பூச்சி, நாசி போன்றவற்றை உடலில் இருந்து அகற்றவும், மலப்பூச்சி வெளியேறவும், மூலநோய் குணமடையவும், பூரான், தேள் விஷம் இறங்கவும் மற்றும் கால் புண் சிரங்குக் கடி போன்றவற்றில் இருந்தும் சுகமளிக்கின்றது.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
செல்வி. வெ. சசிகலா
மறைக்கல்வி நிலையம், மன்னார்.

## இறால் வடை



### தேவையான பொருட்கள்

கடலைப் பருப்பு – 250 கிராம்
சிறிதாக வெட்டிய வெங்காயம் – 3 மே.கரண்டி
சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் – 2 மே.கரண்டி
வெட்டிய கறிவேப்பிலை – ஒரு தே.கரண்டி
இறால் 10 அல்லது 15
உப்பு – அளவிற்கு

### செய்முறை :


செய்முறை கடலைப் பருப்பை துப்பரவாக்கிக் கழுவி ஆறுமணி நேரம் ஊறவிட்டு, வடித்தெடுத்து, நீர் சேர்க்காமல் அரைக்கவும். கடலைப்பருப்பு அரைப்பதமாக அரைபட்டவுடன் முழுவதிலும் அரைவாசி அரைத்த கலவையை எடுத்து பிறிதொரு பாத்திரத்தில் வைத்துவிட்டு மிகுதியை பசுந்தையாக அரைத்தெடுத்து, முதலில் எடுத்து வைத்த கடலைப்பருப்பினில் இட்டுக் கலந்துகொள்ளவும்.

பின்பு அரைத்த கடலைப் பருப்பினில் வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, இஞ்சி அளவிற்கு உப்பு என்பவற்றைப் போட்டு நன்கு சேர்த்து அளவான உருண்டைகளாக பிடித்துக்கொள்ளவும்.

பின்பு இறாலின் தலைப்பகுதி கோதையும், வால்பகுதி கோதையும் கழற்றி எடுத்த பின் (நடுக்கோது இருக்கவேண்டும்.) இறாலை நன்கு கழுவியெடுத்து உப்பு தூள் பிரட்டி வைத்துக்கொள்க. பின்னர் பிடித்து வைத்த உருண்டைகளை எடுத்து இறாலை அதன்மேல் வைத்து ஓரளவு இறால் புதையும் வரை அமர்த்திக்கொண்ட பின்பு கொதிக்கும் எண்ணெயில் பொன்னிறமாக பொரித்தெடுத்து பரிமாறலாம்.

# பெரியப்பா பதில்கள்





**கேள்வி : இன்றைய மனிதர் புன்னகைக்க மறந்து, 'உம்' என்று இருக்கிறார்களே?** - *சத்திய சீலன், வவுனியா*

பதில் : "புன்னகை என்ன விலை?" என்று கேட்கின்ற காலத்தில் நாம் இருக்கின்றோம். ஒரு புன்னகை என்னவெல்லாம் செய்யும்? கோபத்துடன் நம்மை நோக்கி நகரும் எதிரொளிக்கு வேகத் தடையை ஏற்படுத்தும். எதிர்வீட்டில் 'உம்' என்று இருக்கும் பெண்ணின் உதட்டில் பதில் புன்னகையை வரவழைக்கும், கழுத்தில் கத்தி வைத்து கடனைத் திருப்பிக் கேட்கும் தீர்மானத்துடன் வரும் கடன்காரனை நிலை குலைய வைக்கும்!

**கேள்வி : பெரியப்பா, தீவிரவாதிகள் உருவாகிறார்களா? உருவாக்கப்படுகின்றார்களா?**

- *அருள்வதனி, செட்டிகுளம்*

பதில்: இலக்கணச் சுத்தமாகச் சொன்னால், இது செயற்பாட்டுவினை, செய்வினை அல்ல.

**கேள்வி : இன்றைய காலத்திற்கு ஏற்ப புதுக் குறல் ஒன்று சொல்லுங்கள். பெரியப்பா?**

- *அமுதன், பம்பைமடு*

பதில்: செல்போன் இழந்தவன் கைபோல
ஆங்கு இடுக்கண் களைவதாம் நட்பு!

**கேள்வி : நண்பர்களைப் புரிந்துகொள்வதே கஸ்ரமாக இருக்கிறதா?** - *விஜயதாசன், தலைமன்னார்-*

பதில் : நீங்கள் செழுமையில் இருக்கும்போது நண்பர்கள் உங்களை அறிவார்கள். நீங்கள் வறுமையில் இருக்கும்போது நண்பர்களை நீங்கள் அறிவீர்கள்.

**கேள்வி : மனிதனின் கடைசி ஆசை என்ன?**

- *பாலகுமாரன், வவுனியா*

பதில் : இன்னும் கொஞ்ச நாள் உயிர்வாழ வேண்டுமென்பது.

**கேள்வி : பெரியப்பா தலையைப் பிய்த்துக்கொண்ட அனுபவம் உண்டா?** - *மரிய வளன், முருங்கன் -*

பதில்: அந்த அனுபவங்களின் திரட்சிதான் எனது தலையின் வெளியே தெரியும் வெற்றிடம்.

**கேள்வி : பெரியப்பா, "வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்" என்ற பழமொழிக்கு மருத்துவ ரீதியான விளக்கம் உண்டா?**

- *செந்தில்வேல், பேசாலை -*



பதில் : ஏன் இல்லை? சிரிப்பு பற்றி ஆராயும் மருத்துவ அறிஞர்கள் தமது ஆய்வின் மூலம் கண்டறிந்த உண்மைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர்.

சிரிப்பு நம்முடைய இரத்தத்தைச் சுத்தப்படுத்துகின்றது. தசைகள் வலுவடைகின்றன. இரத்த அழுத்த அளவு குறைகிறது. நுரையீரல் நன்கு செயல்படுகின்றது. சிரிப்பதனால் இரத்தக் குழாய்கள் விரிவடைந்து இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. மன இறுக்கம் தளர்கிறது. சிந்தனைக்கும், உணர்ச்சிகளுக்கும் தலைமைப்பீடமாகச் செயல்படும் - நமது மூளையின் வலப்பக்கப் பகுதி சிரிப்பினால் நன்கு செயல்படுகிறது. சிரிப்பு – அல்சர் போன்ற இரைப்பைப் புண்கள் வராமலேயே தடுக்கிறது.

எனவே, நோய்விட்டுப் போக மனம்விட்டுச் சிரியுங்கள். 'சிரிக்கத் தெரிந்த சமுதாய விலங்கு மனிதன்' என நம்மை மற்ற இனங்களிலிருந்து வேறுபடுத்தி அறிவியலாளர் கூறுவதில் எவ்வளவு உண்மை இருக்கிறது!

**கேள்வி : புத்தகம் வாசிக்கும் பழக்கம் நம் மத்தியில் அருகி வருகிறதே?** - *மோகனா, ஆட்காட்டிவெளி -*

பதில் : நமது உண்மையான நண்பர்கள் யார் தெரியுமா? புத்தகங்கள்தான். இந்த உண்மையை காலங்கடந்துதான் பலர் உணர்கின்றனர். "ஒரு மனிதனுக்கு ஒழுக்கத்தையும் தன்னம்பிக்கையையும் புதுப்பிக்கும் புத்தகங்களைத் தினமும் படிக்கச் சொன்னால் போதும். அவன் இயல்பாக உடற்பயிற்சியிலும் நல்ல மனிதனாக உருவாவதிலும் அக்கறை-யாக இருப்பான்" என்றார் பண்டிதர் ஜெவகர்லால் நேரு.

**கேள்வி : உலக மொழிகளில் தமிழின் முக்கியத்துவம், - சிறப்பு என்ன?** - *தமிழோவியன், வவுனியா.*

பதில் : உலகில் தோன்றிய மொத்த மொழிகள் 6000. இதில் தற்சமயம் 2780 மொழிகள் மட்டுமே வழக்கில் உள்ளன. மற்றயவை மறைந்துவிட்டன. இந்திய நாட்டில் 179 பெரு மொழிகளும் 544 கிளை மொழிகளும் உள்ளன. இவற்றில் இலக்கிய வளம் மிக்க மொழிகள் 16. இவற்றில் எல்லாம் தன்மையிலும் தொன்மையிலும் சிறப்புற்று விளங்கும் ஒரே மொழி தமிழ் மொழிதான்.

**கேள்வி : சிலருடைய வாய்ப் பேச்சு அவர்கள் எப்படிப்-பட்டவர்கள் என்பதைக் காட்டிவிடுகிறது. என்ன நினைக்-கிறீர்கள் பெரியப்பா?** - *முகிலன், அடம்பன் .*

பதில் : நெல்லின் வளர்ச்சி நிலத்தின் செழித்த தன்மையைக் காட்டுவதுபோல், பேசும் சொல்லின் வளர்ச்சி உள்ளத்தின் நல்ல தன்மையைக் காட்டுகிறது!

---

# நெருக்கீடு – Stress

## - ஓர் கண்ணோட்டம் -

ஆசிரியர் M.M. நிக்சன், மன் / அடம்பன் ம.ம.வி.

ஒவ்வொரு மனிதனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஏதோ ஒரு வகையில் நெருக்கீட்டிற்கு உள்ளாகி வருகின்றான். ஒரு நாளில் ஏற்படும் பல்வேறு நிகழ்வுகள் சம்பவங்கள், ஒருவரின் வாழ்வில் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இந்த வகையில் நெருக்கீடு என்றால் என்ன என்பது பற்றி நோக்குவோம்.

ஒரு புதிய சூழல் அல்லது பிரச்சினைக்கு முகம் கொடுக்கும்போது ஒருவரின் உடலிலும், உள்ளத்திலும், நடத்தையிலும் ஏற்படுகின்ற மாற்றம் அல்லது எதிர்வினை நெருக்கீடு ஆகும். புதிய சூழல் எனும்போது தந்தை, தாய், சகோதரர் என்ற குடும்ப வட்டத்தில் இருந்து ஒரு பிள்ளை புதிதாகப் பாடசாலைக்கோ, அன்றேல் முன்பள்ளிக்கோ செல்கையில் அப்பிள்ளை ஒரு புதிய சூழலுக்குள் நுழைகின்றது. இந்நிகழ்வு பிள்ளைக்கு நெருக்கீட்டைக் கொடுக்கலாம். அல்லது இடம்பெயர்வுகள் மூலம் சொந்த வீடுவாசல், சொத்துக்கள், உரித்தானவைகள் யாவற்றையும் விட்டு, வசதிகள் அற்ற புதிய இடத்தில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போதும் நெருக்கீடு ஏற்படலாம்.

பிரச்சினைக்கு முகம் கொடுத்தல் எனும்போது - தந்தை தினமும் மது போதையில் வீட்டிற்கு வந்து மனைவி பிள்ளைகளை துன்பப்படுத்தும் சந்தர்ப்பங்களில் அக்குடும்ப அங்கத்தவர்கள் நெருக்கீட்டிற்கு உள்ளாகின்றனர். அல்லது ஏதோ ஒரு வகையில் ஒருவர் இன்னொருவரால் உயிர் ஆபத்து, அச்சுறுத்தல் உண்டு என உணர்வதன் மூலம் நெருக்கீடானது தோற்றுவிக்கப்படலாம். இவ்வாறாக புதிய சூழல், பிரச்சினை ஆகிய இரண்டிற்கும் முகங்கொடுக்க முடியாத சந்தர்ப்பங்களில் நெருக்கீடு ஏற்படுகின்றது.

குடும்பப் பிரச்சினைகள், பணம், வேலை, நாம் அன்பு செய்பவர்கள், எமது சுகவாழ்வு பற்றி நாம் மிகவும் அக்கறையும், சிலவேளை கவலையும் கொண்டிருக்கின்றோம். இவைகள் எமக்கு நெருக்கீட்டை ஏற்படுத்தலாம். தொடர் இழப்புக்கள், பிரிவுகள், வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்கள் யாவும், இறைவன் ஏன் எனக்கு இப்படிச் செய்கின்றார் என ஒருவர் ஆதங்கப்படும்போது ஆன்மீக வாழ்வும்கூட ஒருவருக்கு நெருக்கீட்டைத் தோற்றுவிக்கலாம்.

இவ்வாறாக நெருக்கீடு பல வடிவங்களில் ஏற்படுகின்றன. ஆண்களும், பெண்களும் நெருக்கீடுகளை அனுபவிக்கும் விதத்தில் வேறுபடுவதாகக் கூறப்படுகின்றது. "ஆண் ஒரு நேரத்தில் ஒன்றைப்பற்றியும், பெண் ஒரு நேரத்தில் பலதைப் பற்றியும் கவலை கொள்வாள்" என றொனால்ட் கெல்ஸர் கூறுகின்றார்.

நெருக்கீடானது அன்றாடம் சிறிய அளவில் எல்லோரும் அனுபவிக்கும் ஒன்றாக இருப்பினும் போரினால் அல்லது இயற்கை அழிவினால் உயிரிழப்புக்களும், கடுமையான தாக்கங்களும் ஏற்படுகின்றன. இவை பாரிய நெருக்கீட்டுச் சம்பவங்கள் எனப்படுகின்றன. சாதாரண நெருக்கீடோ அல்லது பாரிய நெருக்கீட்டுச் சம்பவமோ ஒருவரில் உடல், உள, நடத்தையில் மாற்றத்தை அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்றன. முதலில் உடலில் ஏற்படும் மாற்றங்களாக தலையிடி, வயிற்று நோ, வயிற்றுப் போக்கு, களைப்பு, சோர்வு, தசை இறுக்கம், பசியின்மை, மாதவிடாய்க் கோளாறுகள், பாலியல் நாட்டம் குறைதல், போன்றவற்றைக் கூறலாம்.

உடலில் ஏற்படுகின்ற மாற்றங்களை மெய்ப்பாட்டு அறிகுறிகள் என்கின்றோம். இவை பெரும்பாலும் நெருக்கீட்டின் விளைவாகவே ஏற்படுகின்றன. நெருக்கீட்டைக் குறைக்கும், நிவர்த்தி செய்யும் வழிவகைகளை மேற்கொண்டு இவற்றைக் கட்டுப்படுத்தலாம். உதாரணமாக ஒரு பிள்ளைக்கு பாடசாலை செல்லும் நேரம் வரும்போது வயிற்றுப் போக்கு அல்லது தலைவலி ஏற்படுகின்றதெனில் அம்மெய்ப்பாட்டறிகுறிக்கும் பாடசாலையில் அப்பிள்ளைக்கு ஏற்பட்ட ஏதோ ஒரு சம்பவத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டும். அதனை ஆய்வு செய்து அப்பிள்ளையின் பிரச்சினையைத் தீர்க்கும்போது நெருக்கீடானது தணிக்கப்பட்டு பிள்ளையின் மெய்ப்பாட்டறிகுறி நீங்கிவிடுகின்றது.

அடுத்து மனதில் ஏற்படும் மாற்றங்களாக கோபம், கவலை, விரக்தி, சினம், பயம், பதீகளிப்பு, ஏக்கம், குற்ற உணர்வு, மனத்தை ஒரு நிலைப்படுத்த முடியாத பல்வேறு நிலைகளைக் குறிப்பிடலாம். மூன்றாவதாக நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை நோக்கின் ஒதுங்கியிருத்தல், மூர்க்கத்தனம், கதை குறைவு, நித்திரைக் குழப்பம், தனிமை நாட்டம், இலகுவில் அழுதல், படுக்கை நனைத்தல், தன்னைத் துன்புறுத்தல், பின்வாங்குதல் என்பவற்றைக் கூறலாம்.

சாதாரணமாகக் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு, நல்ல பெறுபேறுகளை ஒவ்வொரு வகுப்பிலும் பெற்ற பிள்ளை திடீரென அல்லது படிப்படியாக மேற்கூறப்பட்ட உடல், உள, நடத்தை மாற்றத்தைக் காட்ட முற்படுமாயின் அப்பிள்ளை ஏதோ ஒரு வ்வகையில் நெருக்கீட்டிற்குள்ளாகி வருகின்றது எனக் கூறலாம். இவ்வேளையில் பிள்ளையைக் கரிசனையுடன் அணுகி, உதவும் மனப்பான்மையுடன் நெருக்கீட்டிற்கான காரணங்களை அறிந்து அதனை நிவர்த்தி செய்யும்போது மீண்டும் அப்பிள்ளையைப் படிப்படியாக முன்னைய நிலைக்கு இட்டுச்செல்ல முடியும்.

மனித உள்ளமானது ஒரு வினாடியில் நெருக்கீட்டிற்கு உட்படக் கூடியது. எனவே குழந்தைகளைப் பராமரிக்கும் பெற்றோரும், மாணவர்களைக் கற்பித்து வழிநடத்தும் ஆசிரியர்களும், மக்களுக்கு சேவைசெய்துவரும் அதிகாரிகளும், அலுவலர்களும் மனித உள்ளங்களையும் புரிந்து, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கலாம். நாம் மற்றவருக்கு எம்மால் நெருக்கீடு ஏற்படாதவாறு செயற்படலாம்.

சாதாரணமாக அன்றாடம் எமக்கு ஏற்படும் நெருக்கீடுகளை எமது அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களுடன் உரையாடி, ஆலோசித்து தீர்த்துக்கொள்ள முடிகின்றது. ஆனால் பாரிய நெருக்கீட்டிற்கு உட்பட்ட ஒருவர் அதிலிருந்து விடுபட ஒரு உளவளத் துணையாளரின் (Counsellor) உதவியை நாடி நெருக்கீட்டின் சுமைகளைக் குறைத்துக்கொள்ளலாம். அன்றேல் உள வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெறலாம்.

மேலும் எமக்கேற்படும் நெருக்கீடுகளில் இருந்து விடுபட பல வழிவகைகளை நாம் கைக்கொள்ளலாம். இறைவன் எம்முடன் இருக்கின்றார் என்ற உணர்வுடன் இறை பிரசன்னத்தில் செபம், தியானம், ஞான நூல் வாசிப்பு என்பவற்றில் ஈடுபடும்போது எம்மைத் தளர்வுநிலைக்குக் கொண்டுவர முடியும்.

இறை அமைதியை எம் உள்ளத்துள் கொண்டுவரும்போது



நெருக்கீட்டு நிலையில் இருந்து நாம் விடுபட முடியும். "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள். நான் உங்களை இளைப்பாற்றுவேன்" என்கிறார் இயேசு. எனவே எம் சுமைகள், வேதனைகள், துன்பம், மன அழுத்தங்களை அவரின் பிரசன்னத்தில் அமர்ந்து சமர்ப்பிக்கையில் நாம் எம்முள் அமைதியையும், மகிழ்வையும் காணலாம்.

தினம் தினம் வேலைப் பளுக்களில் மூழ்கிடாவண்ணம் சில நிமிடங்களாவது ஓய்வெடுக்கும் வகையில் இறைவனின் படைப்பாகிய இயற்கைக் காட்சிகளைப் பார்த்து இரசித்தல், உலாவுதல், இனிய புத்தகங்களை வாசித்தல் என்பன ஊடாக மனத்திற்கு இதமான உணர்வுகளைக் கொடுத்து எம் ஏக்கம், அங்கலாய்ப்புக்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

மது மற்றும் போதைப்பொருட்களின் பாவனையைவிட்டு, நல்ல ஆரோக்கியமான உணவுகளை உட்கொண்டு, உடற்பயிற்சி மற்றும் யோகாசனங்களில் ஈடுபடும்போது நெருக்கீட்டைக் குறைத்துக் கொள்ளலாம். தேவையற்ற கற்பனைகளை விடுத்து உண்மை நிலையினைக் காண முயற்சிக்க வேண்டும். சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் எம்மை நெருக்கீட்டிற்கு உள்ளாக்காதபடி எமக்குள் மகிழ்ச்சியைக் காண இறைஞானத்தை வேண்டி மன மகிழ்வுடன் வாழ முயற்சிக்க வேண்டும். நெருக்கீட்டை வழிபாட்டு முறைகளூடாகவும் கட்டுப்படுத்தலாம்.

நெருக்கீடுகள் ஏதோவொருவகையில் எல்லோருக்கும் ஏற்படலாம். நெருக்கீடுகள் இயல்பானவை. அவற்றை நல்ல முறையில் அணுகி, கையாளும் முறைகளை மேற்கொண்டு ஆரோக்கியமாக வாழ்வோம். ●

---

### நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

- மன்னா நிர்வாகம் -

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 65

## நெகேமியா 1 - 6

உங்கள் விடைகளை 20. 10. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | 03 | | 04 | | | | ★ | |
| | | | | 05 | | 06 | | | 07 | |
| | 08 | | | | | ★ | | | | |
| | | | | | 09 | | | | | |
| ★ | | | | 10 | | | | | | |
| | | 11 | | | | | | 12 | ★ | |
| | | | 13 | | | | 14 | | | |
| | 15 | | | | 16 | | | | ★ | |
| | | | | 17 | | 18 | | | | 19 |
| 20 | | | | ★ | 21 | | | | | 22 |

### இடமிருந்து வலம்

1. அடிமைத்தனத்திற்குத் தப்பித்துக்கொண்டு அம்மாநிலத்தில் உயிரோடிருப்பவர்கள் பெருந்துயரம் .................... அடைகிறார்கள்.
3. இது .................................. அன்றி வேறொன்றுமில்லை.
6. மக்களும் பணி ........................ முழு உள்ளத்துடன் ஈடுபட்டனர்.
8. இவ்வாறு அவர்கள் நமக்காக ................. காவலும், பகலில் வேலையும் செய்வார். (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
9. மற்றப் பாதிப்பேர் ஈட்டி, கேடயம், வில், மார்புக் கவசம் இவைகளை .................... கொண்டு நின்றனர்.
11. என்னை அச்சுறுத்த முயன்ற ........................ இறைவாக்கினர்களையும் மறந்து விடாதேயும்.
14. நற்பணி செய்யத் தங்களைத் .................. செய்துகொண்டனர்.
16. அவருடைய ஊழியர்களாகிய நாங்கள் .................. வேலையைத் தொடங்கப் போகிறோம். (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
20. இஸ்ரயேல் மக்களாகிய நாங்கள் உமக்கு ....................கச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிறேன்.

### மேலிருந்து கீழ்

1. உங்களுக்கு எருசலேமில் பங்கில்லை, உரிமையில்லை, நினைவுச் .................... இல்லை என்றேன்.
2. சபாயின் மகன் பாருக்கு அந்த மூலையிலிருந்து பெரிய குரு எலியாசின் வீட்டு ................. பழுது பார்த்தார்.
3. ஆனால் "ஒரு நரி அதன்மேல் ஏறிச்சென்றால்கூட அந்தக்கல் ......................... இடிந்து விழும்" என்று ஏளனம் செய்தான்.
4. அவருடைய ஊழியர்களாகிய நாங்கள் கட்டட..................த் தொடங்கப் போகிறோம்.
7. எப்பொழுது நீ ......................... வருவாய்?
8. அவர்களிடமிருந்து காத்துக்கொள்ள ...................... பகலும் காவலர்களை அமர்த்தினோம்.
9. நாட்டில் அவர்கள் .......... களாகிக் கொள்ளையடிக்கப் படட்டும்.
11. இம்மக்களுக்கு நான் செய்த எல்லா நன்மைகளுக்கும் .......................... எனக்கு ஆதரவாயிரும்.
13. பெத்தக்கரேம் மாவட்டத்தின் ஆளுநரும் ..................... பின் மகனுமான மல்கியா குப்பைமேட்டு வாயிலைப் பழுது பார்த்தான்.

### வலமிருந்து இடம்

2. உம் ஊழியரான மோசேக்கு நீர் அளித்த ................... நினைவு கூர்ந்தருளும்.
3. இவர்கள் எருசலேமின் பெரிய ...................... வரை புதுப்பித்தார்கள்.
5. கெயிலா மாவட்டத்தின் மறு ...................... ஆளுநரும் ஏனதாக்கின் மகனுமான பல்வாயும் பழுதுபார்த்தார்.
9. கடவுளின் ............................. என்னோடு இருந்ததால் மன்னரும் அவ்வாறே கொடுத்தார்.
10. இதுவரை நான் ........................ வாயில்கள், கதவுகள், அமைக்கவில்லை.
11. நாங்கள் நிலம் .................. வாங்கிச் சேர்க்கவில்லை (2வது எழுத்து 3வதாக உள்ளது)
17. ஏனெனில் யூதாவில் பலர் அவனுக்கு .................... தந்திருந்தார்கள்.
19. ஏனெனில் ...................... நம் கடவுளின் உதவியால் நிறைவேறியது என்று கண்டனர்.
22. மேலும் நான் ............................ விண்ணகக் கடவுளின் முன் மன்றாடினேன்.

### கீழிருந்து மேல்

5. அப்பொழுது நான் மன்னருக்குப் .................. பரிமாறுவோனாக இருந்தேன்.
12. எக்காளம் ....................... என் அருகிலேயே இருந்தான் (குழம்பியுள்ளது)
14. அவர்கள் கைகள் வேலை செய்வதில் ....................... விடும்.
15. மேயா காவல் ........................... வரையும், அனனியேல் காவல் மாடம் வரையும் அர்ப்பணம் செய்தனர்.
17. எனவே நாங்கள் உண்டு உயிர் .................... பொருட்டு எங்களுக்குத் தானியம் கிடைக்கும்படி செய்யும்.
18. என்னை அச்சுறுத்தும்படி தோபியா ....................... அனுப்பிக் கொண்டிருந்தார்.
19. நாம் கடவுளின் ......................... கோவிலின் உள்ளே சந்திப்போம்.
20. எல்லாத் திரைகளிலிருந்தும் நம்மை ........................ வருகிறார்கள் என்று அறிவித்தனர்.
21. பல நாள்கள் ............................ கொண்டாடினேன்.


## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவில் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள். எமது வங்கி இலக்கம் : The Editor - MANNA. S/A No.02-1678001-5

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**
உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)



## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
St. Joseph's Catechetical Centre,
St. Sebestian's Cathedral Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர். - மன்னா
புனித வளன் மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2222377


# உளங்கனிந்த பிறந்தநாள் வாழ்த்து



## லுஷானிக்கா

**19.10.2007**

மன்னார் ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி. றொபின்சன், நந்தீஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி லுஷானிக்கா தனது 2வது பிறந்த நாளை 19.10.2007 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடவுள்ளார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னை வேளாங்கன்னியின் அருள்பெற்று சகல கலைகளிலும் சிறந்தவளாய் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றார்கள்.

*தகவல்: திரு. திருமதி. றொபின்சன் தம்பதிகள்*
*ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.*

# உலகைக் கலக்கும் ஹாரிபொட்டர் ....

*(11ம் பக்கத் தொடர்ச்சி....)*

அடுத்த நாவலில் என்ன நடக்கும்? மீண்டும் பொட்டர் வருவானா என்ற எதிர்பாப்பினை ஏற்படுத்தி விடுகிறார் ரவுலிங்.

இந்த நாவல்களெல்லாம் திரைப்படமாக்கப்படுகின்றன. இப்போதுதான் ரவுலிங்கின் 'ஹாரிபொட்டரும், பினிக்ஸ் அமைப்பும்' என்ற நாவல் திரைப்படமாக்கப்பட்டு வெளிவந்திருக்கின்றது. திரைப்படங்களும் சக்கைப்போடு போடுகின்றன. இப்போது ஏழாவது நாவல் வெளிவருகின்றது. இதுதான் கடைசி நாவல் என்று ரவுலிங் அறிவித்துவிட்டார். இந்த நாவலில் ஹாரிபொட்டர் இறந்துவிடுவானா? என்ன சாகசங்கள் செய்யப்போகின்றான்? இந்த எதிர்பார்ப்பே ரவுலிங்கின் வெற்றிக்குக் காரணமாக அமைகிறது.

இந்த நாவல்களில் இலக்கியத் தரம் எதுவுமில்லை. ரவுலிங்கின் நடைகூட சிறப்பானதாக இல்லை என்று இலக்கிய அறிஞர்கள் கருதுகின்றார்கள். எனினும் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்ச்சிகளையும் பாத்திரங்களையும் வைத்துக்கொண்டு இந்தப் பத்தாண்டுகளாக உலகத்து வாசகர்களையெல்லாம் தன் பக்கம் ஈர்த்துவிட்டார் ரவுலிங்.

'மேஜிக்ரியலிசம்' எனப்படும் கற்பனை கடந்த யதார்த்தம் ஓர் இலக்கிய உத்தி. நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் காப்ரியல் மார்கோஸ் இந்த உத்தியைப் பயன்படுத்தினார். ஆனால், அந்த யுத்தியை ரவுலிங் பின்பற்றுகிறார் என்று கூற இயலாது. ஏனெனில் மேஜிக்ரியலிசத்தில் இயற்கையான சூழலில் நம்ப முடியாத இயற்கைக்கு முரணான நிகழ்வுகள் சிலவே இருக்கும். ஆனால் ரவுலிங் நாவல்களில் முழுக்க முழுக்க நம்ப முடியாத கதைகள்.

எது எப்படி இருந்தாலும் ஆங்கில எழுத்தாளர் ரவுலிங்கின் கதையையும், வாசகர் எண்ணிக்கையையும் யாரும் இன்று மிஞ்ச முடியாது.

தமிழில் ஏன் சிறுவர்களையும், இளையோரையும் கவரும் எழுத்துக்கள் இல்லை? எழுத்தாளர்கள் இல்லை? ரவுலிங்கின் கதைகள் வாயிலாக 'நல்லது வாழும், தீயது வீழும்' என்ற கருத்தாவது மக்கள் மத்தியில் பதிகிறது.

இத்தகைய எளிய கருத்தை உள்ளடக்கிய இளைஞர் இலக்கியத்தை தமிழ் எழுத்தாளர்கள் படைத்திட முன்வர வேண்டாமா? வாசிக்க நல்ல நூல்கள் இல்லாததால்தானே நமது இளையோர் தொலைக்காட்சிப் பெட்டிக்கு அடிமைகளாக ஆகிறார்கள்? குழந்தைகள், சிறுவர்கள், இளையோர் என்று ஒவ்வொரு நிலையினருக்கும் தகுந்த நூல்கள் வெளிவருதல் அவசியம். ●

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 63ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**

**முதலாம் பரிசு:**
அ. கரோலின் கீர்த்திகா
70, பேராலய வீதி,
திருகோணமலை.

***இரண்டாம் பரிசு:***
ஜே. கமலஸ்ரீனா
ஜீ. ஆர். 19
உயிர்த்தராசன்குளம்.

***மூன்றாம் பரிசு:***
கெ. டிலக்சன்
சிறுத்தோப்பு,
பேசாலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 99 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 92 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.63ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

# பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. திருமதி. பி. வி. சி. பேரின்பநாயகம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
2. அ. தர்சினி தற்குரூஸ், தரவன்கோட்டை, மன்னார்.
3. மா. ஞானசவுந்தரி, யோசப்வாஸ்நகர், தோட்டவெளி, மன்னார்.
4. அ. யஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
5. அருட்சகோதரி. எம். பற்றீசியா, றம்பாவ, அநுராதபுரம்.
6. சிறகுடைந்த இளம்சிட்டு, தோட்டவெளி, மன்னார்.
7. இ. யூஜின் றொகானி டயஸ், கற்குழி, வவுனியா.
8. செ. இன்வென்ரா டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
9. எஸ். மறிஸ்ரெலா, முத்தரிப்புத்துறை.
10. யோ. யோண்தாசன் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
11. பி. ஜே. அஜந்தன், எழுத்தூர், மன்னார்.
12. செ. ஆன். நியூசிக்கா தூரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
13. யோ. மேரிசவேரினா லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
14. பி. ஜே. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
15. யே. யோண் பிறிற்றோ லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
16. அ. இசைக்கியேல், யோசவ்வாஸ்நகர், தோட்டவெளி.
17. அ. வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்
18. திருமதி. வசந்தி சத்தியசீலன், எழுத்தூர், மன்னார்.
19. அ. சுபாஜினி, கனகராயன் குளம் தெற்கு, வவுனியா
20. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்
21. கத்தரின் சேவியர், பெரியகடை, மன்னார்.
22. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
23. தேவிகா பத்மராசா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
24. டொ. யாழினி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
25. இ. டயாழினி, பெரியகடை, மன்னார்.
26. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
27. கெ. அஜந்தன், சிறுத்தோப்பு, பேசாலை.
28. சி. சௌமியா குரூஸ், தலைமன்னார் கிராமம்.
29. றீ. அபிநயா, ஜே. ஆர். எஸ். வீட்டுத்திட்டம், தலைமன்னார்.
30. யூட் மாலா, எமில்நகர், மன்னார்.
31. அ. அனுஷா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
32. இ. யசோதா, மகளீர் கூட்டுவிடுதி, வவுனியா.
33. வதனி பெனாண்டோ, மில்லேன், மட்டக்களப்பு.
34. கி. சுஜா, பட்டாணிச்சுருள், வவுனியா.
35. ம. லிர்த்திக்கா, தலைமன்னார் கிராமம்.
36. வி. மனோஜ் டலிமா, கொழும்பு 13
37. ஏ. செகான், கொழும்பு 13
38. சுறெஸ் தேவி, எழுத்தூர், மன்னார்.
39. அ. ரூபா, பனங்கட்டுக்கொட்டு, மன்னார்.
40. எம். சிவா, முருகன் கோவிலடி, பேசாலை.
41. வெ. சீலி பீரிஸ், தலைமன்னார் கிராமம்.
42. ச. றீற்றம்மா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
43. ச. எட்னா, சிறுத்தோப்பு, பேசாலை.
44. பிலிப் அயோமி, கொழும்பு- 11
45. ஜே. லதா, சின்னக்கரிசல், பேசாலை.
46. ஏ. தனுஷன், பேசாலை.
47. யசிந்தா, சின்னக்கரிசல், பேசாலை.
48. கி. மாயா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
49. தயாளினி, உப்பளம், மன்னார்.
50. ல. லபிசாந், கொன்வென்ற் றோட், மன்னார்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 63 இற்கான சரியான விடை

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தா[1] | ரா | ள | மா | க | ❋ | க | யா | மை | ய் | தூ[2] |
| க | க் | ளி | தெ[3] | ம் | க | க் | ஊ[4] | ய | ❋ | ப |
| த் | தே[5] | ரி | ல் | யு | யா | கு | க் | டை | ஆ[6] | மி |
| தா | ய | கி | ஆ[7] | ளை | மை | ளு | கு | னு | ர் | ட |
| லு | ❋ | ❋ | ற் | டை | சு[8] | க | வி | ற | வ | வு |
| ம் | ன | சி[9] | ற | ஓ[10] | பே | லை | ❋ | தி[11] | ம் | ம் |
| ரு | ம் | லு | ளா | க | லை | சி[12] | லை | க[13] | ளை | று |
| ல | வெ[14] | ளி | யே | ற் | ற | ன | ம[15] | ல | றை | வு |
| வ | ❋ | கு[16] | ற் | ற | ம் | த் | க | ன் | மு | ழி |
| லு | பா[17] | ர் | வை | யி | ல் | தோ | ளி | லை | ழி | அ[18] |
| அ[19] | மை | தி | யு | ட | ன் | டு | ல் | ❋ | வீ[20] | ❋ |

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.64ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு ஒக்டோபர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

# மன்னா

## "மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்"

# நூல் வெளியீட்டு விழா




அமலமரித் தியாகிகள் துறவற சபையைச் சேர்ந்தவரும், முருங்கன் மண்ணின் மைந்தனுமாகிய அருட்பணியாளர் செபமாலை அன்புராசா (அ.ம.தி.) அவர்களின் **"மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள்"** என்ற நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் 3ம் திகதி (03.09.2007) மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இதற்கு முதன்மை விருந்தினராக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களும், சிறப்பு விருந்தினராக அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்பணி. எம். செல்வரெட்ணம் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நூலின் முதல்பிரதியை நூலாசிரியரின் தாயார் திருமதி. செபமாலை றோஸ்மேரி அவர்கள் மன்னார் ஆயரிடமிருந்து பெற்றுக்கொண்டார். நூலிற்கான வெளியீட்டுரையை அருட்பணி. எஸ். பொன்சியன் அவர்களும், ஆய்வுரையை முசலி கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். டேவிட் அவர்களும் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து ஆயரின் ஆசியுரையும், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. நூலாசிரியரின் ஏற்புரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது. இந்நூல் ஒன்றின் விலை ரூபா 200.00 மன்னார் மறைக்கல்வி நிலையத்திலுள்ள வளனகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 30 . 08 . 1984

உதிர்வு 06 . 10 . 2006

### செல்வி. மாட்டீனா ஜெனிபர்

(துளசி)

"சீவியத்தில் உம்மை நேசித்தோம், மரணத்திலும் உம்மை மறவோம்"

**உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.** (யோ.11:26)

வருடமது கடந்தாலும் மறையவில்லை உம் நினைவு எம் மனங்களில்
குடும்பத்தின் குலவிளக்காய், அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்,
பொறுமைக்குப் பூமியாய், அமைதிக்கு ஒரு சிலையாய்,
அன்புள்ளம் கொண்ட மகளாய், பாசத்தின் சகோதரியாய் வாழ்ந்த நீ
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றாயே!
உன் மதிவதனமும் நினைவலைகளும் எம்மை விட்டு
என்றுமே அகலாது

என்றும் உம் நினைவுகளுடன்
அம்மா, அப்பா, சகோதரி, அத்தான், உற்றார், உறவினர்கள்

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 25 . 12 . 1921

உதிர்வு 02 . 09 . 2006

### சவிரி சந்தியோகுப்பிள்ளை இராஜதுரை

(சகாயவீதி, அடம்பன்)

அன்பே உருவான எமது ஐயா!
நீங்கள் எம்மை விட்டுச் சென்று ஆண்டுகள் ஒன்று ஆனதோ
எம்மையெல்லாம் அன்புடன் அணைத்து
அறிவோடு, நற்பண்புகள் ஊட்டி நண்பனாய், தந்தையாய்
நீங்கள் எமது வாழ்வுப் பயணத்தில் நடந்து வந்த
இனிய நல்நினைவுகள், எம் இதயங்களில் என்றும் நீங்காது
நிறைந்து நிற்கின்றது. உமக்காக மட்டும் வாழாது, பொதுப்பணியும்,
இறைப்பணியும் செய்து இல்வாழ்வில் இன்புற்று,
பொதுவாழ்வில் மகிழ்வுற்று, இறைவாழ்வில் நிறைவடைந்தாயே.
என்றென்றும் இறைவனிடம் மன்றாடும் எமக்காய்.
பிறப்பவன் என்றோ ஓர்நாள் இறப்பது வாழ்வின் நியதி என்றாலும்
உம் பிரிவின் துயரம் உள்ளத்தில் முள்ளாய் உறுத்துதே ஐயா!

உங்களை நினைத்து
மனைவி, பிள்ளைகள்.

# மன்னா

**மன்னார் மறைமாவட்டத்தின்**
**தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை.**

## மன்னாவை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 400ஐயும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 2000ஐயும் (20 யூரோ) அனுப்பவும். சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின்

வங்கியின் பெயர்: Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர்: The Editor - MANNA
வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No.02-1678001-5
என்று குறிப்பிடவும்.

உங்கள் ஆன்மீகப் பசிக்கு உணவாக - உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையில் மன்னா இன்னும் புதிய அம்சங்களுடன் புதுமெருகுடன் தொடர்ந்து வெளிவரும்.

# நினைவஞ்சலி

## 1ம் ஆண்டு



மலர்வு 29 . 02 . 1928

உதிர்வு 06 . 10 . 2006

### திருமதி. திரேசம்மா சேவியர் குமாரசிங்கம்

## 22ம் ஆண்டு



மலர்வு 11 . 10 . 1923

உதிர்வு 21 . 05 . 1985

### திரு. மனுவேற்பிள்ளை சேவியர் குமாரசிங்கம்

(கங்காணிதீவு, நானாட்டான்)

அன்பின் உறைவிடங்களே, பாசத்தின் ஒளிவிளக்குகளே, உங்கள் அன்பை விட்டுச்சென்ற எங்கள் குடும்பத்தின் குலக்கொழுந்துகளே, வருடங்கள் ஒன்றோ, இருபத்திரண்டுகள் மறைந்தாலும், அன்பும், பாசமும், வழிகாட்டலும், நற்போதனையும், உங்கள் நினைவுகளும் எம் நெஞ்சங்களை விட்டு நீங்காதம்மா, நீங்காதய்யா!

இவர்களின் ஆன்ம சாந்திக்காக 06.10.2007 சனிக்கிழமை அன்று காலை 6.00 மணிக்கு நானாட்டான் புனித ஆரோக்கியமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்களின் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

# இறை அழைத்தல்



என் இனிய இளைஞனே!

அமைதி வாழ்வில் அழைப்பின் சுவை காண செபமாலைதாசர் துறவற சபையோரிடம் இருந்து உனக்கோர் அன்பான அழைப்பு!

சவால்கள் நிறைந்த உன் வாழ்வுக்கு ஆழமானதோர் அர்த்தம் கொடுக்க! இறைவனை மௌனத்தில் சந்தித்து செபத்திலும், உறுதியான தியானத்திலும், பரிகார வாழ்விலும் உன்னைக் காணிக்கையாக்கி பாவத்தில், பொறாமையில், போரில், பல்வேறுபட்ட அடிமைத்தனங்களில் சிக்குண்டு தவிக்கும் இந்த உலகிற்கும், எமது நாட்டிற்கும் செப வாழ்வினால் விடுதலை அளிக்க உனக்கு ஓர் வாய்ப்பு!

நில், நிதானி, இறைவனின் குரலுக்கு செவிகொடு. வந்துபார், முடிவெடு!

**தொடர்புகளுக்கு**
**இறை அழைத்தல் ஊக்குனர்கள்**

1. Rev. Fr. Vocation Promoter,
   Rosarian Regionalate,
   Jepamala Rajini Sevana,
   Kochchikade.

2. Rev. Fr. Vocation Promoter,
   Arul Ashram,
   5, Temple Road,
   Jaffna.

3. Rev. Fr. Vocation Promoter,
   Rosary Ashram,
   Mathavawaithakulam,
   Vavuniya.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது